22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397

www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 | பாலம் 21 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 01, 2012

# சான்டி சூறாவளியின் சண்டித்தனம்

அமெரிக்காவில் 17 மாகாணங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தி, 62 உயிர்களை பலிவாங்கி, 8.5 மில்லியன் மக்களை மின்சாரம் இல்லாமல் தவிக்கவைத்து, பல்லாயிரக்கணக்கானவர்களை வீடின்றி அலையவைத்த ‘சான்டி’ என பெயரிடப்பட்ட சூறாவளி ஒக்ரோபர் 30, 2012 இல் தனது கொடூரத்தை அடக்கி மழையாகத் தொடர்கிறது.

இதில் பெரும் அழிவு நியூயோர்க் மாநிலத்திற்கே. நியூயோர்க் மாநிலத்தில் மட்டும் 2 மில்லியன் மக்கள் மின்சாரம் இன்றி இருக்கிறார்கள். பல நகரங்கள் முற்றாக நீரில் மூழ்கிக்கிடக்கின்றன. மான்காற்ரன் நகரில் ஏழு நிலக்கீழ் புகையிரத பாதைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. IHS Global Insight என்ற மதிப்பீடு செய்யும் நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி $20 பில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்துள்ளன. $30 பில்லியன் வரையிலான வியாபாரம் நட்டம் அடைந்துள்ளது. பெரும்பாலான அழிவுகள் காற்றாலும், கடலில் இருந்து வந்த வெள்ளாத்தாலுமே ஏற்பட்டன. மிச்சிக்கன் வாவியில் அலைகள் 6.1m உயரத்திற்கு எழுந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வீசிய சூறாவளியின் அதிகூடிய வேகம் 225/கி.மீ மணியாக இருந்தது.

சான்டி சூறாவளி அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஆரம்பித்து கரிபியன் நாடுகளினூடாகவே அமெரிக்கா நோக்கி வந்தது. இது கரிபியன் நாடுகளில் 70 உயிர்களை பலிவாங்கியது. சான்டி சூறாவளியால் கனடாவில் ஒன்ராறியோ, குவிபெக் மற்றும் கிழக்குக்கரையோர மாகாணங்களில் பலத்த காற்றும் மழையும் ஏற்பட்டன. ரொறொன்ரோவில் Staples கடையின் பெயர் பலகை சூறாவளிக் காற்றால் பிடுங்கி வீசப்பட்டபோது 50 வயது பெண் ஒருவரும் சானியாவில் சூறாவளி யால் ஏற்பட்ட சேதங்களைத் திருத்தும் போது மின்சாரத் தொழிலாளி ஒருவருமாக இருவர் கொல்லப்படடுள்ளனர். இதைத் தவிர வேறு எந்த உயிர்ச் சேதமும் கனடாவில் சான்டி சூறாவளியால் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. ஒன்ராறியோவில் 150,000 வீடுகளும் குவிபெக் மாகாணத்தில் 50,000 வீடுகளும் நோவாஸ்கோசியா மாகாணத்தில் 14,000 வீ டு க ளு ம



தொடர்ச்சி 03ஆம் பக்கம்

# துணைவரை ஸ்பொன்சர் செய்ய புதிய விதிமுறை!

திருமணத்திற்காக துணைவரை கனடாவிற்கு ஸ்பொன்சர் செய்து அழைத்தால் அவருடன் குறைந்தது இரண்டு வருடங்கள் சேர்ந்து வாழவேண்டும். அவ்வாறு சேர்ந்து வாழ்ந்த பின்னரே கனடாவிற்கு அழைக்கப்பட்ட துணைவருக்கு “நிரந்தர வதிவிட உரிமை” (Permanent Residency) வழங்கப்படும். இப்புதிய நடைமுறை ஒக்டோபர் 26, 2012 இல் இருந்து அமலுக்கு வருகிறது.

இவ்விதிமுறை சிறப்பாக புதிதாக திருமணம் செய்து வரும் தம்பதிகளுக்கு அல்லது திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆதல் முடியாத தம்பதிகளுக்கு அல்லது பிள்ளைகள் இல்லாத தம்பதிகளுக்கு, ஒருவர் தமது துணைவரை கனடாவிற்கு ஸ்பொன்சர் செய்யும் போது அமல்படுத்தப்படுகின்றது. தற்போது கனடாவில் குடியுரிமை பெறுவதற்காக நடைபெறும் போலித் திருமணங்களை இப்புதிய நடைமுறை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது நடைமுறையில் இருக்கும் குடிவரவு விதிகளின்படி புதிதாக திருமணம் செய்த ஒருவர் தனது துணைவரை ஸ்பொன்சர் செய்தால் அவர் கனேடிய விமானநிலையத்திற்கு வந்தவுடனேயே அவருக்கு “நிரந்தர வதிவிட உரிமை” வழங்கப்படுகின்றது. இதனால் கனடாவிற்கு வர போலியாக திருமணம் செய்தவர்களை தடுக்க முடியாது இருக்கிறது. இதனாலேயே இப்புதிய நடைமுறை அமலாக்கப்படுகின்றது என கனேடிய குடிசார் மற்றும் குடிவரவு அமைச்சர் Jason Kenney தெரிவித்தார். இப்புதிய நடைமுறை மூலம் கனடாவிற்கு பு தி த ா க தி ரு ம ண ம

தொடர்ச்சி 03ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# KRIS

## REAL ESTATE SIGN POSE INSTALLER

**தமிழரின் நிர்வாகத்தில் செய்து கொடுக்கப்படும்.**




*Kris signs providers realtors sign installation to enhance your listings.*

Call Pirapa Shan - **416.509.1683**

via email - pirapashan@hotmail.com

---

**உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்**

**SASI CHELVARATNAM**

*Sales Representative*

Direct: 416.725.1125 / 416.858.4828

Bus : 416.321.6969

HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*

5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2

*Independently Owned & Operated



---

ON THE SPOT

**HOME INSPECTIONS INC.**

**Danny Sripath**, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist

416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca

No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

---



# சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**

**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

---

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED



**HomeLife/GTA Realty Inc.** Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 29, Mississauga - **905.712.2666**

---

Allstate
You're in good hands.

# Allstate Insurance Company Of Canada

## Home & Auto Insurance





**Suren Navaratnarajah**
**(Agent)**

**Cell: 416.520.6916**

**E-mail: snavaratnarajah@allstate.ca**

**4525 Kingston Road**
**Unit H5 Scarborough, ON M1E 2P1**

---

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

---

# வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# துணைவரை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்து வருபவர்கள் குறைந்தது. இரண்டு வருடங்கள் சேர்ந்து வாழவேண்டும். இரண்டு வருடங்களுக்குள் அவர்கள் பிரிய நேரிட்டால் கனடாவிற்கு ஸ்பொன்சர் செய்து வந்தவர் நாடுகடத்தப்படவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுவார். இதனால் பொருளாதார நன்மைக்காக கனேடிய சட்டங்களை தவறாக உபயோகிக்க முற்படுபவர்கள் தடுக்கப்படுகின்றனர் என்றார் அமைச்சர்.




இச்சட்டமூலம் இவ்வருட ஆரம்பத்தில் பிரேரிக்கப்பட்டபோது சில குடிவரவு சட்டதரணிகளால் விமர்சிக்கப்பட்டது. இச்சட்டமூலம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் துணைவரை அவர்களது திருமணபந்தத்தில் இருந்து விலக முற்படுவதை தடுத்து அவரை மேலும் சித்திரவதைக்கு உட்பட வழிவகுக்கின்றது என விவாதிக்கப்பட்டது. சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் துணைவர் தான் விவாகரத்து பெற்றால் நாடுகடத்தப்பட்டு விடுவேன் என பயந்து சித்திரவதைகளை அனுபவித்துக்கொண்டு இருக்கவேண்டிய நிலையை இச்சட்டமூலம் ஏற்படுத்துகின்றது என கூறப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் இவ்வாறான சித்திரவதைகள் அல்லது கவனிப்பாரற்ற நிலை ஒருவருக்கு ஏற்படுகின்றது என முறையீடு கிடைத்தால் அவர்களுடைய முறைப்பாடுகள் பிரத்தியேக மாக கவனிக்கப்படும் என்றார். இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகும் துணைவர் தமது நிலையை குடிவரவு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினால் அவ் அதிகாரிகள், இம்முறையீடு செய்தவர்களை இச்சட்டமூலத்தால் பாதிக்கப்படாமல் விசாரித்து முடிவுகள் எடுப்பார்கள். துணைவர்களால் பாதிக்கப் பட்டவர்கள் நிச்சயமாக இச்சட்டமூலத்தால் தண்டிக்கப் படமாட்டார்கள் என அமைச்சர் Jason Kenney உறுதியளித்தார்.

இது சம்பந்தமாக கருத்து தெரிவித்த குடிவரவு சட்டத்தரணியான ராஜ் சர்மா இச்சட்டமூலம் எவ்வாறு இருந்தாலும் திருமண வாழ்வில் துன்புறுத்தப்படும் துணைவர் சட்ட உதவி நாடுவதை தாமதப்படுத்தப்போகிறது என்றார். இதனால் அவர் சித்திரவதைக்கு உள்ளாகும் காலம் அதிகரிக்கின்றது என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் துன்புறுத்தப்படும் துணைவர் இரண்டு வருடத்துக்குள் விவாகரத்து பெற்றால் அவர் நாடுகடத்தப் பட மாட்டடர் என்பதை அரசு கனடாவிற்கு வரும் புதியவர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்தும் என நம்புவோம்.

இச்சட்டமூலம் தொடர்பாக கருத்து தெரிவித்த "குடிவரவு ஊழல்களுக்கு எதிரான கனேடியர்கள்" என்ற அமைப்பை சேர்ந்த திரு. சாம் பெனற் தாங்கள் இவ்வாறான ஒரு சட்டமூலம் அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என கடந்த ஐந்து வருடங்களாக அரசை வற்புறுத்தி வந்திருந்தோம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தனது மகன் ஸ்பொன்சர் செய்த பெண் கனேடிய விமான நிலையத்தில் வந்து இறங்கி நிரந்தர வதிவிட உரிமை பெற்றவுடனேயே தனது மகனை விட்டு தனியாக வாழச் சென்று விட்டார் என்றார். அத்துடன் அவர் தொடர்ந்து ஒருவருட காலம் பொதுநல உதவியும் பெற்றார். அரசாங்கம் அவர் ஒரு வருட காலம் பெற்ற பொதுநல உதவித் தொகையான $10,000.00 யையும் அவரை ஸ்பொன்சர் செய்த தனது மகனைக் கட்டுமாறு கேட்டுள்ளது என்றார். இவ்வாறு ஸ்பொன்சர் செய்யப்பட்டு கனடா வருபவர்களால் பாதிக்கப்படும் கனேடியர் களை அரசு பாதுகாக்க சட்டமூலம் கொண்டு வர வேண்டும் என கடந்த ஐந்து வருடங்களாக தானும் தனது அமைப்பும் முயற்சி எடுத்து வந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு திருமணத்தை வைத்து ஏமாற்றியவர்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிபரங்கள் அரசிடம் இல்லை. 2010ஆம் ஆண்டு மட்டும் திருமணம் செய்ய அல்லது திருமணம் செய்து துணைவரை ஸ்பொன்சர் செய்த விண்ணப்பங்கள் மட்டும் 46,300 ஆகும். அதில் 16% (7,400) விண்ணப்பங்கள் அரசால் சந்தேகத்திற்குரிய திருமணங்கள் என்று நிராகரிக்கப் பட்டுள்ளன. இப்படியான சட்டமூலம் ஏற்கனவே அவுஸ்ரேலிய அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.






# சாண்டி...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மின்சாரத்தை இழந்தன. இவற்றில் பெரும்பாலானவற்றிற்கு ஒக்ரோபர் 31, 2012இல் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டது. கனடாவில் சூறாவளியால் ஏற்பட்ட சேதம் $1 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. கனடாவில் வீசிய சூறாவளியின் அதிகூடிய வேகம் 106 கிமீ/மணி.

## இலங்கையிலும் புயல் - 'நிலம்'

வங்கக்கடலில் உருவான 'நிலம்' எனப் பெயரி டப்பட்டுள்ள புயலில் இருந்து இலங்கை தப்பியுள்ளது. முன்னதாக இந்தப் புயல் இலங்கையின் முல்லைத்தீவு வழியாக



ஒக்ரோபர் 30 காலை கரையைக் கடக்கும் என அறிவிக்கப்பட்டது. பின்னர், காங்கேசன் துறை அருகே மாலை கடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும், இலங்கைக்கு வடகிழக்கே 100 கி.மீ தொலைவில் இருந்த போது புயல் சின்னம் பாதையை மாற்றிக் கொண்டது. நிலம் புயல் தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்துள்ளதால், அதன் நேரடிப் பாதிப்பில் இருந்து இலங்கை தப்பியுள்ளது.

இதையடுத்து, கரையோரப் பகுதி மக்களுக்கு விடுக்கப்பட்ட பாதுகாப்பு எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளது. எனினும், இலங்கையின் வடக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது. கடும் காற்றும் மழையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த கடும் மழையை அடுத்து 5,583 குடும்பங்களைச் சேர்ந்த 19,785 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் தெரிவித்துள்ளார். மழை காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் கொக்குத் தொடுவாய், இரணைப்பாலை, முள்ளிவாய்க் கால், மந்துவில், மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம், திருமுறிகண்டி, சிராட்டிக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

வங்கக் கடலில் மையம் கொண்டிருக்கும் நிலம் புயலானது தென்கிழக்கில் இருந்து வடமேற்கு நோக்கி நகர்ந்து ஒக்ரோபர் 31 சென்னைக்கு தெற்கே கரையைக் கடக்கும். நாகை, கடலூர், ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தூத்துக்குடி துறைமுகங்களிலும் புயல் எச்சரிக்கை கூண்டுகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

## புயல்களுக்குப் பெயர் பிறந்த கதை

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதைத் தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்போது புயல்களுக்கும் பெயர் சூட்ட ஆரம்பித்து விட்டனர். ஆனால் இது இன்று நேற்று நடப்பதல்ல. கடந்த 1945ம் ஆண்டு முதலே புயல்களுக்குப் பெயர் சூட்டி வருகின்றனர்.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கேற்ப அந்தந்தப் பகுதிகளில் உள்ள நாடுகள் இணைந்து இ ந த ப

தொடர்ச்சி 11ஆம் பக்கம்


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# விரதங்கள் அவசியமா?



சத்குரு வாசுதேவ்

ஆன்மீகத்தின் பேரால் பலர் விரதமிருக்கிறார்கள். ஆன்மீகத்திற்கும், உணவுக்கும் என்ன சம்பந்தம் என்கிற கேள்வி இதில் எழும். உணவு, உடல் சார்ந்த விடயம்தான். ஆனால் இங்கே நீங்கள் வாழ உடலே அடிப்படை. துர்அதிர்ஷ்ட வசமாக, பலரும் கொடூரமான விரத முறைகளைப் பயன்படுத்தி உடலை வருத்திக் கொள்கிறார்கள். மனிதர்கள் எல்லாவற்றிலும் வெறித்தனமாக ஈடுபட்டு தங்கள் வளர்ச்சிக்கான படிகற்களையே தடைக்கற்களாக மாற்றிக் கொள்ள முற்படுகிறார்கள்.

ஒரு சிலர் உடலை அதீதமாக வருத்தி, அதனை சிறுமைப்படுத்துவதும், இன்னும் சிலர் உடலையே பிரதானப்படுத்தி அதனைத் தேவைக்கதிகமாகக் கொண்டாடுவதும் நடைபெறுகிறது. இரண்டுமே தேவை யில்லாதது. ஒவ்வொன்றுக்கும் உரிய இடத்தைத் தருகிற போதுதான் உங்களுக்குப் பயன்படும். மிகையான முக்கியத்துவமோ, சிறுமைப்படுத்துவதோ சீர்குலைக்கத்தான் செய்யும். உடல் என்பது எவ்விதத்திலும் சிக்கலில்லை என்கிற முறையில் உடலைக் கையாள வேண்டும்.

சத்சங்கத்தில், சரியான கேள்விகள் வருமாயின் அவற்றுக்கு விடிய விடிய பதிலளிக்க நான் தயார். ஏனெனில் உடல் எனக்கொரு பிரச்சினையில்லை. ஆனால் கேள்வி கேட்பவர்களுக்கு அப்படியில்லை. எல்லையின்மையில் விரிவடைவது பற்றி நான் பேசிக் கொண்டே போகலாம். கேட்கும் பலருக்கு, குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு உடலே வெடிப்பதுபோல் தோன்றும். உடலின் சில பகுதிகளாவது வெடிப்பது போல் தோன்றும். உங்கள் உள்ளம் அன்பால் வெடிக்காமல் இருக்கலாம். உங்கள் மனம் ஞானோதயத்தால் வெடிக்காமல் இருக்கலாம். ஆனால் உங்கள் உடலின் சில பாகங்கள் வெடித்துவிடுமோ என்று உங்களுக்குத் தோன்றலாம்.

பங்கேற்பாளர்களை விடவும் அதிகமாக நான் நீரருந்தியிருப்பேன். ஆனால் கழிப்பறைக்குப் போகும் அவசியம் எனக்குக் கிடையாது. ஏனெனில் உடல் எனக்கொரு பிரச்சனையே கிடையாது. உடலை இந்தத் தன்மையில் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். ஏனெனில் உடலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டால் அது உங்களை வேறெதையும் செய்ய விடாது. உங்களுக்கு அவசரமாக சிறுநீர் கழிக்க வேண்டியிருந்தால் அப்போது நான் ஞானோதயத்தைப் பற்றிப் பேசினால் ஞானோதயம் உங்களுக்கு முக்கியமாக இருக்காது. உங்கள் சிறுநீர் அவ்வளவு சக்தி வாய்ந்தது!

சக்கரவர்த்தி அக்பர், மிகவும் அறிவு பூர்வமான கேள்விகள் என்று கருதி சிலவற்றைக் கேட்பார். அவர் சக்கரவர்த்தி என்பதாலேயே பலரும் அவை அறிவு பூர்வமான கேள்விகள் என்று ஆமோதித்து பதில் சொல்வார்கள். தங்கள் தலையைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சிதான் அது.

உலகிலேயே மிக இன்பமான அனுபவம் எது? என்று அவர் கேட்டார், "சக்கரவர்த்தி அவர்களே! உங்களுக்கு சேவை செய்வதுதான்" என்று சிலர் சொல்வார்கள். இப்படியே சக்கரவத்திக்கு சந்தோஷம் தரும் செய்திகளைப் பலரும் சொல்லச் சொல்ல அவையில் பீர்பால் அலுப்புடன் அமர்ந்திருந்தார். "சக்கரவர்த்திகளின் முகத்தைப் பார்ப்பதுதான் இன்பம் தரும் செயல்" என்றெல்லாம் பலரும் பதில் சொல்லிக் கொண்டிருக்க, பீர்பால் பதில் தர வேண்டிய நேரம் வந்தது. சற்றும் தயங்காமல், "மனிதனுக்கு அதீத இன்பம் தரும் செயல் மலம் கழிப்பதுதான்" என்று பீர்பால் பதிலளித்தார். அனைவரும் அதிர்ந்தனர். அவையில் இப்படி ஆபாசமாகப் பேசியதால், அதை நிரூபிக்க வேண்டு மென்றும், இல்லையென்றால் பீர்பால் தலைக்கே ஆபத்தென்றும் அக்பர் எச்சரிக்க பதினைந்து நாட்கள் அவகாசம் கேட்டார் பீர்பால்.

ஒருவாரம் கழித்து அக்பருக்கு வேட்டைப் பயணமொன்றை ஏற்பாடு செய்தார் பீர்பால். அரண்மனையிலிருந்த அத்தனை பெண்களும் பங்கேற்கும்படியும் செய்தார். நடுவில் அக்பரின் கூடாரத்தை அமைத்து, அதைச் சுற்றி பெண்களும், குழந்தைகளும் தங்கு மிடங்களை அமைத்தார். சமையற்காரர் களிடம் சொல்லி அக்பருக்கு விருப்பமான உணவுகளை சமைக்கச் செய்தார்.

மறுநாள், காலை அக்பர் வெளியே வந்து பார்த்தால் மலம் கழிக்கும் கூடாரத்தைக் காணோம். (அந்தக் கூடாரம் எவ்வளவு முக்கியம் என்று கைலாஷ் மானஸரோவர் யாத்திரை வந்தவர்களுக்குத் தெரியும்) அக்பர் அங்குமிங்கும் நடந்தார். பொறுமையிழந்த நிலையில் காட்டுக்குள் மறைவிடம் தேடிப் போனார். அங்கே எல்லா இடங்களிலும் பெண்கள் நின்று கொண்டிருக்கும்படி செய்திருந்தார் பீர்பால். அக்பரால் தாங்கவே முடியாது என்ற நிலை வந்தபோதுதான் கழிப்பறைக் கூடாரத்தை எங்கே அமைப்பது என்கிற பேச்சு எழுவதை கவனித்தார். அந்தக் குழப்பத்தில் சில நிமிடங்கள் சென்றன. அவசரம் அவசரமாய் கூடாரத்திற்குள் நுழைந்தார் அக்பர். நிம்மதிப் பெருமூச்சு விட்டார். கூடாரத்திற்கு வெளியே பீர்பாலின் குரல் கேட்டது. "நான் சொன்னதை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"ஆமாம்! உண்மைதான். இதுதான் உலகிலேயே இன்பமான விடயம்" என்றார் அக்பர். தாங்க முடியாத ஒன்றிலிருந்து கிடைக்கும் விடுதலைதான் உலகிலேயே இன்பமான விடயம். அது எதுவாக இருந்தாலும் சரி. உடல் அவ்வளவு முக்கியமானதாக ஆகிவிடக்கூடும். காலை வேளைகளில் சூர்ய நமஸ்காரம், ஆசனங்கள் ஆகியவற்றைச் சரியாகப் பயிற்சி செய்து வந்தீர்களென்றால், எவ்வித சிரமமுமின்றி நீங்கள் இங்கே அமர்ந்திருக்கலாம். உடல் எவ்விதத்திலும் உங்களை சிரமப்படுத்தாது. தியானம் செய்யச் சொன்னால் உடனே தியானத்தில் மூழ்குவீர்கள். இல்லை யென்றால், நீங்கள் அமர்ந்திருக்கும் கோணத்தை சரி செய்து கொண்டேயிருப்பீர் கள். அதற்குள் வாழ்க்கையே முடிந்துவிடும். நீங்கள் சாப்பிடும் உணவு உங்கள் உணவின் தன்மையை முடிவு செய்கிறது. எல்லாமே உணவுதான் என்றில்லை. ஆனால் உணவு ஒருவகையில் முக்கியமானது.

உங்கள் உடலை எதற்குத் தயார் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே நீங்கள் சாப்பிடும் உணவு அமைகிறது. ஒரு நாயைப் போலவோ, சிறுத்தையைப் போலவோ ஓடுவதற்கு உங்கள் உடலைத் தயார் செய்கிறீர்களா அல்லது நூறு கிலோ எடையைத் தாங்கி நடைபோடத் தயார் செய்கிறீர்களா? உங்கள் உடலின் இடர் தாங்கும் சக்தியை சோதிக்க சாப்பிடுகிறீர்களா அல்லது உயர்ந்த வாய்ப்புகளுக்கு உங்கள் உடலைத் தயார் செய்யச் சாப்பிடுகிறீர்களா? என்பதைப் பொறுத்தது. நீங்கள் சாப்பிடும் உணவுக்கேற்ப உங்கள் உடலைப் பல விடயங்களுக்குத் தயார் செய்யலாம்.

உயர்ந்த வாய்ப்புகளுக்கு உடலைத் தயார் செய்கிறீர்களென்றால் அதற்கு ஒருவிதமாய் உண்ண வேண்டும். மந்தமாக்கும் உணவுகளையும் உடலை சோர்வுறவும், கிளர்ச்சியுறவும் செய்யும் விடயங்களையும் உட்கொண்டுவிட்டு தியானம் செய்ய முற்பட்டால் அது நடக்காது. உடலை தெய்வீகத்திற்கான ஏணியாகவும் பயன்படுத்தலாம். பள்ளத்தில் கொண்டு சேர்க்கும் கருவியாகவும் பயன்படுத்தலாம். சாப்பிட வேண்டுமென்று தோன்றும் போதோ அல்லது வேறு வகையான உணர்வுகளிலோ அந்த நிர்ப்பந்தத்தை அகற்றுவது மிகவும் முக்கியம். ஆசிரமத்தில் கூட, நீங்கள் பசியாக இருக்கும்போது உங்கள் முன் உணவு பரிமாறப்படும். அள்ளி விழுங்க நீங்கள் ஆயத்தமாகும்போது கை கூப்பி இறைவணக்கப் பாடல் சொல்லத் தொடங்குவார்கள். "அய்யோ பசிக்கிறதே!" என்று நீங்கள் அயர்ந்து போகலாம். சாப்பிட்டே ஆக வேண்டுமென்ற உந்துதல் வரும்போது அதனை இரண்டு நிமிடங்கள் ஒத்திப் போடுகிற உத்திதான் இது.

இப்படி ஒத்திப் போடுவதால் நீங்கள் இறந்துவிட மாட்டீர்கள். மாறாக மேலும் வலிமையடைவீர்கள். கௌதம புத்தர் ஒருமுறை சொன்னார், "நீங்கள் பசியாக இருக்கும்போது உங்கள் உணவை வேறொருவருக்குக் கொடுத்து விட்டால் நீங்கள் வலிமையடைவீர்கள்" என்று. நான் அந்த அளவுக்குப் போகவில்லை. கடுமையாகப் பசிக்கும்போது உணவு சாப்பிடுவதை இரண்டு நிமிடங்கள் ஒத்திப் போடுங்கள் என்றுதான் சொல்கிறேன். இது உங்களை மேலும் வலிமையாக்கும். உடல் சார்ந்த நிர்ப்பந்தங்களை அகற்றுவது மிகவும் முக்கியம்.

உங்கள் உடலும், மனமும் கூட்டுக் கலவைதான். அனைத்து விதமான பழைய பதிவுகளும், உந்துதல்களும் சேர்ந்து சில நிர்ப்பந்தங்களை உருவாக்கியுள்ளன. அவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை நீங்கள் வளர வாய்ப்பில்லை. அந்த நிர்ப்பந்தங்களை உடைக்கிறபோதுதான் புதிய வாய்ப்புக்கள் சாத்தியமாகின்றன. உணவு மிகவும் எளிய விடயம்தான். அதனை எப்படிக் கையாள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே பலவும் அமைகின்றன.

இது தொடர்பாக பல விடயங்கள் உள்ளன. என் பாட்டியும், என் அம்மாவும் இத்தகைய முயற்சிகளைக் கையாண்டுள்ளார்கள். என் அம்மா உணவு சாப்பிடும் முன் ஒரு கைப்பிடி சோற்றை ஈ, எறும்புகளுக்கு இடுவார்கள். உலகின் எல்லா உயிரினங்களுக்கும் இந்த உலகில் உண்டு வாழவும், வளரவும் வாய்ப்புண்டு என்பதன் வெளிப்பாடே இது. மக்கள் மனதில் எறும்பு மிகச் சிறியது. யானை மிகப் பெரியது. இருப்பதிலேயே சின்னஞ்சிறு ஜீவராசிக்கு முதலில் உணவு படைத்தார்கள்.

உணவுக்கு நீங்கள் அடிமையானால் ஒருவேளை உணவைத் துறந்திடுங்கள். இது உங்களைக் கொடுமைப் படுத்துவதற்கல்ல. உடம்பின் கொடுமையிலிருந்து விடுதலை பெற. நிர்ப்பந்தங்களிலிருந்து நீங்கவே விரதங்கள்.




Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

# எல்லா பேமன்ரையும் ஒரு மோட்கேஜ் பேமன்ராக மாத்த வேணும்!

செய்யவேணும் செய்யவேணும் என்று
இப்படியே காலமும் போகுது கடனும் ஏறுது!!

உதுக்குத்தானே இப்ப வோக் - இன்
## மோட்கேஜ் கிளினிக் நடக்குது. !
அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

5Yr Fixed Rate 2.99 % OAC

சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை



# 416-644-3555



**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ **"Rapid Response; Rapid Results"**
FSCO LIC# 10156

# விளையாட்டுத் தகவல்கள் 339

**இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது லயன்ஸ்: கடைசி ஐ.பி.எல் அணியான டெல்லியும் வெளியேறியது.**

சாம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதியில் சொதப்பிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி யடைந்து வெளியேறியது. தென் ஆப்ரிக்கா வில் சாம்பியன்ஸ் லீக் டி20 தொடர் நடை- பெற்று வருகிறது. டர்பனில் நடந்த முதலாவது அரையிறுதியில் டெல்லி டேர்டெவில்ஸ், ஹைவெல்டு லயன்ஸ் (தென் ஆப்ரிக்கா) அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி யின் அணித்தலைவர் ராஸ் டெய்லர் களத் தடுப்பை தெரிவு செய்தார். லயன்ஸ் அணி யின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய குலாம் போடி 4 பவுண்டரி, 1 சிக்சருடன் 50 ஓட்டங்களும், அணித்தலைவர் ஆல்விரோ பீட்டர்சன் 24 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய டி காக் 11 ஓட்டங்களும், பிரிடோரியஸ் 3 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதிவரை நிலைத்து நின்று ஆடிய மெக்கன்சி 4 பவுண்டரி, 1 சிக்சருடன் 46 ஓட்டங்கள் எடுத்தார். 20 ஓவர் முடிவில் லயன்ஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்கள் எடுத்தது. டெல்லி அணியின் உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதனையடுத்து 140 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 117 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி யடைந்தது. அணியில் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட ஷேவாக் ஓட்டங்களின்றி ஆட்டமிழந் தார். மற்றொரு தொடக்க வீரரான வார்னர் 21 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து களமிறங்கிய பீட்டர்சன் மட்டுமே 50 ஓட்டங்கள் எடுத்தார். பின்பு களமிறங்கிய மோர்னே மார்கல் 18 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் சுருண்டனர். லயன்ஸ் அணி சார்பில் நேன்ஸ், மோரிஸ், பங்கிசோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருதை மெக்கன்சி வென்றார். சாம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்ற சென்னை, மும்பை, கொல்கத்தா அணிகள் லீக் சுற்றோடு வெளியேறின. மற்றொரு ஐ.பி.எல்., அணியான டெல்லி நேற்று அரையிறுதியுடன் நடையை கட்ட, இந்திய அணிகளின் கிண்ண கனவு தகர்ந்தது.

**சாம்பியன்ஸ் லீக் தொடரில் சொதப்பிய ஐ.பி.எல் அணிகள்**

சாம்பியன்ஸ் லீக் தொடரில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மும்பை இண்டியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பெரும் ஏமாற்றம் அளித்தன. சொந்த மண்ணில் அசத்தும் இந்த அணிகள், வெளிநாட்டில் சொதப்புகின்றன. டெல்லி அணி மட்டுமே திறமையை வெளிப்படுத்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. தென் ஆப்ரிக்காவில் நடைபெற்று வரும் நான்காவது சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரில், ஒவ்வொரு நாட்டிலும் உள்ளூர் டி20 தொடரில் சாதித்த அணிகள் பங்கேற்கின்றன. இந்தியா சார்பில் இந்தியன் பிரிமியர் லீக்(ஐ.பி.எல்) தொடரில் அசத்திய நான்கு அணிகள் கலந்து கொண்டன.

**மும்பை இண்டியன்ஸ்:**

இதில் நடப்பு சாம்பியனாக வந்த மும்பை அணியில் சச்சின், ரோகித் சர்மா, பொல்லார்டு, அம்பதி ராயுடு என பெரும் துடுப்பாட்ட வீரர்கள் இருந்தனர். பந்துவீச்சில் அணித்தலைவர் ஹர்பஜன், மலிங்கா போன்ற அனுபவ வீரர்கள் இருந்தனர். ஆனாலும், தென் ஆப்ரிக்க ஆடுகளத்திற்கு ஏற்ப இவர்களால் பக்குவப்படுத்திக் கொள்ள முடியவில்லை. லயன்ஸ், சென்னை, சிட்னி சிக்சர்ஸ் அணிகளிடம் தோல்வியடைந்தது. ஒரு வெற்றி கூட பெறாமல் நடப்பு சாம்பியன் அந்தஸ்தை இழந்து நாடு திரும்பியது.

**சென்னை சூப்பர் கிங்ஸ்**

கடந்த 2010ல் சாம்பியன்ஸ் லீக் தொடரில் கிண்ணம் வென்ற சென்னை அணியும் பெரிதாக சாதிக்கவில்லை. சிட்னி, லயன்ஸ் அணிகளிடம் தோல்வியுற்றது. பின்பு மும்பை, யார்க்ஷயர் அணிகளுக்கெதிராக ஆறுதல் வெற்றி பெற்றது. டி20 அரங்கில் சிறந்த அணியாக கருதப்பட்ட சென்னை, இம்முறை அரையிறுதியை கூட எட்டாதது வருத்தமான விடயம். அணித்தலைவர் டோனி, ரெய்னா, அஷ்வின், ஜடேஜா என இந்திய அணியின் முன்னணி வீரர்கள் இடம் பெற்ற போதும், அரையிறுதியை எட்ட வேண்டும் என்ற எண்ணம் துளியும் காணப்படவில்லை. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் நான்கு போட்டிகளில் 3 விக்கெட் தான் வீழ்த்தினார். இவர் சொதப்பியதால், அணி எழுச்சி காண முடியவில்லை.

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**

நடப்பு ஐ.பி.எல்., சாம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய கொல்கத்தா அணி ஆரம்பத்தில் டெல்லி, ஆக்லாந்திடம் தோல்வியுற்றது. டைட்டன் அணிக்கு எதிராக மட்டும் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று ஆறுதல் அளித்தது. பந்துவீச்சில் பாலாஜி ஓட்டங்களை வாரி வழங்கினார். அணித்தலைவர் கம்பீரை தான் அணி அதிகம் நம்பி இருந்தது. இவர் 3 இன்னிங்சில் 49 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, அணியின் அரையிறுதி வாய்ப்பை தகர்த்தார். மொத்தத்தில் சாம்பியன்ஸ் லீக் தொடரில் அலட்சியமாக செயல்பட்ட இந்த மூன்று ஐ.பி.எல்., அணிகளும், கோடிக்கணக்கான இந்திய ரசிகர்களை ஏமாற்றிவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகக் கிண்ண கால்பந்து: அர்ஜென்டினா அணிக்கு அணித்தலைவராக மெஸ்சி

உலகக் கிண்ண கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்றில் பங்கேற்கவுள்ள 18 பேர் கொண்ட அர்ஜென்டினா அணிக்கு லயோனல் மெஸ்சி அணித்தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். ஒக்ரோபர் 12 மற்றும் 16ம் திகதிகளில் நடைபெறும் தகுதிச்சுற்று ஆட்டங்களில் உருகுவேயுடன் மோதுகிறது அர்ஜென்டினா. முதல் ஆட்டம் உருகுவேயிலும், 2வது ஆட்டம் சிலியிலும் நடைபெறுகிறது.

**அர்ஜென்டினா அணி வீரர்கள் விபரம்**

கோல் கீப்பர்கள்: செர்ஜியோ ரொமெரோ, மரியானோ அன்டுஜார். தடுப்பாட்டக்காரர்கள்: பேப்லோ ஸபலெட்டா, ஹியூகோ கம்பேகனாரோ, ஃபெடெரிகோ பெர்னாண்டஸ், இஸிகியேல் கேரேய், மார்கஸ் ரோஜோ. நடுகளம்: ஜாவியர் மாஸ்கெரனோ, ஏஞ்ஜெல் டி மரியா, என்ஸைஸ் பெரெஸ், பெர்னாண் டோ காகோ, ஜோஸ் சோசா, பேப்லோ குய்னாஸ். முன்களம்: செர்ஜியோ அகியூரோ, லாவெஸ்ஸி, கொன்ஸ்லோ ஹிக்வேய்ன், ஹெர்னான் பர்காஸ், லயோனல் மெஸ்சி.

**அணித்தலைவர் பதவி என்னை மாற்றிவிடாது: மெஸ்சி**

2014ம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கால்பந்து தொடரில் இடம்பெறும் அணிகளுக்கான தகுதிப்போட்டிகள் நடை- பெற்று வருகின்றன. மெண்டோசாவில் தகுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா அணி, உருகுவே அணியுடன் மோதுகிறது. அர்ஜென்டினா அணி தனது அடுத்த ஆட்டத்தில் சிலியை எதிர்கொள்கிறது. தகுதிச்சுற்று ஆட்டங்கள் பற்றி அர்ஜென்டினா அணியின் அணித்தலைவரான நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி கூறுகையில், ஒரு அணியாக நாங்கள் வலிமையாக உள்ளோம். ஆனால் நாங்கள் மேலும் முன்னேற்றம் காணவேண்டும். இந்த உலகக் கிண்ணத் தகுதிச்சுற்று ஆட்டங்கள் மிகவும் கடுமையாக இருக்கும். எனவே நாங்கள் மிகவும் உழைக்க வேண்டும் என்றார். கோல் அடிக்கும் திறமைவாய்ந்த வீரர்கள் எங்கள் அணியில் இருப்பது தங்களுக்கு சாதகமா னது. முடிந்த அளவுக்கு எனது பங்களிப்பை அளிப்பேன் என்றும் அணித்தலைவர் பதவி என்னை மாற்றாது எனவும் கூறியுள்ளார். பெரு அணிக்கெதிரான தகுதிச்சுற்று ஆட்டத்தை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தபோதும் அர்ஜென்டினா அணி, 7 ஆட்டங்களில் 14 புள்ளிகளைப் பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அர்ஜென்டினாவுடன் மோத இருக்கும் உருகுவே அணியோ 12 புள்ளிகளுடன் 4வது இடத்திலுள்ளது. பார்சிலோனா அணி யில் ஆடிவரும் மெஸ்சியின் வருகையால் அர்ஜென்டினா அணி தற்போது மேலும் வலுவடைந்துள்ளது. மேலும், செர்ஜியோ, ஹிகுவெய்ன், லாவெஸ்சி உள்ளிட்ட வீரர்களும் இருப்பதால் அர்ஜென்டினா அணி மிகவும் வலிமையான அணியாகக் கருதப்படுகிறது.

சர்வதேச கால்பந்து தரவரிசை பட்டியல் வெளியீடு: ஸ்பெயின் முதலிடம்

சர்வதேச கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) வெளியிட்டது. முதல் இரண்டு இடங்களில் ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் நீடிக்கின்றன. போர்ச்சுகல் அணி ஒரு இடம் முன்னேறி 3வது இடம் பிடித்தது.

மூன்று இடங்கள் முன்னேறிய அர்ஜென்டினா 4வது இடத்தில் உள்ளது. இரண்டு இடங்கள் பின்தங்கிய இங்கிலாந்து 5வது இடத்துக்கு தள்ளப்பட்டது. அடுத்த ஐந்து இடங்களில் முறையே நெதர்லாந்து, உருகுவே, இத்தாலி, கொலம்பியா, கிரீஸ் அணிகள் உள்ளன. குரோஷியா (11வது), பிரேசில் (14வது) பின்னடைவை சந்தித்தன. இதில் இந்திய அணி ஒரு இடம் முன்னேறி 168வது இடம் பிடித்தது. கடந்த மாதம் நடந்த நேரு கிண்ணத் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றதே இம்முன்னேற்றத்துக்கு காரணம். ஆசிய அணிகளுக்கான தரவரிசை பட்டியலில், ‘பிபா’ தரவரிசையில் 23வது இடத்தில் உள்ள ஜப்பான் முதலிடத்தில் நீடிக்கிறது. இப்பட்டியலில் இந்தியாவுக்கு 31வது இடம் கிடைத்துள்ளது. வங்கதேசம் 32வது, பாகிஸ்தான் 35வது, இலங்கை 37வது இடங்களில் உள்ளன.

சர்வதேச டென்னிஸ் தரவரிசை வெளியீடு: பெடரர், அசரென்கா தொடர்ந்து முதலிடம்

சர்வதேச டென்னிஸ் தொடரில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியல் ஜேர்மனி தலைநகர் பெர்லினில் இன்று வெளியிடப்பட்டது. அதன் படி, ஆடவருக்கான ஒற்றையர் தரவரிசையில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக செர்பியாவின் நோவக் ஜோகோவிச் இரண்டாவது இடமும், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே மூன்றாமிடமும் வகிக்கின்றனர். மகளிர் ஒற்றையர் பிரிவின் தரவரிசையில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா முதலிடமும், ரஷ்யாவின் மரியா ஷரபோவா இரண்டாவது இடமும் பிடித்துள்ளனர். ஏஞ்சலிக் கெர்பர், சாரா எர்ரானி ஆகியோர் தரவரிசையில் பத்து இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளனர்.

**ஆடவர் ஒற்றையர் தரவரிசை:**

(1). ரோஜர் பெடரர், சுவிட்சர்லாந்து
(2). நோவக் ஜோகோவிச், செர்பியா
(3). ஆன்டி முர்ரே, இங்கிலாந்து
(4). ரபேல் நடால், ஸ்பெயின்
(5). டேவிட் பெர்ர், ஸ்பெயின்
(6). தாமஸ் பெர்டிச், செக் குடியரசு
(7). ஜோ-வில்பிரட் சோங்கா, பிரான்ஸ்
(8). ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோ, அர்ஜென்டினா
(9). ஜாங்கோ டிப்சரேவிச், செர்பியா
(10). ஜுவான் மொனாக்கோ, அர்ஜென்டினா.

**மகளிர் ஒற்றையர் தரவரிசை:**

(1). விக்டோரியா அசரென்கா, பெலாரஸ்
(2). மரியா ஷரபோவா, ரஷ்யா
(3). செரினா வில்லியம்ஸ், அமெரிக்கா
(4). ஆக்னியெஸ்கா ராட்வான்ஸ்கா, போலந்து
(5). ஏஞ்சலிக் கெர்பர், ஜேர்மனி
(6). பெட்ரா கிவிடோவா, செக் குடியரசு
(7). சாரா எர்ரானி, இத்தாலி
(8). லீ நா, சீனா
(9). சமந்தா ஸ்டோசர், அவுஸ்திரேலியா
(10). மரியன் பர்டோலி, பிரான்ஸ்.

**எஸ். கணேஷ்**



Professional Pest Control
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997
• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders



# அடமானக்கடனின் தாக்கம்

1946 ஆம் Canada Mortgage and Housing Corporation (CMHC) உருவாக்கப்பட்டது. இரண்டாவது உலகப்போர் முடியாது நாடு திரும்பிய போர் வீரர்கள் தமக்கென வீடு வாங்குவதற்கு உதவும் முகமாக CMHC உருவாக்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டிலிருந்து CMHC காப்புறுதி கொடுப்பதற்கு தொடங்கியது. கடந்த அரைநூற்றாண்டிற்கு மேலாக இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. முதல் வீடு வாங்குவதற்கு உதவுவதற்காக



உருவாகியது. காலப்போக்கில் இந்த நோக்கம் திசை திரும்புவதனை அவதானித்த அரசு அதற்கு முட்டுக்கட்டை போட ஆரம்பித்தது. பொதுவாக எந்த Housing Bubble களிற்கும் நிதிநிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கு அமெரிக்கா அயர்லாந்து ஸ்பெயின் போத்துக்கல் போன்றவை நல்ல உதாரணம். இவ்வாறான நிலைமை ஏற்படக்கூடாது என்பதில் மத்திய நிதி அமைச்சர் மற்றும் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் கவனமாக இருக்கிறனர்.

கனடாவில், யூலை 09, 2012 இல், மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட அடமானக்கடன் சம்பந்தப்பட்ட சட்டம், ஆதன வியாபாரத்தில் இறக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவே நிதி அமைச்சர் ஜிம் பிளஹெட்ரி (Jim Flaherty) இன் நோக்கமாக இருந்தது. இதற்கு முன்பும் பல தடவை வேகமாக அதிகரித்து வந்த வீட்டு விலையைக் கட்டுப்படுத்த பல ஆக்க பூர்வமான, அடமானக்கடன் இறுக்கங்கள் கொண்டுவரப்பட்டன. அவை போதியளவு பலனைக் கொடுக்கவில்லை. அதன் உச்சக் கட்டமாக அடமானக்கடன் பெறுவதற்குரிய நிபந்தனைகள் யூலை 09, 2012 புதிதாகக் கொண்டுவரப்பட்டது. இதனால் வீட்டு விலையிலும், வீட்டு வியாபாரத்திலும் தாக்கங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

• 30 வருட அடமானக்கடன் திருப்பி கொடுக்கும் காலம் (Amortization Period), 25 வருடங்களாக குறைக்கப்பட்டது. (இதனால் மாதாந்த கட்டுப்பணம் அதிகரித்தது. அடமானக்கடன் பெறுவதில் இறுக்கம் ஏற்பட்டுள்ளது. (ஆதனத்தின் விலையின் 20% இற்கு குறைவாக முதலீடு செய்யும் போது காப்புறுதி எடுக்க வேண்டும். இப்பொழுதும் ஆகக்குறைந்த முதலீடு 5% ஆக உள்ளது)

• ஒரு மில்லியனிற்கு அதிகமான விலையில் வாங்கப்படும் ஆதனத்திற்கு குறைந்தது 20% முதலீடு செய்ய வேண்டும். அதாவது காப்புறுதி அரசு கொடுப்பதனை தவிர்த்துள்ளது.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 377

• வீட்டை வைத்துப் பெறும் கடன் (Home Equity Loan) முன்பு 85% ஆக இருந்து, புதிய முறையின் படி 80% ஆகக் குறைந்துள்ளது.

• அடமானக்கடன் பெறும்பொழுது கடன் பழு வீதம் மொத்தவருமானத்தின் 39% ஐ விட குறைவாக இருத்தல் வேண்டும்.

வருமானத்தின் 39% ஆனது, மாதாந்த, அடமானக்கடன் கொடுப்பனவும், ஆதனவரி மற்றும் வீட்டை வெப்பமாக்கல் போன்றவற்றின் மொத்த கொடுப்பனவாக இருத்தல் வேண்டும்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**Raja Mahendran**, P.Eng.
Broker / Owner



**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666**

**CONDO. FOR. SALE KENNEDY & HWY 401**



1+ Den condo. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900

**CONDO FOR SALE NEILSON & MCLEVIN**



1 Bedroom. 1 Washroom. 1 parking. Close to Malvern mall. Price $129,900

**BUSINESS SPACE FOR LEASE ON MAIN FLOOR**



2000 sq.ft. 480sq.ft. Zoning for retail or professional office.

**HOUSE FOR SALE HWY 10 & STEELES**




3 Bedroom freehold town house. Possible bsmt apartment. Possible 2nd income. Price $349,900

**CONDO FOR SALE SALE DONMILLS & EGLINTON**



2 Bedroom condo. 1 Washroom. Close to science center. Price $139,900

**HOUSE FOR SALE 14TH & BOX GROVE - MARKHAM**




3 Bedroom house. Sep. entrance possible. 5 Years new. 1760 Sq.ft. Hardwood floor.

# வேகமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் பிடிபட்டால்?

## SPEEDING OFFENCE

கடந்த செப்ரெம்பர் 18, 2012 சிறு பரபரப்பான செய்தி ஒன்று ரொறொன்ரோவின் ஆங்கில ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது. (இப்படியான செய்திகள் தினம் தினம் சாதாரணமாக நடந்து கொண்டிந்தாலும், ஒரு தகவல் கட்டுரைக்காக இதனை ஒரு உதாரண செய்தியாக சுட்டிக்காட்டி கொண்டு விடயத்திற்கு வருகின்றேன்)

அது வேறு ஒன்றுமல்ல!

ஆக கூடுதலாக 100 KM/h என்ற வேகத்தில் (Maximum Speed Limit) வாகனம் சட்டரீதியாக செலுத்தலாம் என்ற 401 நெடுஞ்சாலையின் கிழக்கு நோக்கி ஒரு முப்பது வயது இளைஞன் கறுப்பு நிற 'ஷவலற் ஹோபால்ற்' (Chevrolet Cobalt) வாகனத்தினை மணிக்கு 222 KM/h வேகத்தில், தான் மாத்திரமே வீதியில் ஏகபோக சக்கரவர்த்தி என்ற நினைப்பில் அதிக வேக திகில் ஓட்டமாக செலுத்தி கொண்டிருந்தார். அதி வேகமாக நெடுஞ் சாலைகளில் சென்று கொண்டிருக்கும் வாகனங்களையும், அவர்களின் வேகங் களையும் கண்காணித்து துல்லியமாக படம் பிடித்துக் கொண்டிருக்கும் ஒன்ராரியோ மாகாண விமான ஊர்தி பொலீஸ் பிரிவினர் (OPP AIRCRAFT PILOTS) குழுவில் பணியாற்றிக் கொண்டிருந்த சார்ஜன்ட் ஹான்ஸ் ஸ்கீமர் (Sgt. Hans schemer) சார்ஜன்ட் ஹரி பிளாக்மன் (Sgt. Gary Blackman) ஆகிய இருவரும் சுமார் 3400 அடி உயரத்தில் பொலீஸ் ஹெலிகொப்ரரில் பறந்து கொண்டே தரையில் தயார் நிலையில் நிற்கும் பொலிசாருக்கு வாகனம் சென்று கொண்டிருக்கும் இடத்தினை ரேடியோ தகவல் செய்தி பரிமாற்றத்தி னூடாக துல்லியமாக அறிவிக்க நான்கு பக்கத்தினாலும் சென்று மாகாண பொலிசார் வாகனம் இடைமறித்து நிறுத்தினர். இதுதான் நடந்தது. (அன்றைய தினம் அவர்களின் ஐந்து மணிநேர கண்காணிப்பில்




53 பேர் பிடிபட்டனர்) சரி! இத்தகைய குற்றச்சாட்டுக்குரிய தண்டனைகள்

## கனடிய தகவல் தொடர் 183

எப்படியிருக்கும்?

• சாதாரண வீதி ஒழுங்கு சட்டத்தின் கீழ் (Traffic Law) தண்டிக்கப்பட வேண்டியவர் கிரிமினல் குற்றசாட்டின் கீழ் உடனடியாக கைது செய்யப்படுகின்றார்.

•கிரிமினல் குற்றங்களில் கைது செய்யப்படும்போது வழமையாக கைவிரல் அடையாளங்கள், படப்பிடிப்புகள் என்ற வேலைகள் முடித்து நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்.

• உடனடியாக வாகனத்தினையும் லைசன்சினையும் ஒரு கிழமைக்கு பறிமுதல் செய்வார்கள்! தொடர்ந்து இதனை திருப்பிப் பெற மீண்டும் பணச் செலவுகள்

• நீதிமன்ற வழக்கு களுக்கும் விசாரணை களுக்கும் வக்கீலுக்கும் பணத்தினை கொடுக்க வேண்டும்.

• இறுதியாக நீதிமன்ற தீர்ப்பில் தப்ப முடியாத நிலையில்

1. இரு வருடங்கள் லைசென்ஸ் இழப்பு (License Suspension)
2. ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் (Six Demerit Points)
3. $2,000-$10,000 வரை பணத்தண்டனை. சில நேரங்களில் சிறை தண்டனையும் கிடைக்கலாம்.
4. கிரிமினல் குற்றங்கள் பதிவில் போகும் போது அது கனடிய வாழ்வில் நெடுங்கால மாக இருக்கும்.
5. மறுபடியும் வாகனம் செலுத்த முயலும் போது வாகன காப்புறுதிக்குரிய கட்டுத் தொகை அதிகரிக்கும்

• மீண்டும், இரண்டாம் முறையும் இதே குற்றச்சாட்டில் பிடிப்பட்டால் பத்துவருடங்கள் லைசென்ஸ் பறிமுதல் ஆவதுடன் மேற்குறிப்பிட்ட தண்டனைகள் இன்னும் கடுமையாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட தண்டனைகள் என்பது அதிவேகமாக வாகனம் செலுத்தும் (Speeding) எந்த குற்றச்சாட்டில் தண்டனை கிடைக்கும்?

இது ஒரு கேள்வி! இங்கு ஒன்ராரியோ மாகாண வீதி ஒழுங்கு சட்டங்கள் இதனை தெளிவுபடுத்துகின்றது. வீதி ஒன்றில் சட்டரீதியாக ஆகக்கூடுதலாக வாகனம் செலுத்தலாம் (Maximum Posted Speed) என்ற வரையறைலிருந்து 50 KM/h அதிகமாக வாகனம் செலுத்தினால் (50 KM/h above posted legal speed limit)

• அதிவேக திறில் ஓட்டங்கள் / கவனமில்லாத ஓட்டங்கள் (Racing, Stunt Driving & Careless Driving)

**வேகமாக வாகனம் செலுத்திய குற்றத்தில் பொதுவாக புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்**
(SPEEDING TICKET DEMERIT POINTS)

சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட (Maximum Legal Posted Speed Limit) மேலதிகமாக

1. 0-15 KM/h என்ற நிலைக்குள் மட்டும் செலுத்தியிருந்தால் புள்ளிமதிப்பீட்டு இழப்புக்களுக்குரிய பதிவுகள் எவையுமே இருக்கமாட்டாது. ஒரு சிறிய குற்றசாட்டு என (Minor Infraction) என பதிவில் இருக்கும். சிறு பணதண்டனையுடன் அதனை செலுத்திவிட்டால் பிரச்சினையும் முடிந்துவிடும். வாகன காப்புறுதியினையும் பெரிதும் பாதிக்காது.

2. 16-29 KM/h என்ற நிலையில் மேலதிகமாக செலுத்தியிருந்தால் மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் பதிவில் போகும். காப்புறுதி கட்டணங்களில் கொஞ்சம் விற்க வரலாம்.

3. 30-49 KM/h என்ற நிலையில் மேலதிமாக செலுத்தியிருந்தால் நான்கு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என பதிவில் போகும்.

**வேகமாக வாகனம் செலுத்திய குற்றத்தில் தண்டனை பண கணிப்பீடு!**
(FINE AMOUNTS FOR SPEEDING TICKET)

வீதியில் சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட ஆக கூடுதலான வேகத்தினை விட (Maximum Legal Posted Speed Limit) மேலதிகமாக

1. 1-19 KM/h வரை அதிகரிக்கும் ஒவ்வொரு வேகத்திற்கும் $2.50 டொலர் தண்டனை பணம்.

2. 20-29 KM/h வரை அதிகரிக்கும் மேலதிக ஒவ்வொரு வேகத்திற்கும் மேலதிகமாக $3.75 டொலர் வரை தண்டனைப்பணம்!

3. 30-49 KM/h வரை அதிகரிக்கும் மேலதிக ஒவ்வொரு வேகத்திற்கும் மேலதிகமாக $6 டொலர் வரை தண்டனை பணம்!

4. 50 KM/h க்கு செலுத்தினால் அதிகரிக்கப்பட்ட ஒவ்வொரு வேகத்திற்கும் மேலதிகமாக $9.75 X $1.25 என்ற கணிப்பீட்டில் மேலதிகமாக செலுத்த வேண்டிய நிலைமைக்கு உள்ளாவதுடன் இது 'திறில் ஓட்டம்' (Stunt Driving/ Speed Racing) என்ற குற்றச்சாட்டுக்குள் அகப்பட்டால் $2,000 - $10,000 டொலர் வரை தண்டனைப்பணம் செலுத்த வேண்டி வரலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment


Sell your home
faster
and more money
Brimorton/Orton Park
$339,000
4+1 Bedrooms, 2 W Rooms
Hardwood Floor
Hwy 401/Kingston Rd
$349,900
3+1 Bedrooms, 3 W Room
Ceramic. Hardwood Floor
Harmony & Taunton
$369,900
4 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floor
14th/Dennison
$417,000
3 Bedrooms, 2 W Rooms
Fireplace
Hoover Park / 9th Line
$446,500
3 Bedrooms, 3 W Rooms
Wood,Ceramic Floor
Fincham/16th Avenue
$449,000
3+1 Bedrooms, 4 W Rooms
Brick Fireplace
16th Ave /Mccowan Rd
$470,000
4 Bedrooms, 3 W Rooms
Brick Fireplace
Ninth Line/Bur Oak
$488,800
3+1 Bedrooms, 4 W Rooms
Hardwood Floors
Hoover Park/Tenthline/Mantle
$499,999
4 Bedrooms, 3 W Rooms
wood Floor
Markham/Finch
$549,000
3+2 Bedrooms, 4 W Rooms
Hardwood,Granite Floor
Boxgrove / 14th Ave
$550,000
4+1 Bedrooms, 4 W Rooms
Ceramic,Hardwood Floors
9th/14th Ave. N.
$595,000
3 Bedrooms, 3W Rooms
Brick
16th Ave / 9th Line
$614,980
4 Bedrooms,3 W Rooms
Hardwood, Ceramic Floor
16th/9th Line
$649,000
4+2 Bedrooms, 4 W Rooms
Hardwood, Ceramic Floor
Mingay/Castlemore
$808,000
4 Bedrooms, 4 W Rooms
Hardwood, Ceramic Floor
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# GTA Square இல் அமைந்துள்ள Heros Catering உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *November 12* இற்கு முன்பாக தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)* மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்டசாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)* 416.282.8059 இல் தொடர்புகொள்ளவும்**

**போட்டி இலக்கம் 2 இல் வெற்றிபெற்றோர்** சுமதி குமார், மிசிசாகா

### போட்டி இலக்கம் - 3

| | | | |
|---|---|---|---|
| 2÷ | | 3+ | 2- |
| 12x | 3 | | |
| | 3- | | 2÷ |
| 1- | | 3 | |

### விடை- போட்டி இலக்கம் - 2

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 4 |
| 3 | 1 | 4 | 2 |
| 4 | 2 | 3 | 1 |
| 1 | 4 | 2 | 3 |

***Instructions:*** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# வேகமாக வாகனம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

**குற்றசாட்டிலிருந்து தப்பிக்கும் வழிகள்?** (LEGAL DEFENSE POINTS)



நீதிமன்ற விசாரணைகளில் இக்குற்ற சாட்டுகளை வழக்கு தொடுநர் (Prosecutor), கையும் மெய்யுமாக பிடித்த பொலிசாரின் சாட்சிகளின் அடிப்படையில் நிரூபிக்க முயலும் போது பூரணமாக தப்பி கொள்ளுதல் என்பது சாத்தியமான விடயம் அல்ல என்பதனை இவை தொடர்பான நிபுணர்களின் சட்டத்துறை சார்ந்த கட்டுரைகளில் தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதிலும் பின்வரும் அம்சங்களை வைத்து பல சந்தர்ப்பங்களில் சட்ட உதவியாளர்கள் வழக்கறிஞர்கள் (ParaLegals & Lawers) இந்த குற்றசாட்டினை நீக்கியுள்ளனர். அவையாவன பின்வருமாறு:

1. குற்றசாட்டுப் பத்திரங்களை (Offence Disclosure) பரிசீலனை செய்து பார்க்கும் போது ஏதாவது சட்டரீதியான தவறுகள் (Legal Errors) இருந்தால் அல்லது ஏதாவது முக்கியமான தகவல்கள் தவறியிருந்தால்
2. வேகத்தினை பிடிக்கும் கருவியில் உள்ள தொழில் நுட்ப கோளாறுகள்! (Technical Errors of Speeding Detective Guns)
3. வழக்கு நடத்துவதில் ஏற்படும் காலதாமதங்கள் (Unreasonable Delays for trial dates)
4. எதிர்பாராத விதமாக சாட்சியாக உள்ள பொலீஸ் உத்தியோகத்தர்கள் சமூகம் அளிக்க தவறியமை!

மேற்குறிப்பிட்ட நான்கு வழிகளிலும் சில குற்றம் சாட்டப்பட்டவர்கள் தப்பியிருந்தாலும் அது எல்லோருக்கும் சாத்தியப்படாது. ஏனெனில் வழக்கு தொடுநர், சாட்சியம் வழங்கும் பொலிசார் அவர்கள் வேகத்தினை பிடிக்கும் கருவிகள் தயாரிக்கும் தங்கள் கடமையில் தவறாக நிற்கும் அனுபவதாரர் களாகவே இருப்பார்கள். இறுதியாக புத்திசாலித்தனமாக முடிவு! சட்டத்தினை மதித்து, பொறுப்பான நிலையின் நின்று வாகனம் செலுத்துவதே ஆகும்.

# அடமானக்கடனின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி



மேலும் மற்றைய கடன்களின் பெறுமதியுடன் சேரும்போது மொத்த வருமானத்தின் 44% ஐ விட குறைவாகவும் இருத்தல் வேண்டும். இதில் மற்றைய மாதாந்த கடன் கொடுப்பனவுகளும் சேர்ந்து கொள்ளப்படும். (அதாவது வாகன மாதாந்த கொடுப்பனவும், கிறடிட் காட் கொடுப்பனவும், வேறு கடன்கள் போன்றனவும் அடங்கும்)

அடமானக்கடன் பெறுவதில் கொண்டுவரப்பட்ட இறுக்கமான சட்டம், வீடு வாங்குபவர்களிற்கு அனுகூலமாக மாறியுள்ளதனை காணலாம். யூன் 2012 இற்கு முன்பு மனை/வீடு விற்பவர்களிற்கு சார்பாக இருந்த சந்தை, யூலை 2012 இற்கு பிற்பாடு வாங்குபவர்களிற்கு சார்பாக மாறியுள்ளது.

இன்றைய இவ்வாறான இறுக்கமான சூழலில், புதிய 3 அடுக்குமாடி மனை, கட்டிடங்கள் சந்தைக்கு வர உள்ளன. இதன் வியாபாரம் அடுக்குமாடி மனைகளின் வியாபாரத்தை நாடி பிடித்துக் காட்டும் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

அடுக்குமனை மாடி வியாபாரத்தில் நீண்ட அனுபவம் கொண்ட TRIDEL நிறுவனத்தின் 10 York Street என அழைக்கப்படும், 69 மாடி 695 மனைகளைக் கொண்ட தொகுதியானது ஏற்கெனவே விற்பனையை ஆரம்பித்துள்ளது. சராசரி சதுரஅடியின் விலை $620 இல் இருந்து ஆரம்பிக்கின்றது. இரண்டாவது King Blue அடுக்குமாடி மனை 800 மனைகளைக் கொண்ட இரு கட்டிடத்தொகுதிகள் Steve Gupta இன் நிறுவனம் இதனை கட்ட உள்ளது. மூன்றாவது Eau Du Soleil என்ற 1250 மனைகளைக் கொண்ட கட்டிடத்தொகுதி Lakeshore இல் West Toronto பகுதியில் அமைய உள்ளது. Empire Community நிர்மாணிக்க உள்ளது.

அனேகமான நிறுவனங்கள் புதிய அடுக்கு மனைகளின் விற்பனையை மார்ச் 2013 காலத்திற்கு மாற்றியபோது இந்த மூன்று தொகுதிகளும் சந்தைக்கு வர உள்ளன. இவற்றின் வியாபாரத்தை கொண்டு, ரொறொன்ரோவின் அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் எவ்வாறு இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

• எதிர்வரும் 20 வருடங்களில் GTA பகுதியில் 2 மில்லியன் அதிகமான மக்கள் வாழ்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
• யூலை 31, 2012 வரை விற்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு மனைகளின் எண்ணிக்கை 12,906.
• தனி வீடுகள், இரண்டு சேர்ந்த வீடுகள், தொடர் வீடுகளின் எண்ணிக்கை 10,102.
• மொத்த விற்பனை 23,008.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# சான்டி...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பெயர்களைச் சூட்டி வருகின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை வங்கதேசம், இந்தியா, மாலை தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், தாய்லாந்து, மியான்மர், ஓமன், ஆகிய நாடுகள் இணைந்து பெயர்களை முடிவு செய்கின்றன. இந்தப் பெயர்கள் ஒவ்வொன்றாக சூட்டப்பட்டு வருகின்றன. கடைச-யாக முர்ஜான் என்ற புயல் இப்பிரதேசத்தைத் தாக்கியது. இந்ப் பெயரை வைத்த நாடு ஓமன். இந்தப் புயல் அரபிக் கடலில் உருவாகி சோமாலியா பகுதியில் கரையைக் கடந்தது.

தற்போது முதல் முறையாக இந்தியப் பகுதியில் ஒரு புதிய புயல் உருவாகி இருக்கிறது. வங்கக் கடலில் நிலை கொண்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலமானது புயலாக உருவெடுத்திருக்கிறது. இப்புயலுக்கு நிலம் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பெயரை சூட்டிய நாடு பாகிஸ்தான் ஆகும். அடுத்த புயல் வரும்போது அதற்கு மகாசேன் என்று பெயர் சூட்டப்படும். இந்தப் பெயரை சூட்டிய நாடு இலங்கை.

## Remeberance Day

Remembrance Day முதலாம் உலகப்போர் உத்தியோக பூர்வமாக முடித்துவைக்கப்பட்ட நாளான நொவம்பர் 11, 1918 இனுடைய வருடாந்த நினைவு நாள் ஆகும். இது முதலாம் உலகப்போரில் உயிரிழந்த பெருந்தொகையான பொதுமக்களையும் இராணுவ வீரர்களையும் நினைவுகூரும் நாளாகும்.

இவ்வாறு போரில் இறந்தவர்களை நினைவுகூர பொதுமக்கள் பிளாஸ்ரிக்கில் செய்யப்பட்ட பொப்பி (Poppy) எனப்படும் சிவப்பு நிற பூவை அணிவார்கள். இந்த பொப்பி பூக்கள் முதலாம் உலகப்போரில் இறந்த போர் வீரர்களை புதைத்த Flemish புதைகுழிகளில் பெருமளவில் விளைந்தன. இது தொடர்பாக இராணுவ சேவையில் ஈடுபட்ட கனேடிய வைத்தியரான John McCrae எழுதிய பிரபல்யம் வாய்ந்த கவிதையான Flanders Fields இல் கூறியுள்ளார். Rememberence தினத்தில் கனடாவில் உள்ள



இறந்த போர் வீரர்களை நினைவு கூரும் சிலைகள் வைக்கப்பட்ட இடங்களில் பொதுமக்கள் தமது வணக்கத்தை போரில் இறந்தவர்களுக்கு செலுத்துவார்கள்.

## சுதந்திரமும் இறைமையும் உள்ள தனித்தமிழீழ அரசே எமது நிலைப்பாடு!

தாயகம், தேசிய தன்னாட்சியுரிமை எனும் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசையான சுதந்திரமும் இறைமையும் உள்ள தனித் தமிழீழ அரசே எமது நிலைப்பாடு என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இடம்பெற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் கருத்தாடற்களத்தில் இணைவழி பரிவர்த்தனையூடாக இணைந்து கொண்டு உரையாற்றும் போதே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் இக்கருத்தினை தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலுக்கு பிந்திய இலங்கைத் தீவின் இன்றைய சூழலில் தமிழர்கள் தங்களின் அரசியல் அபிலாசையினை வென்றெடுப்பது யதார்த்தமில்லை என்ற கருத்துக்களை நிரா-கரித்த பிரதமர் வி. உருத்திரகுமாரன், யாதார்த்தங்களுக்கு ஏற்றவாறு எமது நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ள முடியதென்றும் தமிழர்களின் அபி லாசையினை வென்றெடுப்பதற்கான யதார்த்த நிலையினை ஏற்படுத்துவதே எமது நிகழ்ச்சி நிரலெனவும் உறுதிபட தனதுரையில் தெரிவித்தார்.

மேலும் அவர் தனதுரையில் தெரிவிக்கை யில், தெற்காசிய வட்டகையினை மையப் படுத்தி மாறிவரும் சர்வதேச ஒழுங்கில் தமிழீழம் அமைவதற்கான சாத்தியங்கள் நிறையவே காணப்படுகின்றன. இந்த மாற்றங்களை நுண்ணறிந்து வாய்ப்புக்கள் ஊடாக எமது இலக்கினை வென்றெடுப்பதே எமது இன்றைய இராஜாந்திரம்.

சர்வதே அரங்கில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மறைமுக அங்கீகாரமானது, நாளை சர்வதேச நாடுகளது வெளிப்படையான அங்கீகாரமாக மாறும் என்ற திடமான நம்பிக்கை உள்ளது என தெரிவித்துள்ளார்.

பிரான்சில் இடம்பெற்றிருந்த இந்நிகழ்வ ரங்கில் பிரதமர் வி. உருத்திரகுமாரன், தனது உரையினை வழங்கியிருந்ததோடு மக்களின் கேள்விகளுக்கு பதில்களை வழங்கியிருந்தார்.

பிரான்சின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான மக்கள் சந்திப்புக்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொள்ள இருப்பதோடு பிரதமர் வி. உருத்திரகுமாரன், ஊடகங்கள் வாயிலாக மக்களின் கேள்விகளுக்கு தொடர்ச்சியாக பதில் அளிக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடக விவகாரங்களுக்கான அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# மனஅழுத்தம் - கட்டுப்படுத்தும் பயிற்சிகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனஅழுத்தத்தை வெற்றி கொள்ளவும் உடல் சக்தியை அதிகப்படுத்தவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் மருந்து மாத்திரைகளைத் தேடிப் போவதைவிட சில பயிற்சிகள் மூலம் அவற்றிற்குத் தீர்வு காணமுடியும் என்கிறனர் வல்லுநர்கள். பொதுவாக பயிற்சிகளின் போது மனமும் உடலும் நம் கட்டுப்பாட்டில் இருப்பதால் அவற்றை நம் விருப்பத்திற்கு ஏற்ப கொண்டு செல்லமுடியும். குறிப்பாக பெண்கள் இந்தப் பயிற்சிகளைச் செய்யும் போது அவர்களின் தன்னம்பிக்கை வளரும். மனஅழுத்தத்தில் இருந்து விடுபட இதைவிட எளிய சிகிச்சை வேறு எதுவாக இருக்கும். பின்வரும் பயிற்சிகளை நீங்கள் ஏற்கெனவே செய்திருந்தாலும், மீண்டும் இதன் மூலம் தொடருங்கள். நாள் தவறாமல் நேரம் கிடைக்கும்போது இவற்றைச் செய்து வாருங்கள்.

### தோள்களைச் சுழற்றுவது



மண்டியிட்டபடி நேராக நின்று கொண்டு கைகளை ஆறுதலாக (relax) கீழே தொங்க விடவேண்டும். பின்னர் தோள்களை மட்டும் பின் பக்கமாகச் சுற்ற வேண்டும். இப்படி 10 முறை செய்ய வேண்டும்.

### கைகளை உயரத் தூக்குவது

நேராக நின்று கொண்டு வலது கையை தலைக்கு மேல் நேராகத் தூக்க வேண்டும். முடிந்த அளவிற்கு கையைத் தூக்க வேண்டும். அந்த நேரத்தில் இடது கையை ஆறுதலாக வைத்துக் கொள்ள வேண்டும். இதே பயிற்சியை இடது கையை மேலே தூக்கியும் செய்யலாம்.

### விரிந்த மார்புக்கு

கால்களை அகலப்படுத்தி நிற்க வேண்டும். அப்படி நிற்கும்போது முழங்கால்கள் சிறிதளவு விரிந்திருக்க வேண்டும். அப்புறம் முழங்கால்களை தோள்பட்டைக்கு சமமாக இருக்கும்படி உயர்த்தி முழங்கால்களை மடித்து கைகளுக்கு 90 Degree ஆக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். தோள்களை இறுக்கி முழங்கால்களை முடிந்தளவிற்கு பின்னுக்கு இழுக்க வேண்டும். இந்நிலையில் 10-30 நொடிகள் இருந்துவிட்டு இயல்பு நிலைக்கு வர வேண்டும். இப்படி குறைந்தது 3முறை செய்ய வேண்டும்.

### கழுத்திற்குப் பயிற்சி

நேராக நின்று கொண்டு தலையைக் கொஞ்சம் இடது தோள் பக்கம் திருப்ப வேண்டும். அப்பொழுது முகவாய் கட்டை மார்புப் பக்கம் கொஞ்சமாக சாய வேண்டும். பின்னர் இடது கையை தலைமேல் வைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் தலை இன்னும் கொஞ்சம் குனிந்து கழுத்துப் பகுதி இன்னும் கொஞ்சம்



சாயும்படி செய்யலாம். இந்நிலையில் 10-30 நொடிகள் இருந்து இயல்பு நிலைக்கு வரவேண்டும். இப்படி 3முறை செய்த பின்னர் இதே மாதிரி பயிற்சி வலது தோள் பக்கம் செய்ய வேண்டும்.

### பின் காலின் சதைப் பகுதிக்குப் பயிற்சி

கத்தியால் சண்டைபோடும்போது நிற்பது போல் வலது காலை முன்நிறுத்தி நிற்க வேண்டும். பின்னுள்ள இடது காலின் அடி பாதம் லேசாகத் தூக்கியிருக்க வேண்டும். பாதங்கள் இரண்டுமே முன்னுக்கு இருக்க வேண்டும். கைகளை இடுப்பின்மேல் வைத்து இறுக்கப் பிடித்து உடம்பை நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பின்காலை தரையின் மேல் அழுத்தி நிற்க வேண்டும். இப்படி 10-30 நொடிகள் இருந்து இயல்புக்கு வரவேண்டும். இப்படி 3முறை செய்து, இடது காலை முன் நிறுத்தி பயிற்சி செய்யலாம்.

### பின் தொடையின் சதைப் பகுதிக்குப் பயிற்சி

இந்த உடற்பயிற்சியில் முதலில் ஒரு நாற்காலி அல்லது பெஞ்சுக்கு முன் நிற்க வேண்டும். உங்களுடைய பாதத்தை அந்த நாற்காலியின் மேல் வைக்க வேண்டும். அதனால் பாதங்களின் விரல்கள் மேலுக்குத் தூக்கப்பட்டிருக்கும். அப்புறம் கைகளை இடுப்பின் மேல் வைக்க வேண்டும். அல்லது கைகளை இடுப்பிற்கு பின் சேர்த்துப் பிடிக்க வேண்டும். இடுப்புப் பகுதியிலிருந்து மேல் பகுதியை நேராக வைத்து மார்புப் பகுதியை வலது காலின் பக்கம் சாய வேண்டும். அம்மாதிரி செய்யும் போது இடுப்புப் பகுதி வளைவாகத் திரும்பக் கூடாது. இந்நிலையில் 10-30 நொடிகள் இருக்க வேண்டும். இந்தப் பயிற்சியை 3 முறை செய்து, அப்புறம் வலது காலை நாற்காலியின் மேல் வைத்து இப்பயிற்சியைச் செய்ய வேண்டும்.



### தொடைகளுக்குப் பயிற்சி

கால்களை அகலப்படுத்தி நிற்க வேண்டும். அப்புறம் தோள் அளவிற்கு கைகளை உயர்த்தி முன்பக்கத்துக்கு சாய்க்க வேண்டும். தலையை நேராக வைத்து முன்னுக்குப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். வயிற்றுப் பகுதியை இறுகப் பிடித்து உடல் பளுவை இடுப்பிலிருந்து பாதங்களின் மேல் சமமாக வைத்து, நாற்காலியில் உட்கார்வது போல் அப்படியே உட்கார வேண்டும். தொடைகள் தரைக்கு இணையாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் முதலிலுள்ள நிலைக்கு வந்து இந்தப் பயிற்சியைத் தொடரவேண்டும்.

### பிட்டத்திற்கு பயிற்சி

ஒரு பெஞ்சு அல்லது நாற்காலியின் ஓரமாக உட்கார்ந்து, இடுப்பை நேராக வைத்து கால்விரல்கள் மட்டும் தரையைத் தொடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். லேசாகப் பின்பக்கம் சாயலாம். தொடையின் பின் பகுதியை இறுகப் பிடித்து கால்களை மெதுவாக உயர்த்திட வேண்டும். இப்படி இரண்டு மூன்று நொடிகள் இருந்து மறுபடியும் இப்பயிற்சியைத் தொடரலாம்.

### வயிற்றுப் பகுதிக்கு பயிற்சி

இந்த பயிற்சி பலமுறை சுவாசத்தை பலமாக சுவாசிக்க வேண்டியதுதான். சுவாசத்தை உள்ளிழுக்கும் போது கைகளை மேலே உயர்த்த வேண்டும். சுவாசத்தை வெளியே விடும்போது கைகளை இரண்டு பக்கம் விட்டுவிடவேண்டும். இப்படி 3 முறை செய்யவேண்டும்.

### கால்களுக்குப் பயிற்சி

முழங்கால் அளவுள்ள பெஞ்ச் முன்நிற்க வேண்டும். இரண்டு கைகளால் இடுப்பைப் பிடித்துக் கொண்டு வலது முழங்காலின் மேல் இடது முழங்காலின் பாதத்தை வைக்கவேண்டும். அப்புறம் வலது காலை கீழே வைத்து, அந்த காலின் மேல் இடது காலை மடித்து முழங்காலுக்கு மேலாக வைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு பக்கமும் 5 முறை செய்யலாம்.

முதலில் ஒரு பெஞ்சுக்கு முன் நிற்கவேண்டும். பெஞ்ச் மேலே கைகளை வைத்து, கால்களை பின்னுக்குச் சாய்ந்திட



வேண்டும். இந்நிலையில் பின் பாதங்களிலிருந்து தலை வரை ஒரே நேர் கோடாக இருக்கவேண்டும். அப்படி இருக்கும் போது கைகளை அகலமாக வைத்து பெஞ்சைப் பிடிக்க வேண்டும். அப்படி கொண்டு வரும்போது முழங்கைகள் சுமார் 90 Degree இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்புறம் மார்புப் பகுதியை மேலே இழுத்து இப்படி பலமுறைசெய்ய வேண்டும்.

### இடுப்புப் பகுதிக்குப் பயிற்சி

ஒரு பெஞ்ச் மேலே கைகளை பக்கமாக வைத்துக் கொண்டு உட்கார வேண்டும். அப்புறம் கால்களை முடிந்த அளவிற்கு முன்னுக்கு நகர்த்த வேண்டும். கைகள் கால்களின் மேல் பலத்தை வைத்து லேசாக உடம்பை பெஞ்சிலிருந்து தூக்க வேண்டும். அப்போது கால்கள், கைகள் தான் முழு ஆதரவாக இருக்கும் இந்த நிலைக்கு வந்த பிறகு உடம்பை கொஞ்சம் தரைப் பக்கம் கொண்டுவர வேண்டும். மறுபடியும் முதல் நிலைக்கு வந்து பயிற்சியைத் தொடரலாம்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# இருவகை அடிமைகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 154

இந்த உலகம் மிக அற்புதமான படைப்புக்களால் நிறைந்துள்ளது. ஒவ்வொரு படைப்பும் அதன் முழுமையிலும், அழகிலும் அற்புதமானதாக அமைந்துள்ளது. இதுவரை எமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்டுள்ள அனைத்தும் மட்டுமல்ல இனிமேல் அறியப்போகும் அனைத்தும் முழுமையும் அழகும் கொண்டவை. இயற்கை படைத்துள்ள அனைத்தும் ஒப்பீட்டுக்கு இடமளிக்காத வகையில் தனித்துவமானவை. இந்தத் தனித்துவத்தின் இணைப்புத்தான் சுதந்திரம். அதாவது தனித்துவமான ஒவ்வொன்றும் முற்று முழுதான சுதந்திரம் கொண்டவை. மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். முழுமையான சுதந்திரத்திற்கு உரியவர்கள்.

துரதிஷ்ட வசமாக, இந்த உலகத்தில் வாழும் உயிரினங்களில் தமது தனித்துவத்தை இழந்து விட்ட ஒரேயொரு உயிரினம் மனித இனம் தான். ஒவ்வொரு மனிதனதும் சுதந்திரம் இழக்கப்பட்டதனால் தனித்துவம் இழக்கப்பட்டுவிட்டது. சுதந்திரம் எப்படி இழக்கப்பட்டது? ஒவ்வொரு மனிதனும் அடிமையானதால் சுதந்திரம் இழக்கப்படல-ாயிற்று. இன்னொரு வகையில் கூறுவதானால் ஒட்டு மொத்த மனித இனமே அடிமையாகி விட்டது. இந்த உலகம் மனித அடிமைக-ளால் நிறைந்துகொண்டிருக்கின்றது. இங்கே "நிறைந்துகொண்டிருக்கின்றது'' எனெக் குறிப்பிடப்பட்டமைக்கான காரணம், தொடர்

KG Master–www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach

ந்து வரும் சந்ததியினர் கூட அடிமைகளின் வாரிசுகளாக்கப்படுவது தான். முதலில் அடிமைத்தனம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். அடிமைத்தனத்தின் அடித்தளமே சார்புத்தன்மையால் கட்டுப்படுத்தப்படுவது தான். ஏதாவது ஒன்றில் நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ சார்ந்திருந்தால் அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ சார்ந்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டால் நமது சுதந்திரம் இழக்கப்பட்டு விடுகிறது. ஏனெனில் சார்புத் தன்மை எம்மீது ஒரு கட்டுப்பாட்டை விதிக்கும். எப்பொழுது நாம் ஒன்றால் கட்டுப்படுத்தப் படுகிறோமோ அப்பொழுது எமது சுதந்திரத்தை இழந்து விடுகிறோம். அப்படியானால் "கட்டுப்பாடு இன்றி வாழ்வது தான் சுதந்திரமா'' என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததுதான். அதற்குச் சுதந்திரம் என்றால் என்ன என்பதை



நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். சுதந்திரம் என்பது "கட்டுப்படுத்தாமலும், கட்டுப்படுத்தப் படாமலும்'' வாழ்வது தான். துரதிஷ்டவசமாக மனிதர்கள் கட்டுப்படுத்துபவர்களாகவோ, கட்டுப்படுத்தப்படுபவர்களாகவோ அல்லது இரண்டும் சேர்ந்த கலவையாகவோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தத்தில் எல்லோரும் அடிமைகளாகி விட்டோம். நாம் எல்லோருமே அடிமைகள் என்பது தெளிவாயிற்று, ஆனால் எந்த வகையான அடிமை? அடிமையிலும் வகைகள் உண்டா? ஆமாம். அடிமைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று வாழும் அடிமைகள். மற்றையது வாழாத அடிமைகள். இப்போது இந்த இருவகை அடிமைகளையும் இனம்கண்டு கொள்வோம்.

முதலில் வாழும் அடிமைகளை இனங்கண்டு கொள்வோம். வாழும் அடிமைகள் தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொள்பவர்கள். தாமிட்ட விலங்கைத் தகர்க்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பவர்கள். சமூக அந்தஸ்துக்காக அல்லது போலியான கவுரவுத்துக்காக அல்லது போட்டி மனப்பான்மையால் அல்லது தவறான பிறர் புத்தியின் உள்வாங்கலால் அல்லது அளவுக்கு மீறிய ஆசையினால் தமது இயலுமைக்கு அப்பால் தெரிவுகளை மேற்கொண்டு அந்தத் தெரிவுகளினால் தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொள்பவர் கள். இந்தத் தெரிவுகள் இவர்களது சுயமான வாழ்க்கையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும். அடிக்கு மேல் அடி விழுவதனால் அவ்வப்போது கிடைக்கும் ஞானத்தைக் கொண்டு "வாழ்க்கை என்பது போராட்டம் தான், போராடித்தான் வாழ வேண்டும்'' என்று தமக்குத் தாமே தத்துவங்களைக் கூறிக்கொண்டு வாழ்வார் கள். இவர்களது வாழ்வதற்கான தெரிவுகள் சுயமானவை. தெரிவுகளின் விளைவுகள் பற்றிய தெளிவில்லாவிட்டாலும் தெரிவுகளின் உரிமையாளர்கள் இவர்கள். தெரிவுகளால் இவர்கள் கட்டுப்படுத்தப்பட்டாலும் சுய வாழ்க்கைக்கான சுய தெரிவுகளாக இருப்பதனால் இவர்கள் வாழும் அடிமைகள்.

வாழாத அடிமைகள் யார்? இவர்களுக்கு சுய புத்தி கிடையாது. எல்லாமே இரவல் புத்தி தான். இவர்களுக்குச் சொந்தமாகத் தெரிவு களை மேற்கொள்ளத் தெரியாது. இவர்களது மூளையின் சொந்தக்காரர்கள் இவர்களல்ல. மூளையை இரவல் கொடுத்துவிட்டு நடைப்பிணமாக இயங்கிக் கொண்டிருப்பார் கள். இவர்களது வாயால் வார்த்தைகள் வெளிவரும், ஆனால் அவை இவர்களது சொந்த வார்த்தைகளல்ல. இவர்கள் யாரோ சொன்னதை அப்படியே ஒப்புவிகின்ற கிளிப்பிள்ளைகள். ஏதோ ஒன்றில் அறிந்தோ அறியாமலோ முற்று முழுதான சார்புத் தன்மையைக் கொண்டிருப்பார்கள். தான் சார்ந்திருப்பதை விடச் சிறந்தது எதுவும் இந்த உலகத்தில் இல்லை என்று கிளிப்பிள்ளை போல் மீண்டும் மீண்டும் கூறிக் கொள்வார்கள். இப்போது உங்களுக்குள் ஒரு சந்தேகம் எழலாம். வாழும் அடிமைகள் எனக் குறிப்பிடப்பட்டவர்களும் சில சந்தர்ப்பங்களில் தமது மூளையை இரவல் கொடுத்து விடுகிறார்கள், அப்படி இருக்கும் போது வாழாத அடிமைகள் என வேறுபடுத்தப்படுதல் சரியானதா என்று. இங்கேதான் நாம் அடிப்படை வேறுபாட்டைக் கவனித்தல் வேண்டும். வாழும் அடிமைகள் தமது மூளையை வாழ்ந்து கொண்டிருப்பவ ரிடம் இரவல் கொடுத்து விடுவார்கள். அதனால் இவர்கள் வாழ்ந்து கொண்டிருப் பவரால் கட்டுப்படுத்தப் படுவார்கள். ஆனால் வாழாத அடிமைகளோ பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து போனவர் களிடம் இரவல் கொடுத்துவிட்டு அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து போனவர்கள் எதைச் சொல்லிவிட்டுப் போனார்களோ அதையே வாழ்க்கையென ஏற்றுக்கொள்ளும் இவர்கள் வாழாத அடிமைகள். ஏனெனில் இறந்தவர்களால் கட்டுப் படுத்தப்படுவதால் இவர்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் இருப்பதே இல்லை. நாம் எந்த வகையான அடிமைகள்? தெரிதலும் புரிதலும் எம்மிடம் மட்டுமே உள்ளது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000
- MAHARAJI -
மஹாராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# 'உள நோய்' அது மனநோய்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

மானிடர்களாகப் பிறந்து நாம் பல நன்மை, தீமைகளை அனுபவித்து, இன்பத்தில் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் ஒருவருக்கு உளநோய் ஏற்பட்டால் நிம்மதியை இழந்து வாழ்பவராகத் திகழுவார். இப்படியான உளநோய்ப் பிரச்சினை பரம்பரையாகவும் வர இடம் உண்டு என அறிய முடிகின்றது.

பரம்பரையாக வரும் என்றாலும் எல்லோருக்கும் அப்படி நிகழ்வதில்லை. ஒருவர் வாழும் சூழ்நிலை தனிநபர் காரணிகள், நெருக்கநிலை, இரைச்சல் என்பனவும் காரணமாக அமையலாம்.

மேலும் ஏதாவது சந்தர்ப்பத்தில் அவர் மனதில் ஆழமாகப் பதியும் சந்தோசமற்ற விடயங்கள், அதிக சந்தேகநிலை தனது ஆசைகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில், அளவு மீறிய துன்பநிலை மற்றோரிடம் பேசாமல் ஒதுங்கி இருத்தல், பதட்டம், அளவு மீறிய கவலை, மனப்போராட்டம் மனதைக் கட்டுப்படுத்த முடியாதநிலை போன்றவற்றால் மது, போதைப்பொருள் பாவனைகள் மற்றும் குடும்பப்பிரச்சினை போன்றவற்றினாலும் உளநோய் ஏற்பட காரணமாக அமையலாம். இந்நிலையில் உறக்கம் இன்றி அல்லது நீண்டநேரம் உறங்கித் தவிப்போரும் உண்டு. இந்நிலையில் சிலர் தற்கொலை செய்யும் எண்ணமும் உருவாகலாம்.

எனவே இந்நிலை ஆரம்பிக்கும் முன் உளநோய் நிபுணத்து மருத்துவரிடம் சென்று



எதனையும் மறைக்காமல் உண்மையான விடயங்களைக் கூறித்தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் தாங்கள் நிம்மதியான வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும். சாதாரண சந்தேகநிலை அதிகரித்து வாழ்வில் நின்மதியற்ற தன்மையை உருவாக்கிவிடும் என்பதையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இளம் வயதாக இருக்கும் போது அல்லது சில சந்தர்பங்களில் நமது மனதில் ஆழமாகப் புரையோடும் சந்தோசம்மற்ற விடயங்கள் அல்லது செயல்கள் அல்லது நம்மால் நிவிர்த்தி செய்ய முடியாத ஆசைகள், அதிவிரக்தியான துன்பநிலைகள் போன்றவற்றினாலும் உளநோய் தீவிரமடைய இடமுண்டு என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

நபர் ஒருவர் தமக்கு ஏற்படும் நிகழ்வுகளை தனக்கு நம்பத்தகுந்த ஒருவரிடம் கூற தகுந்த ஆலோசனைகளைப் பெறுவதுடன், மனம் நன்கு நிம்மதி அடைய உளநோய் வைத்தியரிடமும் சென்று உரையாடி தகுந்த சிகிச்சையைப் பெற தவறாதிருத்தல் வேண்டும். இதில் அக்கறையின்றி இருப்போமேயானால் நாம் மிதமான அல்லது பாரிய உளப்பிரச்சினையைத் தேடிக் கொள்வோம். எல்லாம் நம்மை நல்லாக்குவதும் அழிப்பதும் நமது திடமான மனநிறைவில் உண்டு. உரியவருக்கு இயலாத தன்மை காணப்படின் உறவினர்கள் தகுந்த கவனம் எடுத்து காப்பாற்றிக் கொள்வது மிக நன்மை பயக்கும்.

மேலும் சொல்லப்போனால் நமது உணர்வுகளை நல்வழியில் செலுத்துவோமானால் அதனால் பிரச்சினைகள் எழுவது தவிர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எத்தன்மையான உணர்வையும் ஏற்ற சூழல், ஆரோக்கியமான வழியில் வெளிக்காட்டாது விட்டால் அது ஒரு பிரச்சினைக்கு இட்டுச் செல்லும். கடும் கோபம், வெறுப்புத் தன்மையுள்ள அன்பு என்பனவற்றாலும் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே கோபத்தை தணித்து அன்புள்ளம் கொண்டு வாழ்வதினால் நல்வாழ்வு வாழமுடியும்.

ஆரம்ப, பாரிய உளப்பிரச்சினைக்கு முக்கிய அறிகுறியை நோக்கும் போது உரியவர் ஏதாவது ஒரு விடயத்தை நித்தம் சிந்தித்த படி காணப்படுவார். கலக்கத்துடன் சிலர் காட்சிகொடுப்பார். உறங்கும் நிலையில் திருப்தியின்மை, உணவு உண்பதில் மாற்றம். உறவினருடன் சந்தோசமில்லாத நிலை, தன்னுக்குள் நினைத்தபடி கதைத்தல், எந்நேரமும் தொடர்பற்று ஒதுங்கி வாழும் நிலை, பாலியல் விடயத்தில் மாற்றம், தன்வேலையில் ஒழுங்கீனம், தனது உடுபுடவைகளைக் கவனிப்பின்மை, தடுமாற்றம், உடல் அங்கங்களில் நாட்டமின்மை போன்றவை பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கும்.

இந்த உளநிலைப் பிரச்சினை ஆண், பெண் இருபாலருக்கும் ஏற்புடையதாகும். சில சந்தர்ப்பங்களில் ஆண்களிலும் பார்க்க பெண்களில் அதிகரித்துக் காணப்படலாம். எனவே உளநோய் பிரச்சினைக்கு வயது எல்லை இல்லை என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். சிறியோர் தொடக்கம் முதியோர் வரை நிகழ இடமுண்டு.

சில கணவன், மனைவியிடம் ஏற்படும் சந்தேகநிலை பாரதூரமானது. உரியவர்களுக்கு சந்தேகநிலை ஏற்பட்டால் தாமதிக்காமல் உடன் இருவரும் யோசித்து நிலைமையை நன்கு விளக்கிப் பிரச்சினை இன்றி ஒற்றுமையுடன் அன்பு செலுத்தி வாழப் பழகிக் கொண்டால் உளநோய் பிரச்சினையின்றி வாழமுடியும். தவறின் நாம் நமக்கே துன்பத்தை தேடிக்கொள்வோம். இதனால் பிரிவினையும் நிகழலாம். அளவிற்கு மிஞ்சிய சந்தேகம் மனதில் குடிகொண்டால் அதுவே ஆபத்தான உளநோயாகி விடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். விசர், பயித்தியம், அறளை பெயர்ந்தவர் என்ற சொற்களைத் தவிர்ப்பது நன்று.

எனவே உளநோய் எம்மைத் தாக்காதிருக்க சிறந்த உள்ளன்பும் ஆறுதலான சூழலும் முக்கியமாகும். ஒருவரை ஒருவர் ஒதுங்கிக் கொள்ளும் இயல்பை மாற்றிக் கொள்ள வேண்டும். சுகம் பெற்றுக் கொள்ள தங்களின் அன்பான ஒத்துழைப்பு முக்கியமாகும்.

சில சமயங்களில் சிலர் எதைச் செய்தாலும் சில சந்தேகக் கண்கொண்டு குழப்ப நிலையடைவதுண்டு. இந்த குழப்ப நிலை அதிகரித்து உளநோய்க்கு ஆளாகலாம். எனவே எது சந்தேகமானாலும் உடனுக்குடன் தெளிவு படுத்திக் கொள்வது நன்மை பயக்கும்.

மாணவர்களுக்கும் உளநோய் பற்றிக் கொள்ளும் நிலையும் உண்டு. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். படிக்கும் பாடங்களில் திருப்தி நிலை ஏற்படாது விடில் சிந்தித்து விரக்தியினால் உளநோய் ஏற்படலாம். இந்நிலையைத் தவிர்ப்பதற்கு தகுந்த உதவிகளைச் செய்து கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். ஊக்கம் ஆக்கம் தரும். உறுதுணை அளிக்கும்.

நாம் உளநிலைப் பிரச்சினையின்றி வாழ்வதற்கு மேற்கூறியவை எவருக்காவது தென்பட்டால் தாமதியாமல் உளநல மருத்து வரைத் தொடர்பு கொண்டு முற்கூட்டிச் சிகிச்சை பெற்றுக்கொள்வது மிக நன்றாகும்.

உளவளத்துணையால் எமது மனதில் உள்ள குறைகளைத் தவிர்த்துக் கொள்ள வழியமைக்கும். வாழ்க்கைச் சூழ்நிலை சிறப்படைய, சாதகமாக அமைந்து மகிழ்ச்சியாக வாழலாம். எனவே எவ்வயதினரும் கற்றுத் தோறக்கூடிய உளவளத்துறையில் ஈடுபடவேண்டும்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.707.4378*


# நண்பனைக் காப்பாற்றச் சென்று தனது உயிரை நீத்த "இளம் வீரன்" பிருந்தனுக்குத் தேசிய விருது

கடந்த வாரம் 12.10.2012 வெள்ளியன்று உயிரையும், தங்களது இழப்புகளையும் பொருட்படுத்தாது மற்றவர்களைக் காத்தற் பொருட்டு துணிச்சலுடன் அருஞ்செயல்களையும், தியாகங்களையும் கனடிய மண்ணில் புரிந்தவர்களைக் கௌரவிக்கும் 40 ஆவது வழங்கப்பட்டவர்களில் காலம் சென்ற "இளம் வீரன்" பிருந்தன் முதன்மையாக இருந்தார். பிருந்தனின் பெற்றோர் திரு. திருமதி முரளிதரன் நிகழ்வில் பங்குபற்றி பிருந்தனுக்காக வழங்கப்பட்ட விருதினைப் பெற்றுக்கொண்டனர். விருது கொடுக்கப்பட்ட



வருட தேசிய நிகழ்வு கனடிய ஆளுநர் டேவிட் ஜோன்சனின் ஒட்டாவோ "றிடோ" வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. விழாவில் முதலாவதாகக் கௌரவிக்கபட்டு விருது வேளையில் எடுக்கப்பட்ட படங்கள் கனடிய ஆளுநரின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 8

அண்மைக்காலத்தில் உள்ள ஐபிஎம் குடும்பக் கணினிகள் (IBM family computers) வின்டோஸ் 7 (Windows 7), விஸ்ரா (Vista), வின்டோஸ் எக்ஸ்பி (Windows XP) போன்றவற்றை இயக்க அமைப்பு மென்பொருட்களாகக் (Operating System Softwares) கொண்டு இயங்குகின்றன. இவற்றுள் மிகவும் அண்மையில் வெளி வந்தது வின்டோஸ் 7 ஆகும். வின்டோஸ் எக்ஸ்பிக்கு முன்னதாக வின்டோஸ் 2000, வின்டோஸ் மிலேனியம், வின்டோஸ் 98, வின்டோஸ் 95 போன்ற இயக்க அமைப்பு மென்பொருட்களைக் கொண்டு ஐபிஎம் குடும்பக் கணினிகள் இயங்கின. புதிய இயக்க அமைப்பு மென்பொருட்கள் தொழிற்படுவதற்கு அதிக சக்தி வாய்ந்த கணினிகள் தேவைப்படுகின்றன. பழைய கணினிகளை புதிய இயக்க அமைப்பு மென்பொருட்களைக் கொண்டு இயக்க முடியாமலும் அல்லது அவ்வாறு இயக்கும் பொழுது வேகம் குறைந்து தொழிற்படுவதும் உண்டு. சக்தி வாய்ந்த கணினிகள் என்று கூறும்பொழுது கணினிகளின் வேகம், நினைவகத்தின் அளவு போன்றவை முக்கியமான அம்சங்களாக உள்ளன.

அப்பிள் குடும்பக் கணினிகளுக்கு மக்கின்ரோஸ் (Macintosh) இயக்க அமைப்பு மென்பொருளாக உள்ளன. ஐபிஎம் கணினிகளுக்கு வின்டோஸ் போலாக பல Versions உள்ளன. முதலாவது Version



Mac OS ஆக இருந்தது. Mac OS 1, 2,3 எனப் பல versions வந்து 1999இல் Mac OS 9 வெளிவந்தது. 2011இல் Mac OS X 10.7 Lion வெளிவந்து இன்றுவரை பாவனையில் உள்ளது. பிந்தியதாக Mac OS X 10.8 Mountain Lion உள்ளது. அப்பிள் குடும்பக் கணினிகள் குறைந்த அளவில் காணப்படுவதால் ஐபிஎம் எதிர்கொள்ளும் அளவிற்கு வைரஸ் எனப்படும் தீங்கு விளைவிக்கும் மென்பொருட்களின் பாதிப்புக்கள் குறைவாக உள்ளன எனக் கூறப்படுகின்றது. வரைபியல் பயன்பாடுகள் (கிரபிக்ஸ் அப்பிளிகேசன்ஸ் Graphical applications) போன்ற குறிக்கப்பட்ட சில தொழிற்பாடுகளில் அப்பிள் கணினிகள் ஐபிஎம் கணினிகளை முந்தி விடுகின்றன என்பதையும் நாங்கள் கவனிக்கலாம். அப்பிள், ஐபிஎம் என்ற இரண்டு குடும்பக் கணினிகளைப் பற்றிச் சுருக்கமாக உரையாடிக் கொண்டோம். இப்பொழுது அப்பிள் நிறுவனத்தின் புகழுக்கு காரணமான அவர்களின் mobile computing device களில் முக்கியமான அப்பிள் ஐபாட் பற்றிக் கவனிப்போம்.

அப்பிள் ஏப்ரல் 2010இல் ஐபாட் (Ipad) எனப்படும் முதலாம் தலைமுறைக் கணினியாக ரப்லெற் கணினியை (Tablet computers) வெளியிட்டதன் மூலம் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த வகையான அப்பிள் கணினிகள் apple iOS என்ற இயக்க அமைப்பு மென்பொருளாக விளங்குகின்றது. நான்காம் தலைமுறை ஐபாட் ஆக ஐபாட் மினி (ipad mini) நவம்பர் 2012இல் வெளிவர உள்ளது. ரப்லற் கணினிகள் Wi-Fi மூலம் இணையத்தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பது, சிறிய அளவில் இருப்பது, அப்பிள் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள எண்ணற்ற அப்ஸ் (apps) என அழைக்கப்படும் பயன்படு மென்பொருட்கள் (application softwares) ஆகியவை இந்த வகைக் கணினியின் பிரசித்திக்கு முக்கியமான காரணிகளாக உள்ளன. மேலும் வீடியோ செய்வதற்கும், புகைப்படம் எடுப்பது, மின் அஞ்சல் அனுப்ப முடிவது போன்ற வசதிகளும் ரப்லற் கணினிகளை மேலும் பிரபல்யப்படுத்துகின்றன. ஆனாலும் இவற்றால் notebook or Laptop computers இற்கும் Desktop computers இற்கும் மாற்றீடாகக் கொள்ள முடியாத அளவிற்கு சக்தியிலும், மென்பொருள்களின் திறனிலும் பின்தங்கியே உள்ளன. எதிர்காலத்தில் இத்திசையில் தொழில்நுட்பம் விரிவடையலாம். அப்பிளின் mobile computing வளர்ச்சி மிகவும் ஆரோக்கியமாக உள்ளது என்றே கூறவேண்டும். மார்ச் 2012 க்கு முந்திய காலப்பகுதியில் 700 மில்லியன் ஐபாட் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இரண்டாம் தலைமுறை ரப்லற் கணினியாக ஐபாட் 2 (iPad 2) மார்ச் 2011இல் வெளிவந்த பொழுது முதலாம் தலைமுறைக் கணினியை விட 33 வீதம் கணினியின் தடிப்பில் குறைந்ததாகவும், பாரத்தில் 15 வீதம் குறைந்ததாகவும் இருந்தது. இத்துடன் முந்தியதைவிட வேகம் கூடியதாகவும், கமரா வசதி கொண்டதாகவும் இருந்தது. ஐபாட் 2 மூன்றாம் தலைமுறைக் கணினியாக மார்ச் 2012இல் வெளிவந்தது. இதில் திரையகத்திலும், வேகத்திலும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டது. அக்டோபர் 2012இல் ஐபாட் மினி (iPad mini) பற்றிய அறிவித்தலை வெளியிட்டது. நவம்பர் 2012இல் சந்தைக்கு வரவுள்ள இரண்டு வகையான அப்பிள் ஐபாட் மினி 330 அமெரிக்க டொலருக்கும் 460 அமெரிக்க டொலருக்கும் விற்பனையாகவுள்ளன.

நாங்கள் இப்பொழுது நுகர்வோர் கணினிகள் (Personal Computers) பற்றிய சில அடிப்படையான விடயங்களைப் பற்றிக் கவனிப்போம். ஒரு கணினியின் அத்தியாவசியமான பாகங்கள் (essential devices (hardwares)) மையச்செயலகம் (Central Processing Unit, திரையகம் (Monitor), சாவிப்பலகை அல்லது விசைப்பலகை (Keyboard) என்பவை ஆகும். இந்த மூன்று பாகங்களும் இல்லாது ஒரு கணினி தொழிற்பட முடியாது. இவற்றை விட மேலதிக பாகங்களாக (optional devices) சுண்டெலி (மவுஸ் Mouse), அச்சுப்பொறி (Printer ), வருடி (Scanner), டிஜிற்றல் கமரா (Digital Camera), ஸ்பீக்கர் (speaker), மைக்கிரோபோன் (Microphone), பார் கோர்ட் றீடர் (Bar code Reader), புளொட்டர் (Plotter), டிஜிற்றைசர் (Digitizer) என்பவற்றைக் குறிப்பிடலாம். தகவல்களை உட்செலுத்த உதவும் பாகங்களை Input Devices என்றும், கணினியில் இருந்து தகவல்களை வெளிக்கொணர உதவும் கருவிகளை Output Devices என்றும் கூறுவோம். விசைப்பலகை அல்லது கீபோர்ட் essential Input Device ஆகும். இதனைப் போல் ஒவ்வொரு பாகத்தையும் Input Device ஆகுமா அல்லது Output Device ஆகுமா என ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். திரையகம் ஒரு essential



Output Device ஆகும். அச்சுப்பொறி, ஸ்பீக்கர், புளொட்டர் என்பவை optional output devices ஆகும். மைக்கிரோபோன், பார் கோர்ட் றீடர், டிஜிற்றைசர் என்பவை optional Input Devices ஆகும். ஒரு நுகர்வோர் கணினியில் உள்ள பாகங்களைப் பற்றியும் சுருக்கமாகக் கவனித்தோம். கடல்போல் ஆழமான கணினி உலகில் உள்ள பல விடயங்களைப் பற்றி எல்லோரும் அறிந்து கொள்ளச் செய்யும் முயற்சியாக இந்தத் தொடர் கட்டுரை தொடர்கின்றது. என் அன்புக்குரிய வாசகர்களே! தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# நால்வர் நான்மணி மாலை

அகவல்

விளங்கா தவர்க்கு விளங்கா இறைவன்
விளங்கும் குருவாய் வீற்றிருந் தருள
களங்கமில் லாத கண்ணீர்ப் பத்தியில்
உளங்கரைந் தூறித் தேறித் தெளிந்தே
பாட வேண்டும் போற்றிப் பரமனைப்
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும் என்றே அம்பலத்
தாடும் ஐயனைப் பாடப் பாடப்
பிறந்த தாமோ பெரும
சிறந்த திருவா சகச்செந் தேனே. (8)

வெண்பா

தேனார் மொழியார் திருமுலைப்பால் உண்டதமிழ்க்
கோனே சமயக் குருமணியே - ஞானத்
திருவுருவே சீர்காழி செய்ததவப் பேறே
முருகனுக்கு நீயென் முறை. (9)

கட்டளைக் கலித்துறை

முறையான தாண்டவ மூர்த்தியின் கீர்த்தியை முன்பிருந்தே
அறியாதார் யாருளர் ஆயினும் அப்பூதி யாரேயன்பால்
நிறைவாகக் கண்டவர் பேரினில் நேர்ந்துதண் ணீர்ப்பந்தலை
நிறுவித்தா கந்தீர்த்த தொண்டு நெகிழ்விக்கும் நெஞ்சினையே. (10)

விருத்தம்

அணிந்தவர் அழகா யாடை
அறிந்தவர் சிவனார் அன்பு
பணிந்தவர் புகழைப் பாடி
பரவினார் பத்தி யாலே
மணந்ததம் பரவை ஊடல்
மாதவர் தூதி னாலே
தணிந்திடச் செய்த தோழர்
தாளிணை போற்று வாமே. (11)

அகவல்

போற்றி ஞான நெறியதன் போக்கை
மாற்றி யமைத்த வாதவூ ரைய
மந்திரி என்று மன்னவன் நம்பிச்
சுந்தரப் பரிகள் சோதித்து வாங்கத்
தந்தசெல் வத்தைத் தவறான வழியில்
சிந்தைசெய் யாது செலவுநீ செய்தாய்
என்னுமோர் குற்றச் சாட்டையுன் மீது
மன்னவன் சுமத்தித் தண்டனை வழங்கினன்
உண்மையைச் சொல்வாய் உத்தம
அண்ணலா நீயா செய்தவர் யாரே. (12)

வெண்பா

யார்தந்தார் பாலென்றே தந்தை அதட்டிடவும்
பார்வதியார் பாலூட்டப் பார்த்திருந்தும் - சீர்காழிப்
பேரானைச் சுட்டியதேன் பிள்ளையரே தீர்த்தருளும்
பாராரின் ஐயம் பரிந்து. (13)

கட்டளைக் கலித்துறை

பரிந்து திலக வதியாரும் வேண்டப் பரமனருள்
சுரந்துறு சூலைநோய் தோற்றுவித் தப்பரைத் தொல்சமயம்
பரந்தெழ மீண்டும் அழைத்தனர் பல்லவன் பார்த்தவரை
விரைந்தழைத் தின்னல் விளைத்துண்மை கண்டடி வீழ்ந்தனனே. (14)

விருத்தம்

வீழ்ந்திலர் வழக்கில் தோற்றும்
வெறுத்திலர் தடுத்தாண் டாலும்
தாழ்ந்திலர் சத்தி யத்தில்
தவறித்தும் கண்போ னாலும்
ஆழ்ந்தநற் பத்தி யாலே
அற்புதச் சத்தி பெற்று
வாழ்ந்தவன் தொண்டர் வாழ்க்கை
வளர்ச்சிக்குப் பாட மாமே. (15)



கவிஞர் வி. கந்தவனம்

# கள்வனை அடிப்பது குற்றமா?

**இன்டர்நெட்டும் அதன் இன்னோரன்ன தொழில்நுட்பமும் உலகை இணைத்து விட்டாலும் நல்ல சிந்தனை, மானுடம் மனித உரிமை என்று வரும்போது உலகம் வேறுபட்டு நிற்கின்றது.**

'திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'. 'திருடாதே பாப்பா திருடாதே' பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் என்கின்ற ஒரு தமிழ் கவிஞரின் அந்த அர்த்தம் பொதிந்த பாடல் வரிகள் சமீபத்தில் என் எண்ணத் திரையில் வந்து சென்றன.

இதற்கு காரணம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நெதர்லாந்தில் (Holland) நடந்த ஒரு சம்பவம் தான். ஒரு வீட்டில் கள்வன் புகுந்து விட்டான். வீட்டிலிருந்தவர்கள் விழித்து விட்டனர். வீட்டவர்களுக்கும் கள்வனுக்கும் மோதல் நடந்தது. கள்வன் மயங்கி வீழ்ந்து விட்டான். காவல் துறையினர் வந்து கள்வனை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கே அவன் மரணித்து விட்டான். வீட்டவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். பத்திரிகைகள் பரபரத்தன. விடயம் நாடாளுமன்றம் வரை சென்றது. 'இது அவனாகத் தேடிக்கொண்டது' என்று கருத்துச் சொன்னார் நீதித்துறைக்கான துணை அமைச்சர். இந்தக் கருத்தை அவர் சார்ந்த கட்சி உட்பட அநேகமாக எல்லாக் கட்சிகளுமே ஆட்சேபித்தன. தன்சுயபாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிமை உண்டு. ஆனால் அதற்காக எல்லோருமே சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துவிட முடியாது. சட்டத்தை பாதுகாக்கவே நீதிமன்றங்கள் இருக்கின்றன என்பதாக வலியுறுத்தின அரசியல் கட்சிகள். ஒரு திருடனின் மரணம் சட்டவிரோதமான முறையில் நிகழ்ந்திருக்கக் கூடாது என்பதே சனநாயகம் வாழும் நெதர்லாந்தில் அரசியல் வாதிகளின் வாதமாக அமைந்தது. எந்த ஒரு தனி மனிதனுக்கும் நீதி தவறு இழைத்துவிடக்கூடாது என்பதே அவர்கள் சொன்ன செய்தி.

சோரம் போன பெண் ஒருத்தியை கல்லால் எறிந்து கொல்ல முயன்றவர்களிடம் ஒரு பாவமும் செய்யாதவர்கள் முதல் கல்லை எறியுங்கள் என்றார் இயேசு. அந்த மகானின் வழியில் நின்று, மரணதண்டனை கொடுக்கும் சட்டத்தை தூக்கிவீசிவிட்டு நிமிர்ந்து நிற்கிறது ஐரோப்பா. ஐரோப்பாவில் வாழும் பெருமையை பெறுகின்ற அதேவேளை எங்கள் தாயும் தந்தையும் அவர்களின் முந்தையரும் வாழ்ந்த மண்ணில் நடக்கும், நடந்த கொடுமைகள் உள்ளத்தில் ஏற்படுத்தும் வலிகள் ஏராளம். இன்டர்நெட்டும் அதன் இன்னோரன்ன தொழில் நுட்பங்களும் உலகை இணைத்து விட்டதாக சொல்கிறார்கள். ஒருவகையில் உண்மைதான். தகவல்கள் சுடச்சுட உலகெங்கிலும் பரிமாறப்படுகின்றன. கனடாவில் நடக்கும் கல்யாணகாட்சிகள் ஐரோப்பாவிலும், தாயகத்திலும் வாழும் உறவுகளால் உடனுக்குடன் பார்த்து மகிழ்ப்படுகின்றன.

ஆனால் நல்ல சிந்தனை, ஜனநாயகம், தனிமனித உரிமை, மானுடம் என்று வரும்பொழுது உலகம் இன்னமும் சிதறியே கிடக்கின்றது. ஒரு புறத்தில் திருடனாயிருந்தாலும் அவனுக்கும் நீதி உண்டு என்று வலியுறுத்தப்படுகிறது. உலகின் இன்னொருபுறத்தில் உரிமை கேட்டதற்காக பேரழிவைச் சந்தித்து மௌனமாக அழுது கொண்டிருக்கிறது ஓரினம். தங்கள் மண்ணில் தங்கள் மொழியை பண்பாட்டை பாதுகாத்து சுயமரியாதையுடன் வாழ்வதற்காக தசாப்தங்களாக போராடும் அந்த மக்களுக்கு சனநாயக அடிப்படையில் நீதி கிடைக்குமா? அரசியல் வாதிகளின் சிந்தனைகளில் மாற்றம் வருமா?

***வரலாம் அன்பர்களே! இதற்குப் காலங்கள் பல நாங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்!***

தவா மயில்வாகனம்
நெதர்லாந்து


ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண
திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880


## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 20ஆவது ஆண்டு மலர்

எமது இணையம், அடுத்த ஆண்டு தனது 20 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதன் நினைவாக, மலர் ஒன்றை வெளியிட நாம் முடிவு செய்துள்ளோம். அதற்காக உங்களிடமிருந்து தகுதியான ஆக்கங்களை, கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சிறுகதையாகவோ எதிர்பார்க்கின்றோம். தயவுசெய்து அவற்றை canadatamilwriters@gmail.com என்ற எமது மின்னஞ்சலுக்கு நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு உங்களை அன்புடன் கேட்கின்றோம்.

அத்துடன் நவம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணி முதல் 8:30 மணிவரை எழுத்துப்பட்டறை ஒன்றை Scarborough Civic Centre இல் நடத்தவும் நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கும் உங்களின் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 416.284.9158 / 416.429.9784

# சர்வாலயதீபம் - ஒளிவிழா எனப்படும் கார்த்திகைதீபம்

**'விளம்பரம்' வாசகர்களுக்கு எமது உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.**

கார்த்திகை மாதம் என்றதும் நமது நினைவிற்கு வருவது கார்த்திகை விளக்கீடாகும். ஈடு என்றால் அடுக்கடுக்கான வரிசை என்று பொருள். கார்த்திகை மாதம் ஒளி, நெருப்பு என்பவற்றுடன் தொடர்பு உடையது. கார்த்திகை விழாவை 'ஒளிவிழா காணாதே போதியோ பூம்பாவாய்' என்று பாடியுள்ளார் திருஞானசம்பந்தர். கார்த்திகை மாதம் என்றதும் நமது நினைவில் நிழலாடுவது திருவண்ணாமலைத் திருத்தலமாகும். திருவண்ணாமலை என்பது எட்டமுடியாத திருத்தலம் என்று பொருள். ஆனால் ரமண ரிஷிக்கு அது எட்டக்கூடியதாக இருந்தது பொருள். ஆங்கே இறைவன் சோதிப் பிழம்பாக தோன்றியதை நினைவுகூரும் முகமாக கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தில் மிகப்பெரிய தீபம் அங்கு ஏற்றப்படுகின்றது. திருவண்ணா மலை உச்சியில் பெரிய அண்டா ஒன்றை வைத்து அது நிறைய நெய் ஊற்றி ஒரு கச்சு வெள்ளைக் கோடித்துணியை அதிலிட்டு பஞ்சமூர்த்திகளின் முன்னிலை யில் சீலைக்கு நெருப்பு மூட்டுவார்கள். அது சுவாசித்து எரியும் காட்சி என்பது அச்சுற்றாடலில் உள்ளவர்களுக்கும் தெரிவதாகக் கூறுவர். இத்தீபம் மூன்று நாட்கள் மலை உச்சியில் ஏற்றப்படுவதால் பலபேர் பார்க்கக் கூடியதாக இருக்குமாம். தொடர்ச்சியாக எரிந்து கொண்டிருக்கும். பிரமா, விஷ்ணு இருவருக்கும் இடையில் இறைவன் அனற்பிழம்பாய் தோன்றித் தனது முதன்மையை உணர்த்தினார் என்பது புராணக்கதை. 'அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற் போல' என்பதற்கேற்ப இறைவன் சோதி சுடர், சூளொளி விளக்கு என்பர் மணிவாசகர் விளக்கு ஏற்றக் கற்றுக் கொண்ட மனிதன் நாகரிகப் பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்தான். காட்டில் தற்செயலாக ஏற்பட்ட தீயை அறிந்து கொண்ட மனிதன் அதனை தன் வாழ்வில் பயன்படுத்திக் கொண்டான். ஒளியேற்றவும், குளிர் காயவும், மிருகங்களை விரட்டவும், உணவை சமைத்து உண்ணவும் அதனை பயன்படுத்தினான். முதலில் பனை ஓலை களையும், மரக்கட்டைகளையும் எரித்து விளக்காக உபயோகித்தவன் அப்பால் எண்ணையைக் கண்டு பிடித்ததினால் தனது அறிவு முதிரவே, கற்குழியிலும், சங்கிலும், கிளிஞ்சலிலும் எண்ணையை ஊற்றி விளக்கேற்றினான். மண்ணெண்ணை, இலுப்பெண்ணை, வேப்பெண்ணை, விளக்கெண்ணை, தேங்காய் எண்ணை, பசுநெய் என்று விளக்கிற்குரிய எண்ணை பல வகைப்படும். மின்விளக்கு விஞ்ஞானக்



கண்டுபிடிப்பு. விளக்கு; பொருட்களை விளங்க வைப்பதால் அது காரணப்பெயர் ஆகும். அஞ்ஞானம் என்ற இருளை விரட்ட நம் முன்னோர்கள் ஜோதி வழிபாட்டை மேற்கொண்டனர். அவ்வழக்கத்தை ஒட்டியே நாம் கார்த்திகையில் ஒரு நாளை ஜோதி வழிபாடாகக் கொண்டாடுகின்றோம். ஒளி கடவுளைப் போல் எங்கும் நிறைந்துள்ளது. அது இல்லையேல் கனல் இல்லை. அது இன்றி கடல் ஆவி இல்லை. ஆவி இன்றி மழை இல்லை. மழை இன்றி உயிர் இல்லை. எனவே அந்த ஒளிக்கு ஒரு விழா. அதுவே தீபத் திருநாள். பண்டைத் தமிழர்கள் ஞாயிறு, திங்கள், நெருப்பு என்பவற்றை வழிபட்டது, ஒளி வழிபாட்டை உணர்த்துவதேயாகும். ஓசை, ஒலி வடிவாக விளங்கும் இறைவன் ஒளி வடிவாகவும் விளங்குகின்றான். இதனை 'ஒளியாய் உயிர்க்குயிராய் நின்றான்' என்பதாலும், 'சோதியுள் ஒரு சோதி' என்பதாலும் 'தூண்டா விளக்கின் சுடரனையான்' என்பதாலும், 'ஞானச்சுடர் விளக்கு' என்பதாலும் 'பரஞ்சோதி' என்பதாலும் அறியலாம். ஒளிவிளக்கிற்கே ஆலயம் அமைத்தவர் இராமலிங்க வள்ளலார்.

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதி சிவமே
அருளமுதே அருள் நிறைவே அருள்வடிப்பொருளே
இருள்நடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே.
என்பது அவர் வாக்கு.

முருகனுக்குரிய நட்சத்திரம் விசாகம். அதனால் அவனுக்கு விசாகன் என்ற பெயரும் உளது. கார்த்திகை அவனுக்குரிய விசேட நட்சத்திரமாகும். முருகன் சிவனின் நெற்றிக் கண்ணினின்றும் நிலமிசை வந்தவன். எனவே அவனுக்கு அக்கினிப்பூ என்ற பெயரும் உளது. பரணி, கார்த்திகை நட்சத்திர நாட்கள் நெருப்பு நாள் எனப்படும். எனவே இத்தினங்களில் நல்ல காரியம் எதுவும் செய்யமாட்டார்கள். மேலும் மழைக்காலத்தின் முடிவை அறிவிப்பது விளக்கீடு. இதனால் விளக்கீட்டால் மழை கிழக்கிட்டுப் போகும் என்னும் கூற்று ஏற்பட்டது. எனவே முருகன் ஆலயங்களில் விளக்கீடு சிறப்பாகக் கொண்டப்படுகின்றது. அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாக இன்புறு சிந்தை இடுதிரியாய் கொண்டு பூதத்தாழ்வார் விளக்கேற்றினார்.

கார்த்திகை தீபத்தை வீட்டு விளக்கீடு, சர்வாலய தீபம், குமாராலய தீபம் என்று மூன்று வகையாகக் கொண்டாடுவார்கள். வீட்டிலும் வீட்டை சுற்றியுள்ள இடங்களிலும் தீபம் ஏற்றி வணங்குதல் வீட்டு விளக்கீடு எனப்படும். முருகன் ஆலயங்களில் தீபம் ஏற்றி வழிபடுதலும் சொக்கப்பனை கொளுத்துவதும் குமாராலய தீபம் எனப்படும். ஏனைய ஆலயங்களில் தீபம் ஏற்றி சொக்கப்பனை கொளுத்துவது சர்வாலய தீபம் எனப்படும். பனைமரத்தை வெட்டி நடுவில் வைத்து சுற்றிலும் பனை- மடலை வெட்டிகட்டி வைத்து கொளுத்துவதால் சொக்கப்பனை என்னும் பெயர் வந்தது எனலாம். சொக்கனாகிய சிவபெருமானை குறித்து இதனை செய்வதாலும் 'சொக்கப்பனை' என்ற பெயர் வந்திருக்கலாம். சொக்கன் பாவனை என்றும் இதனைக் கொள்ளலாம். இறைவன் ஒளிப்பிழம்பு என்பதை உணர்த்துவதே இதன் உட்கருத்து.

பலவகைப்பண்டங்களை உண்டு மகிழுந்து கொண்டாடும் பண்டிகை தீபாவளி. பட்டினி இருந்து அனுட்டிக்கும் விரதம் கார்த்திகை விரதம். சாதாரண மனிதர் நல்லெண்ணெயால் தீபம் ஏற்றுவர். மகான்கள் நல்லெண்ணத்தால் தீபம் ஏற்றுவர்.

**விளக்கிட்டார் அடையும் பேறு மெய்ந்நெறி ஞானமாகும்.**



நா. க. சிவராமலிங்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனுக்கு தலைக்கோல் விருது

கே. எஸ். பாலச்சந்திரன் அவர்களுக்கு தலைக்கோல் விருது வழங்கும் வைபவம் ஸ்காபரோ விலேச் கொம்யுனிற்ரி மண்டபத்தில் (Scarborough Village Community Center) குரு அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது. இப்பாராட்டு விழா அரங்கம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவில் பாலச்சந்திரனின் வரலாற்றுப் பதிவான 'பாலச்சந்திரன் என்றொரு கலை ஆளுமை' என்ற பாராட்டு நூலும் சோக்கல்லோ சண்முகத்தால் தொகுத்து, மொன்றியல் இரா. நடராஜா அவர்களின் அனுசரணையோடு வெளியிடப்பட்டது. பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற தலைக்கோல் விருது வழங்கும் விழாவை மொன்றியல் இரா. நடராஜா, தா. சண்முகநாதன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

திரு. கே. எஸ். பாலச்சந்திரன், திருமதி. எட்னா பாலச்சந்திரன், திருமதி மாலினி அரவிந்தன், மொன்றியல் இரா. நடராஜா, ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். தமிழ்வாழ்த்து, கனடிய தேசியகீதம் ஆகியன செல்விகள் ஆதிரை விமலநாதன், சங்கவை விமலநாதன் ஆகியோரால் பாடப்பெற்றன. தொடர்ந்து கனடா லயபவ டான்ஸ் அக்கடமி அதிபர் நிருத்தியகலாமணி ஸ்ரீமதி கிருபா இரத்தினேஸ்வரனின் மாணவிகளான அகல்யா பார்த்தீபன், பிரேமி சாந்தமூர்த்தி ஆகியோரின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து அமைப்பாளர் மொன்றியல் நடராஜாவின் வரவேற்புரை இடம்பெற்றது. அடுத்து இடம் பெற்ற விழாத் தலைவர் குரு அரவிந்தனின் உரையில் 'வாழும்போதே ஒரு கலைஞனைக் கௌரவிக்க வேண்டும் என்ற சிந்தனையோடு தமிழகத்தில் அமுதன் அடிகளார் இலக்கிய விருதைப் பெற்ற கலைஞரும், எழுத்தாளருமான அண்ணை ரைட், தணியாததாகம் புகழ் கே. எஸ். பாலச்சந்திரனைப் பாராட்டி இச்சந்தர்ப்பத்தில் கனடிய கலை, இலக்கிய ஆர்வலர்கள் சார்பில் விருது வழங்குவதில் பெருமைப்படுகிறோம்' என்று குறிப்பிட்டார். அடுத்து சோக்கல்லோ சண்முகம் வில்லடிப்பாட்டுக் குழுவினரின் 'பாரதி பித்தன் பாலச்சந்திரன்' என்ற வில்லிசை நிகழ்ச்சி



இடம் பெற்றது. சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த வில்லிசை நிகழ்ச்சி பலராலும் பாராட்டப்பட்டது. இதில் பங்குபற்றிய கலைஞர்கள் சோக்கல்லோ சண்முகம், நளினி குகசீலன், இராஜ்மீரா இராசையா, சி. விமலநாதன், வி.ரி. இராஜேந்திரன், இ. உருக்குமணிகாந்தன், கலாபூசணம் சிவபாதம், வி. டின்சன், சசி, சுதாகரன், நமோ நாகேஸ்வரி ஆகியோர் மிகவும் சிறப்பாக வில்லிசை நிகழ்ச்சியை நடத்தியிருந்தனர்.

தொடர்ந்து கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனுக்கு தலைக்கோல் விருது வழங்கும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. திரு. மொன்றியல் நடராஜா விருதை திரு வி. என். மதியழகனிடம் கையளிக்க அவர் தலைக்கோல் விருது பற்றிய விளக்கத்தைக் கூறி அதை கே. எஸ். பாலச்சந்திரனுக்கு வழங்கினார். திரு. பி. விக்னேஸ்வரன், திரு. ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோரும் பாராட்டு வழங்கினர். ஆடல் பாடல்களில், கூத்து நடிப்புகளில், இசைத் திறமைகளில் அறிவும் திறமையும் உள்ளவர்களைப் பாராட்டி தலைக்கோல் விருது கொடுத்திருப்பதாக சங்க இலக்கியங்களில் இருந்து தெரிய வருகின்றது. ஆடலழகி மாதவிக்கு இவ்விருது கிடைத்ததாக குறிப்புகள் கூறுகின்றன. மலைப்புக்குரிய சிறப்பினை எய்தியவருக்கு தலைக்கோல் பட்டம் உரித்து' என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய கலைக்கோல் விருது கனேடிய கலைத்துறை வரலாற்றில் முதன் முதலாக கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து 'பாலச்சந்திரன் என்றொரு கலை ஆளுமை' நூல் வெளியீடு நடைபெற்றது. மொன்றியல் இரா. நடராஜா வெளியிட பாலச்சந்திரனின் தாயார் மகேஸ்வரி சுப்பிரமணியம் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார். திரு. கந்தசாமி கங்காதரன் நூல் விமர்சனம் செய்தார். மூலப்பிரதியைத் தழுவிய அவரது விமர்சனம் இருந்ததால் அதன் பின் நூலில் ஏற்பட்ட திருத்தங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் அவரது விமர்சனம் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

தொடர்ந்து வானொலி நாடகங்கள், திரைப்படக் கலைஞர் திரு. வைரமுத்து திவ்வியராஜனின் உரை இடம் பெற்றது. பாலச்சந்திரனுக்கும் திரைப்படத் துறைக்கும், குறிப்பாகக் கனடிய தமிழ் திரைப்படத்துறைக்கும் உள்ள தொடர்புகள் பற்றி அவர் உரையாற்றினார். அடுத்து 'பார்க்காத பக்கங்கள்' என்ற தலைப்பில் பாரிசில் இருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் திருமதி. தமிழ்ப்பிரியா இளங்கோ அவர்கள் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திரு. சுப்பிரமணியம் இராசரத்தினத்தின் உரை இடம் பெற்றது. பாலச்சந்திரனின் கலை இலக்கிய சாதனைகள் பற்றி அவர் உரையாற்றினார். அடுத்து விழாவின் நாயகன் கே. எஸ். பாலச்சந்திரனின் ஏற்புரை இடம் பெற்றது. அவர் தனது ஏற்புரையில் விழாத் தலைவருக்கும், விழா அமைப்பாளர்களுக்கும், மற்றும் உரையாற்றியவர்களுக்கும், வருகைதந்து தன்னைக் கௌரவித்தவர்களுக்கும், ஆக்கங்களைத் தந்து உதவியவர்களுக்கும், ஒலி ஒளி அமைப்புச் செய்து உதவிய வி.ரி. இராஜேந்திரன், இரா. மைக்கேல் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்தார். அவரது ஏற்புரையைத் தொடர்ந்து 'பாலாவின் நனவோடை' என்ற விவரணச்சித்திரம் இடம் பெற்றது.

தமிழக அமுதன் அடிகளாரின் இலக்கிய விருதுபெற்ற கே.எஸ். பாலச்சந்திரனுக்கு ரொறன்ரோவில் பாரதி கலைக்கோயில் சார்பாக மதிவாசன் ஏற்கெனவே 2011ல் விழா எடுத்திருந்தார். பல கலைஞர்களின் ஆக்கங்கள் இடம் பெற்ற, எழுத்தாளர் குரு அரவிந்தன் தொகுத்து வழங்கிய வரலாற்று நூலை பவதாரணி பாரதி கலைக் கோயில் வெளியிட்டிருந்தனர். இந்த நூலில் இடம் பெற்ற 'ஒரு நடிகன் எழுத்தாளராகின்றார்' என்ற குரு அரவிந்தனின் கட்டுரையில் பாலச்சந்திரனின் வாழ்க்கை வரலாறு பதிவாகியிருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது. இறுதியாக செல்வி. வித்தியா சிவகுமார், செல்வி. சங்கவி சிவகுமாரன் ஆகியோரின் தமிழ்தாய் வாழ்த்து கனடிய தேசிய கீதத்துடன் விழா இனிதே முடிவுற்றது.

**- மணிமாலா -**


## CAREER COUNSELING WORKSHOP FOR

High School Students (Grades 9 - 12 ) &
Parents organized by

**ASSOCIATION OF SRILANKAN GRADUATES OF CANADA (ASGC)**
**INCLUSIVE SCHOOL & COMMUNITY SERVICES OF YORK REGION**
**DISTRICT SCHOOL BOARD IN PARTNERSHIP WITH**
**CANADIAN TAMIL ALUMNI(CTAA) , CANADIAN MEDICAL DENTAL DEVELOPMENT ASSOCIATION**
**(CMDDA)& SRILANKAN ACCOUNTANTS ASSOCIATION OF CANADA (SAAC)**

உயர்தரப் பாடசாலை மாணவருக்கும் (தரம் 9 - 12)பெற்றோருக்கும் பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்கான வழிகாட்டல் பட்டறை

**காலம்:** Saturday, November 03, 2012
**நேரம்:** காலை 9:30 - 3.30
**இடம்:** Middlefield Collegiate Institute, 525 Highglen Avenue.
Middlefield Road & Highglen Avenue, Markham, ON

பின்வரும் விடயங்களில், கனடாவில் பட்டம் பெற்ற பல்துறைசார் நிபுணர்களால் வழிகாட்டல் கலந்துரையாடல்கள் இடம்பெறும். தொழில்களைத் தெரிதல், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கான தெரிவுகள், புலமைப் பரிசில் அனுமதிக்கான விண்ணப்பங்கள் உயர்தரப் பாடசாலைகளில் பாடநெறிகளைத் தெரிவு செய்தல்.

வாருங்கள்! பல்துறைசார் நிபுணர்களைச் சந்தியுங்கள்! சரியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்!
(இலவசமாக சிறிய மதியபோசனமும் வழங்கப்படும்)

பதிவுசெய்வதற்கு அழையுங்கள் - எஸ்.சிவநாயகமூர்த்தி: 416.267.6712
ஆர். தவரட்னசிங்கம் 416.522.9972
இனிதா சுப்பிரமணியம்: 1.877. 280. 8180+270
E-Mail asgc.career@gmail.com



## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## KOKUVIL NIGHT 2012

காலம்: *Saturday November 17, 2012.*
நேரம்: *6:00 PM*
இடம்: *Princess Banquet Hall*
*3330 pharmacy Ave. Scarborough, ON*
*PHARMACY & MCNICOLL*

***416.414.3327 / 647.741.6645 / 416.321.9696***


Trinity Events
VIJAY
TV PARTNER
PRESENTS
பிரபல பாடகர்கள்
Yuvan
Karthik Raja
This Legendary Singer Official Announcement will be on OCT 14/2012
KJ Yesudas
Hariharan
Mano
Vijay Yesudas
Karthik
Haricharan
Bhavatharani
K.S. Chitra
Sadhana Sargam
Manjarai
Bella Shende
Ramya
தென்னிந்திய திரைப்பிரபலங்கள்
Vivek
Gobinath
Sneha
Prasanna
Gautham Menon
Parthiban
Bharathiraja
எங்கேயும்... எப்போதும்...
ராஜா
NOV 3 2012
100 க்கும் மேற்பட்ட இந்திய இசை கலைஞர்கள் பங்குபெறும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
TICKETS AVAILABLE AT:
SCARBOROUGH
PHOTO FAST LTD
416-757-1623 416-230-3733
ANNAMS JEWELLERS
416-265-9166
KUMAR VIDEO
416-292-9043
NANTHA CATERING
416-626-8421
UTHAYAS SUPERMARKET
416-742-1425
MARKHAM
MARKHAM VIDEO
905-294-4253
SOUTH ASIAN SUPER MARKET
905-201-9833
MISSISSAUGA
NEW KAVERI SUPER MARKET
905-290-6925
BRAMPTON
GOLUMBIA VIDEO
905-456-8433
VAUGHAN
MAPLE SHANGHAI
905-417-6069
MONTREAL
514-944-9315
ROGERS CENTRE (SKYDOME)
TOLL FREE : 1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com
TICKETS: VVIP, $150.00(VIP), $100.00, $80.00, $60.00, $39.00

# SKN FINANCIAL




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில்**
**தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

**உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..**

**குறைந்த வட்டி!..**

**நிறைந்த பெறுமதி!...**

## SKN FINANCIAL

**அன்பான சேவையைக் கனடாவில் வழங்கும் நிறுவனம்.**




# 416 – 269 – 5393

**4 - 2677 Eglinton Ave. East, Scarborough, ON M1K 2S2 (Eglinton & Brimley)**


மற்றுமொரு சந்தர்ப்பம்
TRIDEL இன் புதியவரவு
TEN YORK
RISING ABOVE IT ALL
TRIDEL®
BUILT FOR LIFE
416.321.6969
GARDINER EXPY.
LAKESHORE BLVD. W
LOWER
SIMCOE ST.
TEN YORK
YORK ST.
BAY ST.
HARBOUR ST.
LAKESHORE BLVD. E
QUEENS QUAY W.
Exclusive Brokerage
VIP ACCESS & Special Price
Call for more
information
www.homelifegtarealty.com
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3.
Off: 416.321.6969
Fax: 416.321.6963
Off: 905.712.2666
Fax: 905.712.0037



# TEMPLE GREENS

**100 % Vegetarian Food Take-out & Catering**

கனடா சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தில்

**உயர்தர சைவ உணவகம்**

18 பதார்த்தங்களுடன் வாழையிலைச் சாப்பாடு பெற்றுக்கொள்ளலாம்

திருமணம், ருதுசாந்தி, அரங்கேற்றம், நூல்வெளியீடு, திவசம், மாசியம், மாளையம் இன்னும் பல வைபவங்களுக்கும் 50இல் இருந்து 1000 பேர் கொண்ட மண்ட வசதிகளுடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.



**416.335.7700**
**416.335.7300**

Sun City Plaza
2761 Markham Rd., Unit-28
Toronto, ON M1X 0A4
ayyappancanada.com

கனடா சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில்

# சில மணி நேரத்தில் வீட்டில் இருந்துகொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?







## சந்தையை தீர்மானிக்கும் சூப்பர் பவர்கள்!

தெளிவான திட்டமிடல், நேர்த்தியான அணுகுமுறை, தொடர்ச்சியான ஆர்வம், தளராத மனநம்பிக்கை இதனோடு கொஞ்சமே கொஞ்சமாய் பணம் இருந்தால் போதும் சாதித்து விடலாம், சாதிக்கலாம் வாருங்கள்!

## EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:

டெக்னிக்கலாக ஸ்ட்ராங்காகவும், ஃபண்டமென்டல் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகவும் வந்து சந்தையை நல்ல வேகத்தில் மேலே எடுத்துச் சென்றுவிட்டது EMini S&P 500 - 1468 என்பது மிகச் சுலபமான டார்கெட்டாகவும் 1443 WILL PENETRATE TO 1457 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505 வரையிலும் போகும் பலம் பெற்றதாகவும் சந்தை மாறியுள்ளது. செய்திகள் பாசிட்டிவ்வாக வந்துகொண்டேயிருப்பதால் இந்த டார்கெட் வந்தேவிடலாம். அதே சமயம் தற்பொழுது 1424 Retracement செய்துள்ளது, 1428 WILL SLIDE DOWN TO 1417 AND 1409 TO HIT THE PREVIOUS LOW 1387!

222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

# சார்பியல் - 6

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

மைக்கல்சன் - மோர்லியின் **(Albert Michelson & Edward Morley)** பரிசோதனை முடிவுகள் அவர்கள் எதிர்பார்த்த முடிவினைக் கொடுக்கவில்லை. மாறாக, முற்றிலும் எதிர்பாராத, ஆச்சரியமான முடிவினை கொடுத்திருந்தது. ஆறுமாத கால இடைவெளிகளில், தொலை விண்மீனில் இருந்து வந்த ஒளியின், பரிசோதனை முடிவுகளில் இருந்து கணிக்கப்பட்ட வேகங்களில் எதுவித மாற்றங்களும் இல்லை. இரண்டு பெறுமானங்களும் ஒன்றாகவே இருந்தன. கணிப்புகளில் ஏதும் தவறு ஏற்பட்டடிருக்கலாம் எனக் கருதிய அவர்கள் அவற்றினைச் சரிபார்த்தபோது, அவற்றில் தவறுகள் ஏதுமில்லை. இப்பரிசோதனை முடிவின்படி, ஈதர்க்காற்றின் விளைவானது அங்கு காணப்படவில்லை. இது எப்படிச் சாத்தியம்? பரிசோதனையில் ஏதும் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதிய மைக்கல்சனும் மோர்லியும் மீண்டும் அப்பரிசோதனையைச் செய்தார்கள். மீண்டும் அதே முடிவுகள்தான். அடுத்து ஆறு மாத இடைவெளியிற்குப் பதிலாக, மூன்று மாத இடைவெளியில் ஒளியின் வேகத்தினை ஈதர்க்காற்றின் விளைவுடன் பார்க்க முயற்சித்தார்கள். இம்முறையும் அதே ஆச்சரியமான முடிவுகள்தான் கிடைத்தன. அதாவது புவியின் இயக்கத்திசையானது ஒன்றுக்கொன்று செங்குத்தான திசைகளில் இருந்த போதும் கூட, வருகின்ற ஒளியின் வேகத்தில் மாற்றத்தினைக் காணமுடியவில்லை. அதாவது ஈதர்க்காற்றின் விளைவினை எந்நிலையிலும் காணமுடியவில்லை. இயற்பியல் உலகில் இச்செய்தியானது பெரும் பரபரப்பாகப் பேசப்படத் தொடங்கியது. சிலர் பரிசோதனையில் பிழை என்றார்கள். வேறுசிலர் பரிசோதனைக் கருவிகளைக் குறை கூறினார்கள். இன்னமும் சிலரோ பெறப்பட்ட தரவுகள் ஒழுங்கான முறையிற் தொகுக்கப்பட்டுக் கணிப்புக்கள் செய்யப்படாமல் இருந்திருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்தார்கள். மைக்கல்சன் - மோர்லியின் பரிசோதனையின் சிக்கலான முடிவினைக் கண்டு விஞ்ஞானிகள் பலர் தாமும் அப்பரசோதனையைச் செய்து பார்த்தார்கள் எல்லோருக்குமே ஒரே முடிவுதான் கிடைத்தது. புவியின் எந்த நிலையில் இருந்தும் பார்க்கையிலும் கணிக்கப்பட்ட ஒளியின் வேகம் ஒரே பெறுமானம்தான். ஈதர்க்காற்றின் விளைவானது காணப்படவேயில்லை. 1887ம் ஆண்டில் இருந்து 1905ம் ஆண்டு வரையில் பல பரிசோதனைகள் செய்யப்பட்டுவிட்டன. எதிர்பார்த்த விளைவானது கிடைக்கவில்லை. அக்காலத்தில் பெருமையுடன் பேசப்பட்டுக் கொண்டிருந்த செம்மைப் பௌதீகத்தின் சகல வழிகளிலும் விளக்கம் கொடுக்கப் பார்த்தும் முடியவில்லை. செம்மையை விலத்திப் பார்க்க அவர்களால் முடியாதிருந்தது. அவ்வளவிற்குச் செம்மைப் பௌதீகம் இயற்பியலை ஆட்சி செய்து கொண்டிருந்தது. அக்கால விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை இயற்பியல், செம்மைப் பௌதீகத்துடன், அதாவது செவ்வியலுடன் முற்றுப் பெற்று விட்டது, இயற்பியலில் புதிதாகக் கண்டுபிடிப்பதற்கு எதுவுமில்லை என்பதே கருத்தாக இருந்தது.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



### 3. லோறன்சின் விளக்கம்

இச்சிக்கலை ஆராய்ந்த டச்சு தேசத்தின் விஞ்ஞானியான ஹென்றிக் லோறன்ஸ் **(Hendrik Lorentz)** என்பவர் புதியதோர் விளக்கத்தினைத் தனது கணித முடிவுகளின் துணையுடன் கொடுத்தார். ஈதரின் சட்டத்தில் பொருட்கள் இயங்கும் போது, அப்பொருட்கள் அவை இயங்கும் திசையிற் சுருங்குகின்றன என்பதனை அவரது கணித முடிவுகள் காட்டின. அதாவது ஈதரினுள் பொருட்கள் இயங்கிக் கொண்டு வருகையில் அப்பொருட்கள் உருவத்தில் சிறியனவாகின்றன. அதனால் பொருட்களிடையேயான தூரம் அதிகரிக்கும். இன்னொரு விளைவையும் லோறன்ஸ்சின் சமன்பாடுகள் காட்டி நின்றன. ஈதரிலே இ.யங்குகின்ற பொருட்களின் நேரமானது பொருளின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க, மெதுவாகின்றது. இதன்படி, ஈதரில் இயங்காது ஓய்வில் இருக்கிற பொருளினது கடிகாரம், இயங்கிக் கொண்டிருக்கிற பொருட்களில் உள்ள கடிகாரத்தைவிடக் கூடுதலான நேரத்தைக் காட்டும் என்பதாகும். இது எப்படியெனில், ஈதரில் ஓய்வில் இருக்கின்ற ஒருவரது கடிகாரம், ஓடிவருகிற அவரது நண்பர் பத்து நிமிடங்கள் ஓடியதாகக் காட்டுகையில், ஓடி வந்த அவரது நண்பரின் கையில் இருக்கும் கடிகாரம் 9 நிமிடங்கள் அவர் ஓடியது போலக் காட்டுவது போன்றது. (விபரம் பின்னர் தெளிவாகப் பார்ப்போம்.) புவியும் ஒளியும் ஈதரில் வெவ்வேறு வேகங்களில் இயங்கிக் கொண்டு இருப்பதனால், புவியில் இச்சிறிதாகலும் நேரக் குறைவும் ஏற்படுகிறது. இச்சிறிதாகலும் நேரக்குறைவும் ஒன்று சேர, ஒளியின் வேகமானது எந்நிலையிலும் ஒரே பெறுமானமானதாக இருக்கும் வண்ணம் அமைகிறது. அதனால்தான் மைக்கல்சன் மோர்லியின் பரிசோதனையில் புவியின் எந்நிலையில் இருந்தும் விண்மீனில் இருந்து வருகிற ஒளியின் வேகமானது கணிக்கப்படும் போதும் ஒரே பெறுமானமாக இருக்கின்றது என்றார் லோறன்ஸ். லோறன்சின் விளக்கங்களை அடுத்த தடவையில் தெளிவாகப் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# BASEMENT RENT

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 647.720.0898

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 905.471.2582 / 647.505.2582

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.305.7317

**STAINES & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Family preferred. 647.833.7471 / 416.803.4184

**MCCOWAN & MCNICOLL**
Large 1 bedroom bsmt for rent. Sep. entrance, washroom, kitchen, livingroom, parking. Close to TTC. Avail. immediately. Couple preferred. தொடர்புகளுக்கு: 416.321.8558

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401 & all facilities. Avail. Anytime. 647.724.8116 / 647.740.4695

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 15, 2012. தொடர்புகளுக்கு: 416.836.2253

**EGLINTON & MIDLAND**
2 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking. Bills inclusive. Close to Kennedy subway, school, TTC. 416.750.0363 / 416.759.9675

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2012. Couple preferred. 905.209.9212 / 416.562.5113

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.648.3137

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.839.0679

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Everything included. Close to school, TTC, Malvern mall. No pets & No smoking. Ladies preferred. Avail. immediately. 416.269.7052 / 416.358.7265

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, mall, TTC. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.755.8397

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. New Lamanite floor. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.268.3019

**KENNEDY & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, Laundry. Close to all facilities. Available Immediately. தொடர்புகளுக்கு: 416.752.4599

**BELLAMY & PANDORA CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred. 416.438.2559 / 416.454.3469

**LAWRENCE & SCAR.GOLF CLUB**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, Tamil stores. Avail. immediately. 416.438.2857 / 416.728.9580

**STEELES & MIDLAND**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 905.470.2859

**MARKHAM & DENISON**
Newly renovated 1 large bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.821.2344

**KENNEDY & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, hospital. Avail. December 01, 2012. 416.819.6654 / 647.703.7781

**BRIMLEY & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. 416.431.5195 / 416.439.1570

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 647.347.1685 / 647.449.1685

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.272.7594

**LAWRENCE & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.588.2410

**ELLESMERE & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime. 416.419.7873 / 416.335.9290

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 416.627.7556 / 416.409.8896

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. ***4 Bedroom house for sale. Close to all facilities.*** தொடர்புகளுக்கு: 416.456.7420

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Seniors or Single person preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.840.4557

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couple preferred. Avail. immediately. 647.343.2387 / 647.680.5093

**LAWRENCE & MARKHAM**
1 Bedroom bsmt & 1 Bachelor apt. for rent. Close to all facilities. Parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. 416.627.6194 / 416.282.9235

**WARDEN & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. Anytime. Single person preferred. 416.889.3191 / 647.607.1937

**MORNINGSIDE / SHEPPARD**
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. Mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. 416.834.1081 / 647.783.9063

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. 416.335.9608 / 416.844.4164

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, Tamil stores, Temple, Grace Hospital, school. Avail. immediately. 416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

**MORNINGSIDE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.287.6990

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.857.4724

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: ***416.551.8379***

**MORNINGSIDE & SHEPPARED**
Newly renovation 2 bedroom bsmt for rent. Sep. entrance, cable, internet. Couple or students preferred. Close to TTC, mall. 416.286.1755 / 647.852.3806

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.804.5002

**MIDDLEFIELD & ELSON**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, York region. Avail. immediately. 647.284.6758 / 905.201.6422

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 905.554.0849

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.519.9265

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.371.8101

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.505.4316

**MCCOWAN & 14TH AVE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.725.6863

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Furnitures included. Close to all facilities. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.456.7286

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. November 01, 2012. தொடர்புகளுக்கு: 416.438.3724

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2012 905.534.2121 / 416.669.1859

**VICTORIAPARK & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Utilities included. Close to TTC, school. தொடர்புகளுக்கு: 416.499.6893 Weekdays: 5:00pm / Weekends: Anytime

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## BASEMENT FOR RENT

**MCLEVIN & NEILSON**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC,mall, school, bank.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.771.8426

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
No smoking & No pets.
905.334.7398 / 905.554.3327

**14TH AVE. & BOX GROVE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, Markham, Stouffville hospital.
416.605.5011 / 905.554.3703

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, washroom, kitchen. Close to all facilities. Couple preferred.
Avail. November 01, 2012.
905.294.1117 / 647.962.4315

**WESTERN & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to HWY 401.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.614.9467

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc.
Avail. immediately.
905.201.4812 / 647.768.1499

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.752.5038 / 647.208.9096

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school & all facilities.
தொடர்புகளுக்கு: 905.294.1018

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, mall.
Avail. November 01, 2012.
416.335.3638 / 647.821.1284

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.947.8018

**MORNINGSIDE & FINCH**
Newly done 1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.0339

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & DENISON**
One Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. No drinks & No pets.
416.823.3415 / 905.472.3548

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.
Avail. immediately.
647.827.5529 / 647.294.2212 / 647.717.9537

**16TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Very convenience location.
தொடர்புகளுக்கு: 416.264.3899

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to temple, mall, Tamil stores.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

**SCAR.GLOG CLUB & ELLESMERE**
**MCCOWAN & MCNICOLL**
**BRIMORTON& ORTON PARK**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.620.3198

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking. No smoking, no pets. Close to school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.3018

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All utilities, parking. Close to TTC, plaza & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.9994

**MORNINGSIDE & KINGSTONE**
Brand new One bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MCCOWAN &LAWRENCE**
One bedroom bsmt also Available.
416.902.1758 / 416.294.6000

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, mall.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.2325

**MARKHAM & STEELES**
2 bedroom walk-out bsmt apt for rent. Parking, sep. entrance, own laundry. Close to all amenities all inclusive.
905.471.1527 / 416.509.2855
E-mail: babita.koulen@ca.pwc.com

**ELLESMERE & KENNEDY**
1 Bedroom bsmt for rent. Laundry, washroom, kitchen. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
416.298.1598 / 647.239.7269

## ROOM FOR RENT

**KENNEDY & SHEPPARD**
One Master bedroom for rent in a condo. Parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.309.2350

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc.
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.852.1296

**FINCH & NEILSON**
1 big bedroom for rent. Sep. washroom, laundry, park, cable. Close to mall, TTC, etc.
2 bedroom bsmt also available.
Home: 416.332.8517 / Cell: 647.289.8780

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.949.1968

**MARKHAM & ELLESMERE**
One Bedroom for rent in apartment. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.231.6591

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail.immediately.
416.609.0349 / 416.725.3665

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC until 2.00am. Close to all facilities. Avail. immediately. Rent $325.
தொடர்புகளுக்கு: 416.660.8367

**STAINES & STEELES**
1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
பெண்கள் விரும்பத்தக்கது
416.805.5722 / 647.348.1913

**MARKHAM & ELSON**
Rooms for rent in main floor. Ladies preferred. Parking. Close to all facilities. Avail. Anytime.
647.206.9438 / 905.201.8320

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**MORNINGSIDE & MCNICOLL**
**(Season Dr.)**
1 Bedroom for rent. Parking, laundry. Ladies preferred. Avail. Anytime.
416.833.8903 / 416.880.8272

மேலும் பக்கங்கள் 24, 26

## ROOM FOR RENT

**674 KENNEDY RD**
**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.298.4800 / 416.454.4466

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom immediately available in bsmt for rent with sep. entrance. Including parking, laundry and washroom also available.
416.291.3153 / 647.388.2478
416.754.0823 (Call after 6.00pm)

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence YRT. ஒருவர் விரும்பத்தக்கது.
Available: immediately.
416.994.9635 / 416.757.9456

**DONMILLS & SHEPPARD**
3 Bedroom in main floor rent. Kitchen, laundry, parking. Close to TTC, bank, school, Donmills subway, HWY 401, 404.
Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.502.8053 / 416.788.3292

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
416.438.2626 / 647.286.7687

**MORNINGSIDE & NEILSON**
ஒரு பெரிய அறை (large Master bedroom) வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.873.4316

**MIDLAND & STEELES**
One Bedroom for rent. Parking, kitchen, washroom. Avail. immediately.Close to all facilities. தொடர்புகளுக்கு: 416.894.9309

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.557.7241

**BSMT / ROOMS FOR RENT**
**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. avail. immediately. Close to TTC, mall, Centennial college.
647.706.4881 / 416.439.4076

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**

# பரதநாட்டிய அரங்கேற்றம்

ஸ்ரீமதி குமுதினி ஸ்ரீகாந்தனின் மாணவியர் செல்விகள் ஹனுஜா மற்றும் ரம்மியா கணேசின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த ஒக்ரோபர் 7ம்திகதி மார்க்கம் தியேட்டரில் இடம்பெற்றது.

தந்தையைப் பின்பற்றி பரதக் கலையின் சாத்திரிய நெறிமுறைகள் தவறாது அதனடிப்படையில் தனது கலாபவனம் நடனக் கல்லூரியை நடத்திவருவதோடு அதே நெறிமுறைகளை தனது பரத அரங்கேற்றத்திலும் மேற்கொண்டு வருபவர் ஸ்ரீமதி குமுதினி ஸ்ரீகாந்தன்.

விநாயகர் ஸ்லோகத்தோடு 'ஸரிஹமபதநி' என்னும் சுரவரிசையோடு ஆரம்பமானது பரதநாட்டிய நிகழ்வுகள். அதனோடு தொடர்ந்து அலாரிப்பு, ஜதீஸ்வரம் என்னும் நடனக் கோர்வைகள் தொடர்ந்து இடம்பெற்றன. ஆரம்பத்தில் இடம்பெற்ற விநாயகர் கௌத்துவம் சற்று வித்தியாசமாக சபையோரை எடுத்த எடுப்பிலேயே கவரும் தன்மையில் புதிய ஒரு உருப்படியைப் புகுத்தியிருந்தார் நடன ஆசிரியை. தனது மாணவியரின் திறனை எடுத்த எடுப்பிலேயே காட்டும் வண்ணம் அமைந்தது. தொடர்ந்து நாட்டை இராகத்திலும் சதுஸ்ர ஏக தாளத்திலம் அமைந்த விஷ்ணு கௌத்துவம் 'தாதித் தொம் நம்' என்னும் தாளச் சுருதியோடு 'இலங்கை ராவணனும்' என்னும் வரிகளால் விஷ்ணு புகழ் பாடல் பரவசமூட்டியது. தொடர்ந்து 'சகியே இந்த ஜாலம்' என்ற பாடலுக்கான பதவர்ணம் தோடி இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமையப்பட நட்டுவாங்கத்தோடு வர்ணம் இடம்பெற்றது.

**- கலா ரசிகன் -**

'கங்கை நதிப்புறத்து நந்தவனத்தில்' என்னும் பாடலுக்கான கீர்த்தனத்தை தனியாகவே தந்தார் சகோதரிகளில் ஒருவரான ரம்மியா. பிருந்தாவன சாரங்கா இராகத்திலும் ஆதிதாளத்திலும் அமையப் பாட நடனம் சிறப்புற்றது. அடுத்து இடம்பெற்ற கீர்த்தனம் 'எல்லையில்லா இன்பம்' என்னும் பாடலை அமிர்தவர்ஷினி இராகத்தில் அமைய இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவரது புதல்வி ஸ்ரீமதி கானப்பிரியா மயூரன் பாடினார்கள். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நடனம் 'குயிலே பாடு மயிலே ஆடு வெண்பனி மண்ணில் செந்தமிழ் முழக்கம் கேட்குதே' என்னும் பொன்னையா விவேகானந்தனின் சொற்கட்டுக்களால் அமைந்த பாடலுக்கு வலஜ்ஜி இராகத்தில் இசை தந்தனர் இன்னிசை வேந்தரும் அவரது புதல்வியும். அதற்கு அருமையான அபிநயம் தந்தனர் சகோதரிகள்.

தில்லானாவைத் தொடர்ந்து இம்பெற்ற மங்களத்தோடு நடன நிகழ்வு முடிவுற்றது. தில்லானாவின் ஆரம்பத்தில் நடனச் சகோதரிகள் சற்றுத் தடுமாற்றம் அடைந்தமையைக் கவனித்த



நடன ஆசிரியை தனது நட்டுவாங்கத்திறனைக் காட்டி அவர்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்ட வந்தமை அவரின் ஆளுமையை வெளிப்படுத்தியது. இந்த நடன நிகழ்வில் நட்டுவாங்கம் சிறப்பாகக் காணப்பட்டமைக்கு அவர் தந்தையின் புதல்வி மட்டுமல்ல மூத்த சகோதரி ஸ்ரீமதி சாந்தினி அவர்களின் பயிற்சியும்தான் காரணம் என்பதனை அறியமுடிந்தது. இடையிடையே உடை யலங்கார நேரங்களில் பேச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. உடைமாற்றுவதற்கு எடுத்தநேரம் சற்று அதிகமாகவே காணப்பட்டது எனலாம். ஒன்ராறியோ மாகாண குடிவரவு அமைச்சர் சாள்ஸ்சோனின் விருது நடனச் செல்விகளுக்குக் வழங்கப்பட்டது.

பிரதம விருந்தினராக வெஸ்ரன் பல்கலைக்கழக பேராசிரியர் என். இராஜ்குமார் கலந்துகொண்டு உரையாற்றும் போது நடனச் செல்விகளின் குடும்பத்தோடு உள்ள உறவினையும் நடனத்தின் சிறப்பையும் எடுத்துரைத்ததோடு பரதக்கலை பரத முனிவரால் நான்கு வேதங்களிலும் இருந்து எடுத்து எழுதப்பட்டது எனவும் அது ஐந்தாவது வேதமாகக் கொள்ளப்படுகின்றது என்னும் கருத்தையும் பரதத்திற்கு உயிரூட்டுவது பக்கவாத்தியங்கள் எனவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார் மருத்துவக் கலாநிதி ஷகிலா நவயோகராஜா. இந்த இரு நடனச் செல்விகளும் அதிக திறமை உள்ளவர்கள். அவர்கள் விளையாட்டு, பாடசாலைக் கல்வியல் மிகவும் சிறப்பாகத் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர் என்ற அவர் அவர்களது குடும்பத்தோடு நான் மிகவும் நெருக்கமாகப் பழகிவருபவர் என்றும் நடனச் செல்விகளைக் குழந்தைப் பருவம் முதலே நன்கு அறிவேன் என்றும் உரைத்தார். இந்த நடன நிகழ்வை ஆரம்பத்தில் பொன்னையா விவேகானந்தன் தொகுத்து வழங்கினார். பின்னர் தொலைக்காட்சி ஒலிபரப்பாளர் ராம்பிரசாத் அவர்கள் நெறிப்படுத்தினார். மேற்படி அரங்கேற்றத்திற்குப் பிரபல இசை வித்தகன் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவரது புதல்வி ஸ்ரீமதி கானப்பிரியா மயூரன், மிருதங்க வாருதி வாசுவேன் இராஜலிங்கம், வயலின் வித்துவாட்டி ஸ்ரீமதி தனதேவி மித்திரதேவா, வேணுகான வாருதி டாக்டர் தயாபரன் ஆறுமுகம், செல்வி சுஜா ஸ்ரீகாந்தன் ஆகியோர் முன்னணிக் கலைஞர்களாக மேடையை அலங்கரித்தனர். இவர்களோடு நடன ஆசிரியை ஸ்ரீமதி குமுதினி அவர்கள் நடுநாயகமாக நட்டுவாங்கம் செய்தார். இறுதியாக நன்றி தெரிவித்து உரையாற்றினர் நடனச் செல்விகள். தங்கள் குருவுக்கும் சிறப்பாக பெற்றெடுத்த அன்னைக்கும் அவர்கள் தமது நன்றிக்கடனைத் தெரிவித்து உரையாற்றினர். அத்தோடு



முன்னணிக்கலைஞர்கள் அனைவரையும் தங்களுக்கு உதவி யமைக்கும் நெறிப்படுத்தியமைக்கும் நன்றி கூறினர்.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at *Scarborough & Stouffville*

***Contact: 647.340.9490 / 647.831.0363***

**COMMERCIAL UNIT FOR SALE**

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough. ***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

**வீடுகள், கொண்டோக்கள் வாடகைக்கு**

- மிட்லண்ட் / லோரன்ஸ் இல் கொண்டோ
- கெனடி/எல்ஸ்மயரில் கொண்டோ
- நீல்சன் / செப்பேட் இல் பேஸ்மண்ட்
- பிக்கரிங்கில் பேஸ்மண்ட்

மேலும் பல வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மண்ட்கள் வாடகைக்கு உண்டு

**அழையுங்கள்...**

**Jey 416-816-9011**

Jey Rasathurai
Sales Representative

Rapid Realty Inc. Brokerage
www.rapidrealty.ca
Bus:416-259-2002

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6

*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

## OFFICE SPACE FOR RENT

**MARKHAM & NASHDENE**
**MARKHAM & HIGHGLEN**
தொடர்புகளுக்கு: 416.418.5749

## CAR FOR SALE

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## வாகனம் விற்பனைக்கு

Honda odyssey 1999. Green colour. 160,000km. Running conditioning.
தொடர்புகளுக்கு: 416.666.5627

## CAR FOR SALE

2004 Mercedes Benz ML350. Silver Colour. Good condition. All brand new tires. DVD Player installed. Mileage 138,000 KM.
2007 Hino model 268. Five-ton strike tracker automatic. Good condition.
647.703.0427 / 416.627.7386

## தையல் வகுப்புக்கள்
## தையல் Orders

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## மணமகள் தேவை

France ஐ வதிவிடமாக் கொண்ட 42 வயதையுடைய ரோமன் கத்தோலிக்க விவாகரத்தான மணமகனுக்கு கனடாவில் பெண் தேவை. விவாகரத்தான பிள்ளைகள் அற்ற மதம் மாறக்கூடிய பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.335.0758

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 36 வயதுடைய கனடாவில் வேலை பார்க்கும் குடியுரிமை பெறாத மணமகனுக்கு PR Card உள்ள மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.707.9839

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை வதிவிடமாக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 647.918.5520

## TUITION
## KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## FOR SALE

3 Peace sofa set. New black colour leather sofa set for sale. $700.
647.686.3283 / 416.939.9714

## CONDO FOR RENT

**VICTORIAPARK & EGLINTON**
2 Bedroom condo for rent. Parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.854.6197

**MCCOWAN & HWY 401**
1 Den condo for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

## HOUSE FOR SALE
## PRIVATE SALE

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom + Den house for sale.1 washroom. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.1661

## HOUSE FOR SALE

யாழ்ப்பாணம் KKS வீதியில் பழைய Milk White Company க்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணியுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளும் நிறைந்த இரண்டுமாடி வீடு விற்பனைக்கு உண்டு. Jaffna University, Technical College, Hindu College, Hindu Ladies College மிக குறுகிய தூரத்தில் உண்டு.
தொடர்புகளுக்கு:
416.291.6667 / 416.895.8111

## CAR FOR SALE

2009 Honda Civic car for sale. 45,000 km. Fully loaded. Power lock & Power window. Price $10,995.
தொடர்புகளுக்கு: 416.575.5055

## APARTMENT FOR RENT.

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom + den for rent. Laundry, 2 parking. Avail. November 01, 2012. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.875.7455

## TUITION

தரம் Gr. 3 - Gr. -12
***Math, Science, English***
கனேடிய பட்டம் பெற்ற ஆசிரியரினால் வீட்டில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.293.6211

## BUSINESS FOR SALE

**RICHMOUNDHILL**
Restaurant for sale. Pizza & Bar.
தொடர்புகளுக்கு: 647.854.0011

## AIRPORT SERVICE
### *Need A Ride?*

விமான நிலையத்திலிருந்து ஆட்களை கூட்டிவரவும், விமானநிலையத்திற்கு அழைத்துச்செல்லவும்
அழையுங்கள்: 647.701.6617

## HOUSE FOR RENT

**9TH LINE & REEVES WAY**
New 4 bedroom house for rent. Parking, landry, 3 washrooms. Close to go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

**MARKHAM & 16TH AVE.**
4 Bedroom + Bsmt house for rent. Close to all facilities. Avail. immediately. வீடும், bsmt தனித்தனியாக கொடுக்கப்படும்.
647.405.1962 / 905.209.1421

**MIDLAND & DANFORTH**
3 Bedroom with1 bedroom bsmt - house for rent. 2 Washrooms. Close to all facilities.

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. தொடர்புகளுக்கு:
416.829.9993 / 416.732.1810

**MCCOWAN & LAWRENCE**
3 Rooms for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

## JOB JOB JOB

**YOUNG & STEELES**
Pizza Pizza நிறுவனத்திற்கு Delivery driver, Cook, Counter helper ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.457.8263

## HELP WANTED FOR OFFICE JOB

Full-time or Par-time. No experience needed. We will train you.
Moneytimes@rogers.com
Contact: 416.938.7510

## வேலைக்கு ஆள்தேவை

மகப்பேற்று காலத்தில் தாயையும் பிள்ளையையும் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: ***416.701.1552***

## JOB JOB JOB

**KIPLING & STEELES**
பகுதியில் Body works & painting வேலைக்கு ஆள் தேவை. தொடர்புகளுக்கு
416.667.1626 / 647.831.9005

**FINCH & MIDDLEFIELD**
தமிழ் உணவகம் ஒன்றிற்கு Kitchen helper, cashier, cook தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.318.9866

மேலும் பக்கங்கள் 24, 25

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.
kulagan: ***647.880.1416***

## OFFICE SPACE FOR RENT
### MORNINGSIDE & SHEPPARD

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

## EZ JOB AGENCY
### MARKHAM & LAWRENCE

Warehousing helper, Forklift (Operator), Driver, Shipping & Receiving, Machine Operator, Heavy Lifting.
***Start to Work Register Now***
***416.430.0888 / Fax: 416.431.0666***

# நடனக்கலை வெளிப்படுத்தும் உடல் உள ஆற்றல்கள்

ஆயகலைகள் அறுபத்திநான்கினுள் ஆடற் கலை ஏன் அற்புதம்வாய்ந்த உன்னதக் கலையாகும். வழிவழி வந்த தமிழர்களின் பண்பாட்டுக்கோலத்தினை உன்னத நிலைக்கு உயர்த்தியதும் இக்கலையே ஆகும். மொகஞ்சாதாரோ நாகரிகம் 4000 ஆண்டு பழமை வாய்ந்தது. அங்கு ஆடற்கலை செய்யும் உருவச்சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை இல்லாத ஆடற்சிலை உருவங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் எல்லாம் கோயில்களிலும், மதநிலையங்களிலும் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவில் கி.மு.400ஆம் ஆண்டளவில் பரத முனிவரால் இது அருளிச்செய்யப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. நாட்டிய சாஸ்திரம் பற்றிய பல நூல்கள் இவரது ஆக்கம். மக்களுடைய உணர்ச்சிகளை, தெய்வங்களுக்கு வெளிக் காட்டவே இக்கலையை உருவாக்கி இருக்கலாம். அத்துடன் பல்வேறு மனநிலைகளில் வெளிப்படும் இக்கலை பொதுவாக கோவில்களில் நிலவியுள்ளது. கடவுளின் கரங்களாக திகழ்ந்த தேவதாசிகள் இதில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். கூத்து, சதிர், நாட்டியம் என்றவாறெல்லாம் பல்வேறு பெயர்களில் இக்கலைவடிவம் அழைக்கப்பட்டாலும் ஆடற்கலையின் பல்வேறு பெயர்களே அவையாகும்.

மிகவும் பழமை வாய்ந்த இக்கலை வடிவத்திற்கு மிகவும் சிறந்த உதாரணம் நடராசர் வடிவமாகும். ‘மங்களக் கூத்து’ என அழைக்கப்பட்ட இந்நடன வடிவம் ஊழிக்கூத்தின் வடிவம் என ஆய்வு செய்துள்ளனர். இவ்வடிவத்தை ‘இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே’ என்று திருநாவுக்கரசர் வியந்து கூறியுள்ளார். இவ்வடிவம் பற்றி இந்திய ஓவிய ஆய்வாளர் ஆனந்த குமாரசாமி அவர்கள் ‘கடவுளின் தெளிவான வடிவம், பிரபஞ்சத்தின் உள்ளடக்கம்’ என்று வியந்துள்ளார். சங்க இலக்கியங்களிலும் ஆடற்கலை உயர்ந்த நிலையில் பேணப்பட்டுள்ளது. ஐவகை நிலங்களில் மருதநிலம் ஆடல்நிறைந்த களமாக விளங்கியுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. வள்ளுவர் கூட ‘கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பண்டைய தமிழகத்தில் ஆடற்கலை அனை-வராலும் அறியப்பட்டிருந்தமைக்கு அதுபற்றி எழுந்த நூல்கள் பல சான்றாகும். 60க்கு



மேற்பட்ட ஆடற்கலைகள் இருந்துள்ளன வென்றும் இக்கலை பற்றிய இலக்கணத்தை கூற பரம், அகத்தியம், நாட்டிய நன்னூல் போன்ற நூல்கள் இருந்துள்ளதாகவும் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார்.

தொல்காப்பியத்தில் ‘மெய்பாடு’ என்ற பகுதியில் ஆடற்கலை பற்றி கூறப்பட்டுள்ளது. ‘மனதின்கண் உள்ள எண்ணத்தை உடல் உறுப்புக்கள் வழிகாட்டுவதும், ‘உடல் இயக்கத்தால் அதனைக் காண்போரது உணர்ச்சிகளை தோற்றுவிப்பதுமாக இருக்கிறது’ என்ற அற்புதமான விளக்கம் உள்ளது. அனைத்துக்கும் தலையாயது கண்களால் காட்டப்படும் உணர்ச்சிகள் என்கிறார். சிலப்பதிகாரத்தில் மாதவி ஏழு ஆண்டுகள் ஆடற்கலை பயின்று சோழர் பேரவையில் அரங்கேற்றம் செய்தது பற்றி வருகிறது. சிலப்பதிகாரத்திற்கே இக்கலை பெருமை சேர்த்துள்ளது. 1800 வருடங்களுக்கு முன்பான சிலப்பதிகாரம் கூறும் நடனக்கலை வடிவம் இன்றும் நெஞ்சையள்ளி நிற்கிறது.

படிப்படியாக பல்லவர் காலம், சோழர் காலம் மூலமாக தாண்டவங்கள், அபிநயங்கள் போன்று புதுக்கலைவடிவ நூல்கள் சேர்ந்து கொண்டன. ஆரியம், பௌத்தம் சமண சமயங்களின் புகுதலினாலும் புதுப்பது மாற்றங்களை இக்கலை வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு மாற்றங்களால் புதுப்புது மெருகுகளால் மலர்ந்து இன்று பரதக்கலையாகி நிற்கின்றது. இன்று நடனக்கலை, ஆடற்கலை என்றால் முன்வருவது பரதக்கலையே தான். 18ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர் சகோதரர்கள் ஒரு நெறிப்படுத்தப்பட்ட கலையாக இதனை உருவாக்கியதின் பின்பே மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டது. விநாயகர் துதி அல்லது நடராஜர் வணங்கம் முதல் தில்லானா வரை பல உருப்படிகளை உள்வாங்கி இக்கலை வளர்ச்சி கண்டது. பரதக்கலையில் (Bharata), Bhava என்ற எழுத்து பாவத்தையும் (Expression), Raga ராகத்தையும், Thalia தாளத்தையும் (Rhythm) பொருள்படுத்தி நிற்கிறது. 1930 ஆம் ஆண்டளவில் ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல், ‘அடையாள’ என்னுமிடத்தில் ‘நவாசேத்திரம்’ என்ற நடனக் கல்லூரியை நிறுவன ரீதியாக நிறுவி பரதக்கலையை வளர்க்க தொடங்கினார். இதனால் இன, மொழி, பிரதேச எல்லைகளை கடந்து இக்கலை புதுமெருகு பெற்றது. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் கற்கக் கூடிய அளவுக்கு மாற்றம் பெற்ற இக்கலை மக்கள் கலையாக மாற்றமடைந்து அரங்குகளில் நிகழ்த்தப்படும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

பரதக்கலையில் உள்ள சிறப்பு யாதெனில் கைவழி செல்வதில் பார்வை செல்வதினை யும், பார்வை செல்வதில் மனம் செல்வதினையும், மனம் செல்வதில் மனநிலை மாறுவதனையும், மனநிலை மாறுவதில் மகிழ்ச்சி தோன்றுவதினையும் காணமுடியும். அசைவு (Movement), பாவம் (Mime), இசை (Music) எல்லாமே சமபங்கு வகித்து அழகான நடனமாக்கும் திறமை இக்கலைக்கு மட்டுமே உண்டு.

ஆடற்கலை பயிலும் ஒவ்வொருவருக்கும் கலை நயம், புத்திக்கூர்வை (Aesthetic Intelligence) தேவையாகும். இயல்பாகவே பிறப்புரிமை வழியாக இவ்வாற்றல் உள்ளதென்றாலும் இன்று பயிற்சிகள் மூலம் இதில் மாறுதல் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் இக்கலை பயில்வோர்க்கு பல்முக பரிமாண புத்திக்கூர்வை (Multiple Intelligence) மிகுந்த தேவையாகும். உடலும், உள்ளமும் ஒன்றாக இணைவதாலே நடனகலை முழுவை பெறுகிறது. உள்ளத்து உணர்வுகளை உருக்கமாக வெளிப்படுத்தும் இந்நடன வடிவத்தில் சகல உடல் உறுப்புக்களும் நயமாக இணைவு பெறுகின்றன. தெய்வீக கலையாக இது கருதப்பட்டாலும் உண்மையில் சில ஆழமான உளவியல் தத்துவங்கள் பொதிந்துள்ளன. ஆடுபவரும் மகிழ்ந்து மற்றையயோர்களையும் மகிழ்ச்சிப் படுத்துகின்றார். இதுவும் ஒருவகையில் யோகப்பயிற்சி பெறுவதுபோல் தான்.

இன்று சமூகத்திலுள்ள பல்வேறு உளவியல் பிரச்சினைகளை ஆராயும்போது மன அழுத்தம், உளச்சோர்வு, பதட்டம், உளமாயம் போன்ற பல்வேறு சீர்குலைவு கள் உள்ளன. உடலும், உள்ளமும் சேர்ந்தே இவ்வாறு நிகழ்கின்றன.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful

Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM

## கோவில் கும்பாபிஷேகம்

கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில் நூதன ஆலய நவகுண்டபஷ பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம்.
04.11.2012 ஞாயிற்றுக்கிழமை 10:40 மணி முதல் - 12:20 மணி வரை நடைபெறும்.

# 'பீட்சா' - திரை விமர்சனம்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழில் மீண்டும் ஒரு திகில் படம்... அதுவும் வெள்ளைச் சேலை பேய்கள் இல்லாமல், யதார்த்தமான காட்சிகள் மூலமாகவே அமானுஷ்யத்தையும் திகிலையும் திரையரங்கை சூழ வைத்திருக்கிறார்கள்!

பீட்சா டெலிவரி செய்யும் ஒரு இளைஞன், ரத்தம் உறைய வைக்கும் தன் கதையை சொல்வதாக படம் அமைந்துள்ளது. கதையை இங்கு விளக்கமாகச் சொல்லக் கூடாது. திகில் படங்களின் திரைக்கதையை எங்கு தொட்டுக்காட்டினாலும் புதிதாகப் படம் பார்ப்பவர்களுக்கு அதன் சுவாரஸ்யம் போய்விடும். ஆனால், கதையை தொடாமல் விமர்சனத்தை எழுதவும் முடியாது. எனவே, சில காட்சிகளை மட்டும் சொல்கிறேன்.

**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

படத்தின் துவக்கத்தில் ஒரு காட்சி... பீட்சா இளைஞன் தன்னுடைய காதலியின் பொறுப்பற்ற செயலுக்காகக் குறைகூறி அவளைத் திட்டுகிறான். அவள் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு அழத் தொடங்குகிறாள். உடனே, தன் கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்ட காதலன் அவளிடம் மெல்ல நெருங்கி, "என்னடா இதுக்குப் போய்



அழலாமா? நீ சில விஷயங்களில் ரொம்ப கேர்லெஸ்ஸா இருக்கடா..." என்று கூறிவிட்டு, "இப்ப என்னைய எடுத்துக்கொள்ளேன், நான் எதிலுமே கேர்லெஸ்ஸாக இருக்கமாட்டேன். எதிலாவது கேர்லெஸ்ஸாக இருக்கேனா சொல்லு... ம்ம்ம்... சொல்லு" என்று தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கேட்பான். சட்டென்று அவள் அவன் முகத்தைப் பார்த்து, "நான் இப்ப கர்ப்பமாக இருக்கிறேன்" என்று சொல்லுவாள். விசில் பறக்கிறது திரையரங்கத்தில். இங்கிருந்து ஆரம்பமாகும் படத்தின் விறுவிறுப்பு இறுதிவரை ஓயாமல் தொடர்கிறது.

மைக்கேல் (இளைஞன்), அனு (காதலி) இருவரும் சின்ன வயதில் இருந்தே அனாதை இல்லத்தில் ஒன்றாக வளர்பவர்கள். காதலிக்கிறார்கள். மைக்கேல், பீட்சா கடையில டெலிவரி பாயாக சொற்ப சம்பளத்தில் வேலை பார்த்து அனுவோடு கெட்டுகெதர் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார். அனு, பேய்க் கதைகளில் ஆர்வம் உள்ள பெண். பேய் நாவல்கள் எழுதும் திட்டமும் அவருக்கு இருக்கிறது.

ஒரு இரவில் பீட்சா டெலிவரிக்கு போகும் போது பங்களா ஒன்றில் மாட்டிக்கொள்கிறார் மைக்கேல். அங்கிருக்கும் பெண், அவளின் கணவன், குழந்தை என்று ஒவ்வொருவராக கொல்லப்படுகிறார்கள். ஒவ்வொருவர் கொல்லப்படும் போதும் மைக்கேல் கொண்டு வரும் பீட்சாவில் ஒவ்வொரு பீஸ்ஸாக காணாமல் போகிறது. பிறகு தான் தெரிகிறது அந்த மூன்று பேரும் ஏற்கெனவே இறந்து போனவர்கள் என்று. மைக்கேல் அங்கிருந்து எப்படியோ தப்பிவிடுகிறார்.

அந்த மூன்று பேர் யார், அங்கிருந்த குழந்தைக்கும் பீட்சா கடை முதலாளியின் பேய் பிடித்திருக்கும் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம், அனு யார் என்று ஒவ்வொரு முடிச்சாக அவிழும் இடம் தான் உச்சம். ஆரம்ப நிமிடங்களில் மைக்கேலாக வரும்

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

# நாள் செய்வதைப் போல நல்லோர் செய்யார்

தினமும் காலையில் எழுந்ததும் கைகுவித்து ஆண்டவனுக்கு நன்றி கூறுங்கள். இன்றைய நாளை நல்ல நாளாக பிரயோசனமிக்க நாளாக ஆக்கும்படி இறைவனிடம் மன்றாடுங்கள். இறைவனின் கருவியாக நீங்கள் செயற்படும்போது துன்பங்கள் துயரங்கள் ஏற்பட வழியேதுமில்லை.

ஒவ்வொரு நாளும் புதிய நாளாகவே மலர்கின்றது. அதிகாலையில் ஒவ்வொரு புதிய சூரியனாகவே சூரியன் உதிக்கின்றான். காலையில் பறவைகள் கூட்டிலிருந்து குதூகலத்துடன் பறந்து செல்கின்றன. புதிதாக மலரும் பூக்கள் இறைவன் நமக்குப் புதிய நாளை மலரச் செய்வதை சொல்லாமல் சொல்கின்றன. நேற்று நடந்து முடிந்து போன சம்பவம் நாளை உண்மையானது. அதுவே நிஜம். அதை வைத்துக்கொண்டு தான் எதிர்காலத்தை உருவாக்கவும் செய்யலாம். கண்டபடி அழிக்கவும் முடியும். எதையாவது உருவாக்கி வைத்தால் அது நமக்கு பயன்படாவிட்டாலும் யாருக்காவது பயன் படத்தான் போகின்றது. அழித்துவிட்டால் ஒருவருக்கும் பயனில்லை.

உங்கள் கருமங்களையும் கடமைகளையும் திட்டமிட்டபடி முறையாக நிறைவேற்றும் போது நாளுக்குரிய பணிகள் சிறப்பாக அமைந்து அந்த நாள் நல்ல நாளாகவே அமைந்து விடுகின்றது. நீங்கள் ஒவ்வொரு வினாடியும் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் இருப்பதால் நன்மையுண்டு. எல்லோரிடமும் சிரித்துப் பேசுங்கள். மற்றவரை உற்சாகப்படுத்துங்கள். அப்போது மகிழ்ச்சி உங்களிடம் நிரந்தரமாகவே குடிகொண்டு விடும். உங்களோடு பழகுவதை மற்றவர் விரும்பினால் நண்பர்கள் அபிமானிகள் கூட்டாகப் பெருகி ஒவ்வொரு நாளும் புதிய நாளாகவே மாறிவிடும். இது உங்களை நிச்சயமாக மகிழ்விக்கும்.

உடல் நலத்திற்கேற்ப விருப்பமான உணவை உண்ணுங்கள். விரும்பிய உணவு கிடைக்காவிட்டால் கிடைக்கும் உணவில் விருப்பத்தை ஏற்படுத்துங்கள். விருப்பமில்லாத உணவை உண்ணும் பழக்கம் ஏற்பட்டு விட்டால் மனம் பக்குவப்பட்டு விடும். எனவே எதிலும் திருப்தி காணும் மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டால் கவலை ஏற்படாது.




எப்போதும் ஒரே வேலையையே செய்து கொண்டு துன்புறாதீர்கள். நல்ல உழைப்பிற்கு நடுவே சற்று இளைப்பாறுதல் நல்லது. ஓய்வு மட்டுமல்ல மனதை கொஞ்ச நேரம் சலனமின்றி வைத்திருக்கும் நிலையே ஓய்வு என்பதாகும். சலனமற்ற ஆழ்கடலின் மையத்திலிருந்து தான் புயல் உருவாகின்றது. அதேபோலத்தான் அமைதியான மனதிலிருந்துதான் மகத்தான சக்தி உருவாகின்றது என்று வில்லியம் ஜேம்ஸ் என்ற பேரறிஞர் கூறியுள்ளார். கடினமான வேலைகளுக்கு நடுவே மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்தும் வேலைகளில் ஈடுபடுங்கள். உதாரணத்திற்கு வீட்டை அலங்கரித்தல், ஓவியம் வரைதல், பாடுதல், இசைக் கருவிகளை மீட்டுதல், கதைப்புத்தகங்கள் படித்தல், உலாவருதல் போன்றவற்றில் ஈடுபடலாம். அப்போ மனம் இலேசாகி அமைதியுறும். அதிலிருந்து அபாரமான திறன் வெளிப்பட வாய்ப்பு உண்டு.

அடுத்து, உடையில் கவனம் செலுத்த வேண்டும். ஆள்பாதி ஆடைபாதி என்பதற்கேற்ப கச்சிதமான உடையணிதல் நலம். அதற்காக ஆடம்பரமான ஆடைகளே அழகு தருவன என எண்ணுவது தவறு. எளிமையே கவர்ச்சி மிக்கது. தூய்மையே கவர்ச்சிமிக்கது. எனவே உடை விடயத்தில் எளிமையும் தூய்மையும் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். நவநாகரிக ஆடைகள் அணிந்து உங்கள் அழகை கெடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் உடல்வாகு, தோற்றம், தொழில் ஆகியவற்றை மனதில் கொண்டு உங்களுக்குப் பொருத்தமான ஆடைகளை அணிவது நலம்.

- அன்றாடம் உங்கள் பணிகளை பட்டியல் போட்டுக் கொண்டும்
- செய்யும் தொழிலை விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் செய்து கொண்டும்
- இனிமையாகவும் பணிவாகவும் பேசியும்
- தோற்றத்தில் எளிமையான தூய்மையான கவர்ச்சியை ஏற்படுத்தியும்
- புன்சிரிப்பை முகத்திலே தேக்கியும்
- உடலாலும் உள்ளத்தாலும் சுத்தத்தை மேற்கொண்டும் அனைத்து செயற்பாடுகளையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்தும்

**- ஆர்.எல். சேவியர் -**

ஒவ்வொரு விநாடியும் வாழ்ந்து வந்தால் ஒவ்வொரு நாளும் புதிய நாளே.

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும் வாள்' என்றார் வள்ளுவர். நாள் எமது வாழ்நாளை அறுத்துச் செல்லும் வாள். கலண்டர் ஒற்றை கழன்று விழ நமது வயது அதிகரிக்கின்றது. இதனால் எமது வாழ்நாள் குறைக்கின்றது. நாள் செய்வதைப் போல் நல்லோர் செய்யார் என்பதால் தாழ்வில்லாமல் வாழ நாம் அனைவரும் நாளை பாழாக்காமல் பயனுள்ளதாக்குவது அவசியமாகும்.

# திருமுருக கிருபானந்தவாரியார் வாக்கு! நகரில் - மூன்றாம் முறை 500 ரூபாய்!

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன். ஏலம் என்ன ஆச்சு? என்ன ஆச்சு? என்று கேட்கத்தோன்றுகிறதா? கூறலுக்கு எதிர் வினை என்ன? கேட்டல்தானே! இன்னும் எத்தனை படங்கள் வைத்திருக்கிறீர்கள்? அத்தனையையும் உங்கள் கடிதப்பக்கத்தில் போடுங்கள். படங்களோடு சொல்லும் அனுபவங்கள் எங்களை எங்கெல்லாமோ அழைத்துச் செல்கின்றது. ஞாபகங்கள் மழையாகும். ஞாபகங்கள் குடையாகும் என்று சேரனின் படத்தில் கேட்ட பாட்டு நினைவுக்கு வந்து அனுபவங்கள் உணர்வாகும், அனுபவங்கள் உறவாகும், அனுபவங்கள் உயிராகும் என்று எங்களை ஊருக்குள் ஊற்றுக்குள், உடுப்புக்குள், உணர்வுக்குள் இழுத்துப் போட்டது. உடுப்பும் மனிதனை உருமாற்றும், மொழியும் மனிதனை வடிவமைக்கும். பண்பும் நாகரிகமும் ஒருவரை உயர்த்தும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நட்புணர்வுக்கு பாலம் அமைக்கும் பணிகளில் ஆவணப்படுத்துதல் அவசியமானது என்று ஒரு நண்பர் தொலைபேசியில் சொன்னார்.

நண்பா! என்னத்தை எழுதலாம் என்று நான் ஒரு நாளும் யோசித்ததில்லை. இன்னத்தை எழுதவேண்டும். இதுகாலப்பிரக்ஞையோடு கலந்தது. காலத்துக்குரிய கருத்து நேரத்துக்குரிய நினைப்பு என்று எண்ணிய எண்ணத்திற்கு நீங்கள் நெய் வார்த்தது நெஞ்சைக்குளிரச் செய்தது. இந்த ஏலக்களத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை நிறுத்துகிறேன். இவருடைய சைவப்பணியும், தமிழ்ப்பணியும் கோவில் தொண்டும் நீங்கள் அறிந்தவை தான். உலகத்தமிழர் அனைவராலும் 'வாரியார் சுவாமிகள்' என்று பக்தி உணர்வு கலந்த மரியாதையோடு அழைக்கப்பட்ட கிருபானந்தர் இன்று இல்லை. கந்தன் கருணைக்கடலோடு கலக்க வைத்து விட்டான். மயிலேறும் பெருமான் வாரியார் சுவாமிகளை வான ஊர்தியில் பயணம் செய்து கொண்டிருந்த போது வானவீதியில் வைத்தே வருக! வாரியாரே! என்று அழைத்துக் கொண்டான். காரைக்கால் அம்மையார் கைலாசப்படிகளில் நின்ற போது மானவசரோசரில் (manasarovar) மனைவியோடிருந்த சிவபெருமான் அம்மையே! என்று அழைத்தமையை நீ பெரிய புராணத்தில் படித்திருப்பாய் தானே!

நண்பா! இந்தியத் தமிழ் நாட்டில் கடவுள் மறுப்பு என்ற நாத்திகவாதம் சூடுபிடித்தி காலக்கட்டத்தில் அந்தச் சூட்டில் மக்கள் மயங்கிப்போகாமல் ஆத்தீக நீர்பொழிந்த மேகங்களில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபானந்த வாரியாரும் குறிப்பிடத்தக்க இருவராவர். பிறர் பயந்த பக்கங்களுக்குள் துணிவோடு வேலுண்டு வினையில்லை என்று நினைத்துக்கொண்டு உள்நுழைந்தவர்கள் இவர்கள் பணிகளால் 'குன்றக்குடிப்பெரியீர் குமரனுக்கும் தமிழ் தருவீர்' என்று நாத்திகக்கருத்துக்களை வீசிய கவிஞர் கண்ணதாசன், மதுரைக் கவியரங்கில் பாடியதோடு, வாரியார் சுவாமிகளிடம் சந்தேகங்களைத் தெளிந்து கொண்டே அர்த்தமுள்ள இந்துமதம் கட்டுரைகளை எழுதுகிறேன் என்று பிரகடனப்படுத்தியமை யும் பிரசித்திம் ஆனதே.



இந்த வழியில் மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் மூகாம்பிகை கோயிலுக்குப் போனதும், மக்கள் திலகத்தின் மனிதநேயத்திற்கும், மறைமுக மான கோயில் தொண்டிற்குமாய் வாரியார் சுவாமிகள் 'பொன்மனச்செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கியதும் ஊரறிந்த உண்மையல்லவா? காலநகர்வில் வாரியார் சுவாமிகளின் 'கந்தபுராணம்' குறித்த தொடர் சொற்பொழிவுகளை நாள் தவறாமல் ஒவ்வொருநாளும் பக்தி உணர்வுடன் பந்தலுக்குள் போயிருந்து கேட்டு, அருள், உணர்வு, தொண்டு, சொற்பொழிவுகளின் நிறைவு நாளன்று வாரியாருக்கு கவிஞர் நவரெத்தின மாலை அணிவித்துப் பாராட்டியதும், பின்பு கந்தன் கருணை என்ற திரைப்படம் எடுத்தமையும், ஆன்மீகப்பாடல் களால் எம்மையெல்லாம் ஆண்டவன் கட்டைகளை ஏற்க வைத்த மடைமாற்றம் (ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறுவது) சரித்திர திருப்பம் அல்லவா? சமய மறுமலர்ச்சியல்லவா!

நண்பா! கவிஞர் கண்ணதாசன் தனக்கு அணிவித்த நவரெத்தின மாலையை 1965 ஆம் ஆண்டு சிதம்பரம் இளமையாக்கினார் கோயில் மண்டபத்தில் நடந்த பெரிய புராணத் தொடர் சொற்பொழிவின் போது வாரியார் சுவாமிகள் தனது கழுத்திலிருந்து தூக்கிக் காட்டியதைக்கண்ட பரவசக்காட்சி இன்றும் என் நெஞ்சில் நிழலாடுகிறது. இன்றும் நமது ஆலயங்களில் தொடர் சொற்பொழிவுகளை நடத்தினால் நல்லது தானே! பக்திமுறையில் உள்ள விளக்கச் சொற்பொழிவு நிகழ்வு நடக்க நேரமில்லாமல் போகிறதே. இந்த வறுமை நமது வருங்காலச் சந்ததியினருக்கு வாழ்க்கை விளக்கத்தை கொடுக்க முடியாமல் திண்டாட வைத்து விடும் என்ற கவலை உனக்கு வருவ தில்லையா? திருவுளம் பற்றி சொற்பொழிவு நிகழ்வின் அவசியத்தைப் பரப்புவோமாக! தொடர் சொற்பொழிவில் பல நன்மைகளும், உண்மைகளும் இயல்பாகவே வெளிவரும். இந்த உண்மைகள் பல வெளிச்சங்களை யும், தெளிவுகளையும் கொடுக்கும். சிதம்பரம் இளமையாக்கினார் கோயிலில் வாரியார் சுவாமிகள் சொன்ன ஓர் அனுபவக் குறிப்பு வியப்புக்குரியதாய் இருந்தது.

கும்பகோணத்திலே ஓர் ஆலயத்தில் வாரியார் சுவாமிகள் தொடர் சொற்பொழிவு நடத்தினாராம். அங்கு ஒருநாள் காலை எழுந்து காலைக்கடன் முடிப்பதற்காக அந்தக் கிராமத்து வயல் வழியே நடந்து போனாராம். தனக்கு எதிர்திசையில் ஒரு ஏழு வயதுச் சிறுமி வந்து கொண்டிருந் தாளாம். சுவாமிகளை நெருங்கியதும் அவள் அவரைப்பார்த்துப் பேசத் தொடங்கினாள்.

'நீதானா? இரவில் கோயில்ல பிரசங்கம் செய்யிற சாமி?'
'ஓம் பாப்பா'
'நீ பொய்ச்சாமி. பேசுறது ஒன்று நடக்கிறது வேற'
'ஏன் பாப்பா அப்படிச் சொல்லுற?'

'நேத்து ராத்திரி பேசுற போது சொன்ன கடவுளைக் கும்பிடுகிற மாதிரி கடவுளின் வாகனங்களையும் கும்பிட வேண்டும் என்று'
'ஆமா! சொன்னேன்'
'அதோ கருடான் வார் பறந்து போகிறதே! நீ கும்பிடவில்லையே. நான் உன்னையே பார்த்துக் கொண்டுதான் வந்தன். நீ உன்பாட்டில நடந்துவாற. அது தன்பாட்டில் பறந்து போகுது.'

வாரியார் சுவாமிகள் திகைத்துப் போனாராம். திணறி விட்டாராம். 'ஆமா! தப்பு பாப்பா! தப்பு பாப்பா! என்று கூறியபடி கருடன் பறந்து சென்ற திக்கை நோக்கி கை எடுத்துக் கும்பிட்டாராம். அந்தச் சிறுமி சிரித்துக் கொண்டு இப்பதான் நீ உண்மைச் சாமி' என்றாளாம்.

நண்பா!
வாரியார் தொடர்ந்து சொன்னார். 'கருடாள்வார் பறந்து



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

Accounting & Tax Services
• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll
• Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation

Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'நான் அப்பவும் அடிச்சடிச்சுச் சொன்னனான் புதுவீடு வேண்டாமென்று. நீங்கள் கேட்டால் தானே! இப்ப பாத்தீங்களே, பேய் இருக்கிற வீட்டிலை இருக்கவேண்டி வந்திட்டுது.' என்று சத்தமிட்டுச் சொன்ன மனைவியின் குரல் கேட்டு தன்நினைவிற்கு வந்தான் சிவா. மனைவியைத் திரும்பிப் பார்க்க, அந்தப் பார்வையைத் சகிக்க முடியாமலோ என்னவோ நீலவேணி வீட்டினுள்ளே நுழைந்தாள். அவளைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்த சிவாவுடன் மீண்டும் ஓடிவந்து ஒட்டிக் கொண்டாள் நீலவேணி.

**◊ கனி ◊**

'பயமாய் இருக்குதப்பா' தனது மனைவியின் தவிப்பைப் பார்த்து உண்மையிலே பரிதவ-ித்தான். ஆதரவாக அவளது முதுகைத் தடவியவன் 'பாதர் ஏதோ சொல்லிப்போட்டார் என்று நீர் ஏன் பயப்படுறீர். பேயாவது கீயாவது.' என்றவன், 'இப்ப என்ன பேயெண்டே முடிவுகட்டிப் போட்டீரோ? ஏதோ சிலதுகள் எண்டுதானே சொன்னவர். நீர் பயப்படாதையும்.' என்று அவளுக்குத் தைரியம் சொன்னாலும் உள்ளுக்குள் கொஞ்சம் பயப்படத்தான் செய்தான் சிவா.

எவ்வளவு கடின உழைப்பின் பயன் இந்த வீடு. இந்த வீட்டில் ஏதோ இருகுதெண்டால் என்றால், - அவனால் நம்பமுடியவில்லை என்பதனைவிட ஏற்கமுடியவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு மாதமாக பிரச்சினை ஏதும் இல்லைத்தானே. வெறும் தலைவலியையும் நித்திரையின்மையையும் கொண்டு வீட்டைக் குறை சொல்ல முடியுமோ! அதிலும் குடியிருக்கும் வீடு கோயிலல்லவா!. அதை நாமே குறை சொல்வதா! மனைவியுடன் தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளாமல் தன்னுள்ளேயே பலவாறாகச் சிந்தித்தான்.
ஆனாலும் ஏனிந்தத் தீராத தலைவலி. நித்திரையே கொள்ள முடியாதவாறான பயங்கரக் கனவுகள். ஒருவேளை பாதர் சொன்னது போலே வீட்டில்தான் ஏதும்.. சை! அப்படி ஏதும் இராது, இருக்கவும் கூடாது. அவ்வளவு தூரம் தனது வீட்டை நேசித்தான் சிவா.

மாறி மாறி, எதிரும் புதிருமான கேள்விக-ளைக் கேட்டுக் கொண்டே அன்றைய பகல் பொழுதைக் கழித்துவிட்டான் சிவா.

மகள் திருமகளும் வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளிடம் பாதர் அருள் கூறியதை இருவரும் கூறவில்லை. திருமகள் தலைவலியாலோ அல்லது கனவுகளாலே அவதிப்படவில்லை. அவள் மட்டும் ஏன் அந்த 'ஏதோ'க்களினால் கரைச்சற்படுத்தப்படவில்லை? இந்த எண்ணம் கூட சிவாவிற்கு இடைக்கிடை வந்தது. பரவாயில்லை மகளாவது எதுவித இடைஞ்சல்களும் இல்லாது இருக்கின்றாளே என்ற, தகப்பனுக்கே உரிய நிம்மதி அவனிற்கு வந்தது. பகற்பொழுது இப்படியா-கப் போய்விட்டது. இரவும் மெல்ல மெல்ல வந்துவிட்டது. இரவு என்பது, என்ன சொன்னாலும் எவருக்கும் கொஞ்சம் தைரியம் குறைவான நேரம்தானே! அதிலும் இப்போது இருக்கும் நிலையில் சிவாவிற்கும் நிலவேணியிற்கும், எப்படியிருக்கும் என்று சொல்லவே தேவையில்லைத்தானே!

திடுக்கிட்டு விழித்தாள் நீலவேணி. ஏன் விழித்தாள் என அவளுக்குத் தெரியவில்லை. அறை முழுவதும் இருட்டாகவே இருந்தது. அருகில் சிவாவைக் காணவில்லை. ஒருவேளை முன்அறையில் ஏதாவது வேலை செய்துவிட்டு அப்படியே படுத்துவிட்டாரோ. இப்போது என்ன நேரமாகவிருக்கும் என எண்ணியவள் சுவர் மணிக்கூடு இருந்த திசையாகப் பார்த்தாள். இருட்டில் நேரம் தெரியவில்லை. மணிக்கூடு செயற்படும் சத்தம் மட்டும் டிக் டிக் டிக்கெனக் கேட்டுக் கொண்டு இருந்தது. தாகமாக இருப்பது போல் இருந்தது. சமையலறைக்குப் போய் தண்ணீர் குடிக்கலாம் என நினைத்தவள் படுக்கையை விட்டு எழுந்தாள். அறையின் வெளிச்சத்தைப் போட நினைத்தவள் மனதை மாற்றிக் கொண்டாள். பழக்கப்பட்ட வீடுதானே! இருட்டாக இருந்தாலும் சமையலறைக்குப் போய்விடலாம், மின்சாரத்தையும் மட்டுப் படுத்தியதாக இருக்கும் என்று நினைத்தவள், கீழ்த் தளத்திலிருந்த சமையலறைக்கு, கொஞ்சம் இருட்டாகவிருத்தாலும் கூடப் பிரச்சனையின்றிப் போய்விட்டாள். சமையலறை சாத்தியிருந்தது. அறையின் கதவைத் திறந்தவளுக்கு சமையலறையின் உட்பகுதி முழுவதும் தெளிவாகத் தெரிந்தது.

சாரளங்கள் கண்ணாடியில் அமைந்திருந்ததாலும், சாரளங்களின் திரைச்சீலைகள் சுருக்கப்பட்டிருந்ததாலும் வெளிப்பகுதியின் வெளிச்சம் தாராளமாகவே உள்ளே வந்து தேவையான அளவுக்கு சமையலறையை மங்கல் வெளிச்சத்தால் நிரப்பியிருந்தது. சமையலறைக் கதவுக்கு எதிராக இருந்த மூலையில் குளிரூட்டி இருந்தது. சமையலை-றயின் உள்ளே வந்த நீலவேணி, குளிரூட்டியின் கதவைத் திறந்து உள்ளே வைக்கப்பட்டிருந்த குளிர்ந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்தாள். அக்குளிரூட்டியின் அமைப்பின்படி, குளிருட்டியின் கதவு திறந்தே இருந்தது, தானாக மூடிக்கொள்ள மாட்டாது. நீலவேணி தண்ணீரை எடுக்கும்போது, சமையலறையின் கதவு சாத்தப்படுவதுபோல் உணர்ந்தாள். திரும்பி கதவைப் பார்க்க கதவு மூடியிருந்தது. - இன்னமும் வரும்.



# நடனக்கலை...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

நடனக்கலை பயிலும் ஒவ்வொருவருக்கும் இதனை பயிலும் வேளையில் ஒவ்வொரு பயிற்சியும் ஒவ்வொரு பகுதிகள் முதன்மை பெறுகின்றன. 'அலாரிப்பு' பயிற்சியில் கண், கழுத்து, கால்கள் ஒத்துழைப்பு செய்கின்றன. 'பதம்' நிகழ்வில் ஒற்றைக்காலில் நின்று கூட நடராஜர் தத்துவத்தை காட்டவேண்டி யுள்ளது. தில்லானவுக்கு கால்களுக்கு அதிக பயிற்சி கிடைக்கிறது. இவ்வாறு நடனக்கலையின் முழு நிகழ்வுகளிலும் முழு மெய்பாடுகளும் தொழிற்படுகின்றன. ஆடும்போதும் அசையும் போதும் ஏற்படும் இயக்க சமநிலையே இக்கலையின் பூரணத்துவமாகும்.

சார்ந்தவை. பொப்பிசை நடனங்கள் (Popular Dance), உடல் அசைப்பு நடனங்கள் (Break Dance), குழு நடனங்கள் (Group Dance) எல்லாமே வெறும் கேளிக்கை நிறைந்தவை. பொருள் அற்றவை. இவர்கள் தனியாக ஆடுவதை விட குழுவாகவே செய்வர். எமது ஆடற் கலையில் பலவேளைகளில் தனியாகவே நின்று பலமணிநேரம் நிகழ்த்துபவர்கள் உடல்வலிமை நிறைந்தவர்கள் மட்டுமல்ல அர்த்தம் நிறைந்த ஆன்மீகம் நிறைந்த அதிநுட்பகலையை வழங்குகின்றார்கள்.

நடனம் செய்பவர்களை விட பார்ப்பவர்கள் மனத்திருப்தியான மகிழ்வு பெறுகின்றனர். தமிழர்களின் இவ் ஆதிக்கலை வடிவம்



மருத்துவரீதியில் இக்கலையின் மகத்துவம் ஆய்வுக்குரியது. பிராணவாயுவை அதிகம் பெறுதல், இதயத்தின் வினைத்திறனைக் கூட்டல், மூளையின் ஞாபக திறனை அதிகரித்தல் என்பன ஒரே காலத்தில் இடம்பெறுகின்றன. அதேவேளையில் ஒழுங்கு, பணிவு, நேரம் தவறாமை போன்ற நடத்தைக் கூறுகளையும் பெறமுடிகின்றது. பொதுவாக நடனம் கற்ற ஒருவரையும் இதனை கற்காத ஒருவரையும் இலகுவில் அடையாளம் காண முடிவதற்கு அவர்களது நடத்தைக் கோலங்களே காரணமாகும்.

உளவியல் பாவனை செய்தல் (Simulation) என்றதொரு முக்கிய விடயம் உள்ளது. ஒன்றைப்போல் பாவனை செய்தல் ஒருவருக்கு இலகுவில் வந்துவிடாது. தொடர்ச்சியான பயிற்சியுடன் கூடிய தியாக உணர்வு இதற்கு வேண்டும். உயிருள்ள வற்றையும் இல்லாத சடப்பொருட்களையும் சைகைகள் மூலமே காட்டவேண்டும். பிரபஞ்சம் மனிதநிலைப்பாடு, மேலான கடவுள், பல்வேறு ரச உணர்வுகள் பகுத்தறியும் பண்புகள், ஆன்மீக வெளிப்பாடுகள் அனைத்தும் பாவனைகள் மூலம் செய்யப்படுகின்றன. உலகில் உள்ள எந்த கலைக்கும் இவ்வளவு வலு உள்ளதாக தெரியவில்லை. மேலைத் தேசத்து நடனங்கள் வெறும் இசை

இன்றும் நிலை பெற்றுள்ளதுடன் எமது சிந்தனைகளை கிளறி வருகின்றன. சமூகம் சார்ந்த மனிதப் பண்பை வளர்க்கிறது. மனோபாவங்களை மாற்றுகிறது. ஒத்துழைப்புக்கு உதவுகிறது. இரசனையை கூட்டுகிறது. இனம்காண வைக்கின்றது. பயில்வோர், பார்ப்போர் என இரண்டு தரப்பினரையும் இணைக்கும் ஆற்றல் இக்கலைக்கு உண்டு. மிகுந்த பொறுமை யுடன் கற்கும் மாணவர்களையும், ஆசிரியர்களையும் என்றும் போற்றி மகிழ வேண்டும். உலகெங்கும் பரவியுள்ள தமிழர்கள் பரதக்கலையை மிக மகிழ்ச்சி யுடன் பிள்ளைகள் கற்க உதவுகின்றனர். கனடாவில் 50க்கு மேற்பட்ட நடன ஆசிரியர்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நடனம் பயிலும் மாணவர்களையும் பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் பயணிக்கிறோம்.

'அசைவதற்காக கற்றுக்கொள்ளுதல் அல்லது கற்றுக் கொள்வதற்காக அசைதல்' என்பது எந்த ஒரு நடனவடிவத்தின் பொதுப்பண்பாகும். உடலை கருவியாக்கி உணர்வினை வெளிக்காட்டும் திறமை இதற்கு உண்டு. சங்ககாலம் முதன் இன்றுவரை நிலைப்பதென்றால் இதற்கு ஒரு பரிமாணமும் ஆழ்ந்த அர்த்தமும் உண்டு.

# 'பீட்சா'...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

விஜய்யும் அனுவாக வரும் ரம்யாவும் ரொமாண்டிக்கான காதல் ஜோடியை எந்த பாசாங்கும் இல்லாமல் பிரதிபலித்திருக்கி றார்கள். விஜய் சேதுபதியின் நடிப்பு உண்மையான பயத்தையும் நாமும் அவரருகில் இருப்பது போன்றதொரு பதைபதைப்பையும் கொண்டு வருகிறது. குறைந்த முதலீட்டுப் படங்களுக்கு மிகவும் பொருத்தமான நடிகராக இருக்கின்றார்.



ரம்யா நம்பீசன், 'குள்ளநரிக்கூட்டம்' படத்தில் அறிமுகமானவர். சைக்காலஜி படித்த பொண்ணாக விஜய்க்கு ஆலோசனைகள் சொல்லும் காட்சிகளில் அலட்டல் இல்லாமல் நிறைவாகவே செய்திருக்கிறார்..!

மற்றவர்களில்... கொஞ்சமான பாத்திரங்கள் தான் என்றாலும் அனைவருமே கதைக்கு தேவையான, தங்கள் பங்கை சிறப்பாக செய்திருக்கிறார்கள். பீட்சா கடையில் வேலை பார்க்கும் பில்லிங்மேன் மற்றும் சமையல்காரர்கள் கேரக்டர்கள் வெகு இயல்பாக செய்து இருக்கின்றார்கள். அதே போல 'ஆடுகளம்' நரேன் படத்துக்கு படம் அவர் நடிப்பில் மெருகு ஏறிக்கொண்டு இருக்கின்றது. மிக இயல்பாக நடிக்கின்றார். அவரும் அவருடைய குரல் உடல்மொழியும் அசத்தல். ஒளிப்பதிவாளர் கோபியும் இசையமைப்பாளர் சந்தோஷும் இணைந்து படத்தை நம் கண்களுக்கும் காதுகளுக்கும் பிடித்த மாதிரி கொடுத்திருக்கிறார்கள். சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசை சில நேரங்களில் கொஞ்சம் தலைவலி கொடுப்பது போல் இருந்தாலும், அந்த பங்களா காட்சியில் .'.போன் மணி அடிக்கும் போதும், குழந்தையின் அறைக்கு மைக்கேல் செல்லும் போதும் ஏற்கெனவே மனதிற்குள் இருக்கும் திக்திக்கை இன்னும் கூட்டி விடுகிறது. சில சமயங்களில் காட்சியோடு சேர்த்து பார்ப்பவர்களையும் அலற செய்து விடுகிறது.

பேய் படங்களில் கேமராமேனின் பங்கு மிக மிக முக்கியம். கேமரா காட்சிகள் நம்மை அந்த பங்களாவின் அறைகளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக திகிலுடன் அழைத்து செல்கிறது. அந்த பங்களாவின் ஒவ்வொரு பகுதியையும் மனப்பாடமாக நாம் சொல்லும் அளவிற்கு பதிவு செய்கிறது கோபி அமர்நாத்தின் சினிமோடோகிரா.'.பி. ரெட் ஒன் எல்எக்ஸ் கேமராவில் பதிவு செய்துள்ளார். ஒரே ஒரு பங்களா, மைக்கேல், ஒரு டார்ச் லைட் என்று அந்த பங்களா காட்சிகள் அத்தனையும் அருமை. இந்த மூன்றையும் வைத்து வயித்தை கலக்கற அளவுக்கு பயப்பட வச்சிருக்காங்க.

எடிட்டர் லியோ சாமர்த்தியத்தில் படத்தில் தேவையற்ற காட்சிகள் என்று எதுவும் தென்படவில்லை.

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜுக்கு இது முதல் படம். சிக்கலான திரைக்கதையை அதன் நுட்பம் சார்ந்து வேலை செய்திருப்பதுடன், அமானுஷ்யமும் திகிலும் நிறைந்த படமொன்றை அதன் செய்முறை இலக்கணம் அறிந்து உருவாக்கி யிருக்கிறார். காட்சிப்படுத்தல் களை மிக கவனமாகக் கையாண்டிருக்கிறார். தொய்வு ஏற்படக்கூடிய அண்ணா நகர் பங்களாக் காட்சியை, கேமரா கோணங்களின் துணையுடன் எளிதாகக் கடந்திருக்கிறார். பேய் பங்களாவின் உள்ளே சாவி இருக்கும் இடத்திற்கு போகவேண்டிய இடம் பற்றிய கட்டளைகளை வெளியில் இருக்கும் ஆள் சொல்லச் சொல்ல மைக்கேல் தொடரும் இடங்களில் ஷாட்கள் தாவிக் குதித்தபடி செல்லும்விதம் அழகு. அதேபோல் பேய் பங்களாவைவிட்டு கடைசியாகத் தப்பிக்கும் போது காலைப் பற்றிக்கொண்டு காப்பாற்றும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் கதறும் காட்சியமைப்பும் அருமை. மோசமான கனவிலிருந்து விழிப்பது போல் உள்ளது.

கடைசி பத்து நிமிடம் வரை எதிர்பார்ப்பை காப்பாற்றி வைத்திருப்பது படத்தின் மிகப்பெரிய பலம். அடுத்தக் காட்சி இப்படித்தான் இருக்கும் என எளிதாக ஊகிக்க முடிந்துவிடும் தமிழ்ப் படங்களில் இப்படம் நம் ஊகங்களை எல்லாம் ஏமாற்றுகிறது. முதல் அரை மணி நேரம் ரொம்ப ரொம்ப சாதாரணமாக போகும் கதை, சேதுபதி தன் முதலாளி மகளை பார்க்கும் சில்லிட வைக்கும் அழுத்தமான காட்சிகள் மூலம் பறக்க ஆரம்பிக்கிறது.

பீட்சா - பார்க்கலாம்.

# மறுபடியும் போட்டியா?



ஆமை ஒன்றும், முயல் ஒன்றும் பலகாலமாக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் ஒரு தோட்டத்தில் வாழ்ந்து வந்தனர். அங்கு பல்வேறு மிருகங்களும் இருந்தன. ஒருமுறை ஆமையும், முயலும் வேறு சில மிருகங்களும் கூடி நின்று பேசிக் கொண்டு இருக்கையில் கரடி ஒன்று, 'இந்தக் கதைகள் எல்லாம் பொய்யாக இருக்கிறதே' என்றது.

மற்ற எல்லோரும் அதை நோக்கி, 'எந்தக் கதைகள்? எது பொய்?' என்றன. கரடியும், 'மனிதரின் கதைகள் தான்! முயலும் ஆமையும் போட்டி போடுமாம், முயல் தூங்கியதாம், ஆமை வென்றதாம்...' என்று கூறியது. அங்கிருந்த நரி, 'சரி தான், இதெல்லாம் எப்படி முடியும்?' என்றது. கரடியும், நரியும் உள்நோக்கத்துடன் இதை செய்தன. ஆமையையும், முயலையும், நரியும், கரடியும் சாப்பிட விரும்பின. ஆனால் ஆமையை நெருங்கினால், முயல் அதைக்காப்பாற்றும். முயலை நெருங்கினால், ஆமை காப்பாற்றும்.

இப்போது சண்டை அல்லது போட்டி மூலம் அவற்றின் நட்பை உடைத்தால், கரடிக்கும், நரிக்கும் அன்றிரவு நல்ல உணவுதான்! 'எப்படி முடியும் என்றால், முயல் தூங்கியது, அதனால் ஆமை வென்றது' என்றது ஆமை. 'போட்டியில் யாராவது பாதியில் தூங்கி விடுவார்களா? என்றது முயல். இதெல்லாம் பார்த்த மற்றும் சில மிருகங்கள், 'ஏன் திரும்பவும் ஒருமுறை போட்டி போடலாமே? அப்போது உண்மை தெரியும் தானே!' என்றன.

இதை கரடியும், நரியும் அதிக உற்சாகத்தோடு ஊக்கப்படுத்தின. 'சரி' என்று முயலும், ஆமையும் போட்டிக்கு தயார் ஆகின. நெடுந்தூரம் ஓடின. ஆமை மெதுவாக ஓடியது. முயல் அதனால் அதி கூடிய அளவுக்கு வேகமாக ஓடியது. முயலும் களைத்துப்போய் விட்டது. ஆமை தூரத்தில் இருந்தது. முயலுக்கு களைப்பால் நித்திரை கொள்ளலாமா என்று தோன்றியது. அப்போது தான் முயலுக்கு, முந்தைய கதை உண்மையாக இருக்கலாம் என்றும் தோன்றியது. அந்த யோசனையுடன் முயலுக்கு உலகம் இருண்டது.

முயல் திடீரென்று கண் திறந்த போது, ஆமை முன்னால் நடந்து கொண்டு இருந்தது. தன்னை அறியாமல் நித்திரை கொண்டோம் என்று முயல் உணர்ந்து எழும்பி ஓடியது. முயலும், ஆமையும் இருவருமே ஒன்றாக எல்லைக்கோட்டை அடைந்தன. இரண்டுமே சந்தோசமாக நாங்கள் இருவரும் வென்றோம் என்றன. கரடியும் நரியும் எதிர் பார்த்தபடி அவர்களுக்கிடையில் சண்டை ஒன்றும் வரவில்லை. 'ஆமையும் முயலும் கதை நீதிக்காகவே எழுதியது' என ஆமை கூறியது. முயலும், 'பெரியோர் எப்போதும் நன்மைக்காகவே கதை கூறுவார்கள், அதை நாம் கேட்க வேண்டும்,' என்றது. ஆமையும், இக்கதையின் நீதி, 'Slow and Steady Wins the Race' என்றது. கரடியும் நரியும் இதைக் கேட்டு ஏமாற்றம் அடைந்தன.



ஞா. ஆரணி

அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# திருமுருக கிருபானந்தவாரியார்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

போனது எனக்குத் தெரிந்தது. நான் சைவன். சைவசித்தாந்தி. மயிலை, எருதை, காகத்தை, நாயை, ஏன் பாம்பைக் கண்டால் கூடக் கும்பிடுவேன். கருடன் சிவபெருமானின், முருகனின், வைரவப்பெருமானின் அல்லது சிவசக்தியின் வாகனம் இல்லையே. அதனால்தான் நான் கருடாள்வாரைக் கும்பிடவில்லை. நான் வீரசைவ மரபினன். அந்தச் சிறுமியின் மனதிலே படிந்திருந்த கடவுள் சமயம் என்ற உணர்வுகள் பட்டுப் போகக்கூடாது வற்றிப் போகக் கூடாது என்பதற்காக அவளுக்கு முன்னால் கருடனை நான் கும்பிட்டேன். அவளும் உண்மைச்சாமி என்று சொல்லிவிட்டுப் போனாள். நம்முடைய சமய வாழ்விலே இப்படியான நுணுக்கங்களிலும் நாம் கவனமாய் இருக்க வேண்டும்' என்றார்.

நண்பா! வாரியார் சுவாமிகளின் சமயத் தொண்டுகள் குறித்து நிறைய எழுதலாம். மீள்பார்வைக்கும் சிந்தனைக்கும் உரிய கருத்துக்கள் பேணப்பட வேண்டியவை. ஈழத்தில் 'தேனருவி' என்ற திங்கள் இதழ் வெளிவந்த காலம் நினைவிருக்கிறதா? 1963 ஆம் ஆண்டு தொடக்கம் என்று எண்ணுகிறேன். மட்டக்களப்பைச் சேர்ந்த இயக்குனர் பாலுமகேந்திரா அட்டைப்பட ஓவியங்களை வரைய சரவணையூரைச் சேர்ந்த என் உறவினர் அருண்மொழி தேவன் நடத்திய இதழ் அது. நான் சிதம்பரத்தில் இருந்த போது தேனருவியின் தமிழ் நாட்டு நிருபராய் கடமையாற்றினேன்.

இலக்கிய, சமயத்துறை சார்ந்தவர்களைக் கண்டு நேர்காணல் செய்து படத்தோடு கொழும்புக்கு அனுப்பிவைப்பேன். சிதம்பரம் வந்து கனகசபை நகரில் தங்கியிருந்த வாரியார் சுவாமிகளையும் பேட்டி கண்டேன். அப்பொழுது அவர் கருத்தொன்று என்னை வியக்க வைத்தது.

ஈழத்தமிழர்கள் படித்துத்தான் பரமசிவனைக் கும்பிடுகிறவர்கள் என்று இல்லை. படிக்காத பாமரரும் பரமபக்தி உடையவர்கள். கடவுள் நம்பிக்கை சமயப் பற்று என்பன அவர்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை. புராணப்படலங்களை அவர்கள் அறிவுக்காகக் கேட்பதில்லை. அருளுக்கா கவே கேட்பார்கள். சில நேரங்களில் நாங்கள் மேடையில் பேசும் போது தவறு விட்டால், மேடையால் நாங்கள் இறங்கியதும் அந்தத் தவற்றினைச் சுட்டிக் காட்டித்திருத்துவார்கள். கேள்விஞானம் அவர்களைப் படிக்காத மேதைகளாக்கி இருக்கிறது. படித்தவர்களும் பக்தி உணர்வில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். நான் அடிக்கடி ஈழத்துக்குப் போகிறவன்.

வேறு என்ன? பிறபின்பு

அன்பு ஈழத்துச் சிவானந்தன்.


KITCHEN CABINETS DIRECTLY FROM FACTORY

Design Your Dream Kitchen For Your Needs & Budgets

Allure Cabinetry

Custom Cabinet Specialists

Custom made: Kitchen Cabinets & Vanities

Contact - Sri: 416.917.9933 / 647.704.2200

Varma: 416.857.9773

Email: woodbeauty@hotmail.com



யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361







நிரு பிராண்ட் இன் தயாரிப்பை
அருந்தி மகிழுங்கள்

**Niru Enterprises Inc.**
**40 Minuk Acres**
**Scarborough, ON M1E 4Y6**
**Tel: 416.750.1976 Fax: 416.750.8779**

# சுயநம்பிக்கையின் முக்கியத்துவம்

நம்பிக்கை எனது இதயத்துக்குள்ளிருந்து தான் பிறக்கிறது என்பது எனக்கு நன்கு விளங்கியபடியால் நம்பிக்கையின் சக்தியை உணர்ந்து அதை இப்போ பூரணமாக அனுபவிக்கிறேன்.

நம்பிக்கை வெளியில் எங்கும் இருப்பதில்லை. நம்பிக்கையின் சாராம்சம் உனக்குள்தான் குடிகொண்டிருக்கிறது. நம்பிக்கை ஒரு தீர்மானம். நீ நம்பத் தீர்மானித்திருப்பதன் பிரதிபலிப்புத்தான் உனது நம்பிக்கை. உனக்கு ஏதாவது ஆதரவு கிடைக்குமா என்பது தெரியா விட்டாலும் தற்போதைய உனது பாதுகாப்பான இடத்தை விட்டு வெளிவர நீ உடன்படுவது தான் நம்பிக்கை என்பது. உனது குறிக்கோளை அடையும் யாத்திரையில் நீ யாவற்றையும் சரிவரச் சமாளிக்கிறாய் என சான்றிதழ் கொடுப்பதல்ல நம்பிக்கை. உனது நோக்கத்தை வென்றிட கட்டாயம் செய்ய வேண்டியவற்றை உனது மனம் வருந்தினாலும் செய்து முடிப்பதே நம்பிக்கை. வாழ்வில் உனது வேலை சுலபமானதாக உனது ஆதரவாளர்களின் உதவியுடன் செய்து முடிக்கப்படுவதல்ல



நம்பிக்கை. இதையல்ல, வேறு ஏதாவதொன்றைத்தான் நீ செய்ய வேண்டும் என மற்றவர்கள் வற்புறுத்தினாலும் கஷ்டமான வேலையை எதற்காகச் செய்கிறாய் என்பதை மறக்காது நீ ஒரே பிடியாய் செய்து முடிப்பது உனது திறமை. நீ தார்மீகமாகச் செயற்படுவதனால் பரிசாக வெகுமதியை எதிர்பார்ப்பதல்ல நம்பிக்கை. நீ செய்பவற்றால் திருப்பி உனக்கு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை என்பது நன்கு தெரிந்தும் தளராது உனது கடமையை நிறைவேற்றும் திறமைதான் நம்பிக்கை.

இதை இவ்வாறு சிந்தித்துப் பார்ப்போமா? வாழ்வில் என்னதான் நடந்தாலும் ஆரம்பத்தை விட போகப்போக உனது திறமையாலும் கடின முயற்சியாலும் நிச்சயம் வளர்ச்சி அடைவாய் என்பதை நீ உணர்வதுதான் நம்பிக்கை. இப்படி இல்லாவிட்டால் அது நம்பிக்கை அல்ல. அது உன்னை முன்னேற விடாது. நம்பிக்கை வைப்பது என்றால் என்ன? அதை வளர்ப்பது எப்படி? என்பது இன்று வரை உனக்கு முற்றிலும் விளங்காது இருந்திருக்கலாம். வாழ்வு நீரோட்டத்தையும் உனது சுயநம்பிக்கையையும் திறமையையும் பற்றி நீ என்ன எண்ணுகிறாய் என்பதை இன்று சுய அலசல் மூலம் பரிசீலனை செய். மேலும் சில உறவுகளையும் சில விடயங்களையும் மற்றவர்களை விட எதற்காகக் கூட நம்புகிறேன் என்பதையும் சோதித்துப்பார். உன்னை நீ நம்பினால் தான் பிறரை நீ நம்புவாய் என்பதைப் புரிந்து கொள்.

**நம்பிக்கையின் உண்மையான பெறுமதியையும் அதன் அர்த்தத்தையும் இன்று புரிந்து விளங்கிக் கொண்டு இன்றுமுதல் சுயநம்பிக்கையுடன் பிறரையும் நம்பி சிறப்பாக வாழப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 209

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# 24 மைல் உயரத்திலிருந்து குதித்து சாதனை படைத்த மனிதர்!

நாற்பத்திமூன்று வயதாகும் ∴பெலிக்ஸ் பாம்கார்ட்னர் இருபத்து நான்கு மைல் உயரத்திலிருந்து பூமி நோக்கி குதித்து, பத்திரமாக வந்திறங்கி சாதனை செய்திருக்கிறார். இது ஒரு உலகச் சாதனை. கீழிருந்து ஒரு ஹீலியம் பலூனில் வானம் நோக்கிச் சென்று அங்கிருந்து நியு



மெக்ஸிகோ பாலைவனத்தின் மீது பறந்து கொண்டிருந்தபோது ∴பெலிக்ஸ் வானிலிருந்து குதித்தார்.

'மேலிருந்து கீழே பார்க்கும்போதுதான் இந்த பூமியில் மனிதன் எத்தனை சிறியவன் என்று தெரிகிறது' என்று சொல்லும் ∴பெலிக்ஸ் பூமிக்கு வந்த வேகம் மணிக்கு 834 கிலோமீட்டர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒலியின் வேகத்தைத் தாண்டிய முதல் மனிதர் என்ற சாதனையையும் செய்திருக்கிறார். அது மட்டுமில்லாமல் பலூனில் 128,097 அடி உயரம் சென்ற முதல் மனிதரும் இவரே.

இவர் வானிலிருந்து குதிக்கும் காட்சி நேரடியாக இணையத்தில் ஒளிபரப்பப்பட்டது. இந்தக் காட்சிகளை இருபத்து நான்கு கமிராக்கள் மூலம் படம் பிடிக்கப்பட்டது. கீழே குதிக்கும் முன் சூடேற்றும் கருவி வேலை செய்யாததால் முகம் அருகே பனி படர்கிறது என்று தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு ∴பெலிக்ஸ் தகவல்

உளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்



Ranjan Francis
Contact
416.816.1220

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# Education

## Review Tutorials - 126

➢ **CHEMISTRY IB & 12**

**IB only**



(i)Name the above structure.
(ii) Predict whether β- elimination reaction proceeds by an $E_1$ or $E_2$ mechanism.

(G12 –A) Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.

(a) Propene (b) Propanal (c) proponoic acid
(d) 2- proponol (e) 2- bromopropane
(f) Propanone

➢ **BIOLOGY**

(G11) State viruses are not considered in any of the five-kingdom system.

(G12) Explain how does mammalian red blood cells derive energy.

➢ **MATH**

(G12) John makes a pet box by cutting off squares with sides x cm in length . The dimensions of the solid rectangle are 20cm by 30cm. The volume of the box is 1008 $cm^3$.

(i) Determine an equation that models this situation.

(ii) Determine the value of x.

➢ **PHYSICS**

(G12.A) A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?

(G12 B) A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction ( horizontally) with the speed of 52m/s.

(i)What is the impulse acts on the ball while it is contact with the bat?

**(ii)** If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

**Answer key 125**

➢ **CHEMISTRY 12 & IB**

(A ) methyl -.3-nitro benzoate
(B) 2-methyl-5-(1-methylethyl)-phenol
**(12)** $FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-}$
**(11)** Calculate the number of moles of each reactant
$K_2Cr_2O_7$= 0.9x 20 = 18g; $K_2Cr_2O_7$ = 0.061225mol
Number of moles of HCl = 50/36.46= 1.3714
Limiting reactant is $K_2Cr_2O_7$
**(ans :3x 0.061225= 0.18g)**

➢ **Physics 11**

Calculate the displacements
(i) 2000 km( N 20° E) (ii) 48000 km (N 40° E)
Find x and y components of each displacements and add.
dx = 2000 cos 70 + 4800 cos 50= 3769.4km
dy = 2000 sin 70 + 400 sin 50== 5556.4km
Use pythagorean theorem, **dr = 6714km (N 34° E).**
**$V_{ave}$=789.9 km/h (N 34° E).**

**(11 & 12)**

Initial velocity = 0 each case. Lets take the final velocities of P and Q are V and 2V and accelerations are $a_p$ and $a_q$; use $v_f^2 = v_i^2 + 2a\Delta d$ and find out $a_P$ & $a_Q$
Results $a_P = 4a_Q$ ; FOB for child P,
F net = m $a_P$ = m g sin 32; $a_P$ = g sin 32;
Therefore, $a_q$= g sin 32/4

FOB for Q results, $F_N = m_g \cos 32$

$\frac{mg \sin 32}{4} = mg \sin 32 - \mu_k . m_g . \cos 32$ ; $\frac{\sin 32}{4} = \sin 32 - \mu_k . \cos 32$

$\mu_k = 0.37$

➢ **MATH 11& 12**

**(11A)** $x(x-2)(x+2)(x^2+4)$
**(11-B)** Lets take the speed of the bus $x$ km/h

$time = \frac{distance}{speed}$ therefore $\frac{400}{x} - \frac{400}{x+10} = 2$

Solve for $x$ $(x+50)(x-40)=0$; **(speed 40km/h)**

(12. A) $(3x-1)(9x^2+3x+1)$ **(12-B)** 14

➢ **Biology**

Answer the question giving named example. ( pesticide resistance/ herbicide resistance in agriculture/ health)

**Possible benefits:** Faster than traditional methods, increased productivity, less use of chemicals,

In health; such as may cure genetic diseases, less expensive drug production, human insulin production.

**Harmful effects**: release of GMOs can spread and compete with native species, reduces genetic variability, may potentially harmful to organisms.

*Answer key 126 - next issue*

**Contact: 647 341 3975**
By Dr . A.Sri Krishnaraj PhD
**E mail: ask@ keentutoringcentre.com**

# 24 மைல்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

தந்தார். குதிக்கலாம் என்று அவர்கள் சம்மதம் சொன்ன பிறகே குதித்தார் ∴பெலிக்ஸ்.

இத்தனை வேகத்தில் கீழிறிங்கினால் மனித உடல் தாங்குமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. ஆனால் வேகமாய் கீழே இறங்கிய போது தன்னால் எதையும் உணர இயலவில்லை என்று ∴பெலிக்ஸ் கூறுகிறார்.

119,846 அடி வரை பரசூட் உதவியில்லாமல் அந்தரத்தில் விழுந்த ∴பெலிக்ஸ் அதன் பிறகு தனது பரசூட்டை விரித்து தரையிறங்கினார். மேலிருந்து அவர் கீழே வர ஒன்பது நிமிடங்கள் மூன்று விநாடிகள் ஆகியது.

சாதனையை முடித்த பின் ∴பெலிக்ஸ் கூறுகையில், இது எனது ஏழுவருட உழைப்பு, எனது மிகப்பெரும் கனவு என்று தெரிவித்தார். அடுத்து என்ன உங்களது திட்டம் என நிருபர் எழுப்பிய கேள்விக்கு, அடுத்த தலைமுறைக்கு இன்ஸ்பிரேஷனாக இருக்க விரும்புகிறேன். நான் உங்கள் அச்சத்தை போக்கியுள்ளேன். இனி துணிந்து களமிறங்குங்கள் இளைஞர்களே என்றார்.

∴பெலிக்ஸ் பௌக்மார்ட்னரின் உலக சாதனைகள்:

1. ∴பெலிக்ஸ் குதித்தபோது ஒரு கட்டத்தில் அவர் பயணித்து கொண்டிருந்த அதியுயர் வேகம் 1,342 km/h என உறுதிப்படுத்தப்பட்டதால், தன்னிச்சையாக விழுதல் (Free Fall) மூலம் ஒலி யின் வேகத்தை கடந்த முதல் மனிதன்.
2. உலகின் அதி உயரத்திலிருந்து குதித்த மனிதர் (128,097 அடிக்கு).
3. பரசூட் அல்லது பலூனில் அதிக உயரத்திற்கு சென்ற மனிதன் (128,097 அடிக்கு).
4. உலகில் தனி ஒரு மனிதருக்காக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய பலூன் (550 அடி உயரம், 30 மில்லியன் கனஅடி).

# பனம் பணியாரம்



யாழ்ப்பாணத்து உணவு வகைகளில் தனித்துவமானது இந்த பனம் பணியாரமாகும். நன்கு பழுத்த பனம் பழத்தை எடுத்து தோல் நீக்கி பினைந்தெடுத்த கூழை சீனியும் கோதுமை மாவும் கலந்து இறுக்கமான பதமாக எடுத்து சிறு சிறு உருண்டைகளாக கொதிக்கும் எண்ணெயில் போட்டு பனம் பணியாரம் செய்யப்படுகிறது.

சுட்ட பணியாரத்தை உடனே சாப்பிட்டால் ஒரு கயர்ப்பு தன்மையாக இருக்கும். நல்லாக ஆறவிட்டபின் அல்லது அடுத்த நாள் சாப்பிட்டால் இன்னும் சுவையாக இருக்கும். இது எல்லாம் யாழ்ப்பாணத்தின் தனிச்சிறப்பானது மட்டுமல்ல உடல் ஆரோக்கியமானதும்

**50**
**PARTY HALL**
**EVENT CENTRE**
**MEETING PLACE**
**AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*
தொடர்புகளுக்கு: ***416.917.6883***

# பழந்தமிழ் இலக்கியக் காதல் காட்சி

சங்க இலக்கியத்தில் காதல் பற்றிய பாடல்கள் அதிகம். தலைமகள், தலைமகன் இருவரதும் காதலை மட்டுமன்றி அவர்களின் எண்ண அலைகள், நடத்தைகள், பிரிவுத்துயர், ஊடல், சேரல் என்பனபற்றிய பொருட்கள் பொதிந்தனவாக சங்கப் புலவர்கள் இயற்கையோடு ஒட்டி செய்யுட்களை யாத்துள்ளனர். காதல் நிலைமைகளுக்கும் காட்சிகளுக்கும் இயற்கையின் வனப்பு, தோற்றம் என்பன முக்கியமானவையாக உள்ளுறை உவமை நிறைந்ததாக தங்கள் கருப்பொருட்களை ஆக்கி வெளிப்படுத்தி உள்ளனர் சங்கப்புலவர்கள்.

பழந்தமிழர் பண்பாட்டில் தலைமகள் இல்லத்தில் இருக்க விலைமகளை நாடிச் செல்லும் நடத்தை ஆடவரிடம் காணப்பட்டுள்ளது. 'கிளியைப் போல பெண்டாட்டி இருந்தாலும் காகத்தைக் போலாவது ஒரு வைப்பாட்டி தேவை' என்பது இன்றும் காமத்தில் ஈடுபாடு மிக்கவர்களால் பேசப்படும் ஒரு வார்த்தையாகவே உள்ளது. சங்க இலக்கியங்களில் பரத்தைபால் செல்வது அரசன் முதல் சாதாரண பொருள் வளம் மிக்கவர்களது வழக்கமாகவே காட்டப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் கண்ணகியை விடுத்து பரத்தையர் குலத்துதித்த மாதவிபால் மனதைப் பறிகொடுத்துத் தன்நிலை மறந்திருந்தான் எனப்பாடியுள்ளார் என்றால் பரத்தையர்பால் செல்லுதல் அக்காலத்து வழக்காறாயிருந்துள்ளமை வெளிப்படை.



இவ்விதம் பரத்தையர் பால் சென்று திரும்பி வரும் தலைவன் மீது கோபம் கொண்டு அவனோடு உறவாட மறுப்பது இல்லத் தலைவியரின் செயலா-கச் சித்தரிக்கப்படு கின்றது. இந்த ஊடல் காட்சி உண்மையிலே யே இலக்கியத்தில் சுவை மிக்கதாகக் காணப்படுகின்றது.

பக்தி மரபிலும் வள்ளி - தெய்வானையை மணந்த கந்தன் வள்ள்ளியிடம் சென்று திரும்பி வரும்போது கதவைத் தாழிட்டு திறக்காமல் ஊடல் கொண்டிருக்கும் தெய்வானையிடம் கதவைத் திறக்கும்படி மன்றாடும் காட்சிகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவனை ஊடுகின்றாள் தலைவி. அவர்களுக்கு இடையிலே தோழி இருவரதும் ஊடலைப் போக்க இருவரையும் சமாதனப்படுத்திச் சேரவைக்கின்றாள்.

ஒருஉநீ எம்கூந்தல் கொள்ளல் - யாம்நின்னை
வெரூஉதும் காணும் கடை- எனத் தலைவி தலைவனோடு ஊடிக் கொண்டுரைக்க அதனைச் செவியுற்ற தலைவனோ 'தெரிஇழாய்! செய்தவறு இல்வழி யாங்குச் சினவுவாய் மெய்பிரிந்து, அன்னவர் மாட்டு? என்றுரைக்கின்றான். செய்த தவறு என்று எப்படிக் கோபங்கொள்வாய். உடல் பிரிந்து எங்கனம் என்று உணராயோ என்று அவன் பரத்தைபால் செல்லவில்லை எனது உயில் உன்னிடத்தேயே என்றுரைக்கின்றான். அதற்குத் தலைவியோ

எடா! நினக்குத் தவறுண்டோ? நீவீடு பெற்றாய்
இமைப்பின் இதழ்மறைபுஆங்கே கெடுதி
நிலைப்பால் அறியினும் நின்நொந்து நின்னைப்
புலப்பார் உடையர் தவறு!

என்ற சினங்கொள்ளுகின்றாள் தன்னை விடுத்துப் பரத்தையிடம் சென்றமைக்காக. ஆனால் தலைமகனோ
அணைத்தோளாய்! தீயாரைப்போலத் திறன் இன்று உடற்றுதி
காயும் தவறிலேன் யான்

என்று நான் உன்னைக் கோப்பிக்க மாட்டேன் நீயோ எதனையும் அறியாதவளாய் கோபம் கொள்ளலாமா? என்று தனது



**- த. சிவபாலு -**

அன்புக்குரியாளை தேற்றுகின்றான். இவர்களுக்கிடையே தோழி வந்து சமாதனம் செய்யும் ஊடல் காமத்திற்கின்பம் என்பதனை அவர்கள் உணர்ந்துகொள்ள வைக்கின்றாள். ஊடியவர்கள் கூடுகின்றனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்கின்றதோ காட்சி.




நகைச்சுவைத் தொடர் 256

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்






காக்க காக்க கதிர்வேல் காக்க!

புதிய கந்தசஸ்டி கவச சி.டி.யை ரூபி கொண்டு வந்து இந்தாங்கோ மா மா. ரூபன் நேற்று கொம்பியூட்டரிலை உங்களுக்காக டவுன்லோட் பண்ணினவர் என்று கொடுக்க

ராசம்மா கடைக்கண்ணால் உலகரைப்பார்த்தா.
சிரிப்பதா இல்லையா என மனதுள் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.
முக்கிய தினங்கள் வரும்போது உலகருக்கு என்ன தேவையென்று ரூபனுக்கும் ரூபிக்கும் தெரியும்.



பொருளாதாரத்தில் பலத்தை உடைக்க முடியாதென உலகே நம்பியிருக்கும் அமெரிக்கா
பலம் உடையாவிட்டாலும் வந்த புயலால் பாலங்கள் உடைந்துவிட்டன.
உடையாத பலமும் உடைந்த பாலங்களும்.

கடவுள் இருக்கிறாரா? அது மூடநம்பிக்கையென அவ்வப்போது சிலர் கூறக் கேட்டதுண்டு. ஆனால் சான்டி புயலின் வருகை!
God bless America!



எங்கும் சொற்பொழிவு பேச்சை ஆரம்பிக்கிறார்கள்.
எல்லோரையும் கடவுள் காப்பாற்ற பிரார்த்திப்போம் என தொலைக்காட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் அறிக்கை விடுகிறார்.

நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே, அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா?
திருவிளையாடல் படப்பாடல் உலகருக்கு மனதுள் ஸ்ரீறியோவில் கேட்டதுபோல் ஒலித்தது.



பஞ்சபூதங்கள் ஒன்றாகச் சேர்ந்து குத்தாட்டம் ஆடுகின்றன.
நிலம் வெடிக்கிறது. (பூகம்பம்)
நீர் எல்லைமீறிப் பாய்கிறது. (வெள்ளப்பெருக்கு)
ஆங்காங்கே கட்டடங்கள் எரிகின்றன. (தீ)
காற்று 150 கி.மீ. வேகத்தில் வீசுகிறது. (சூறாவழி)
வானம் சினம்கொண்டு புயலாக அடிக்கிறது.



உலகின் பலபாகங்களில் மின்சாரம் இல்லை. இருந்த வீடில்லை, சொத்துக்கள் சேதம். இலட்சக்கணக்கான மக்களுக்கு உணவு இருந்தும் உரியமுறையிலில்லை.



போர் - மனிதன் தனக்கு தேவையில்லாதவனையும் சொத்துக்களையும் குண்டுபோட்டு அழிக்கிறான்.



கடவுள் பாரபட்சமின்றி தனது
அகோரக்கண்ணைத் திறக்கிறார்.
அவனின்றி அணுவும் அசையாது.

கையில் மெழுகுதிரியும் பிஸ்கட்பெட்டியும் பற்றிபோட்ட ரேடியோவுடனும்



ஆட்டிலறி அன்னம்மா வர ஒரு பிளாஸ்ரிக் பாக்கினுள் முறுக்கு, எள்ளுப்பாகு, அது இது என அடுக்கிக்கொண்டு வந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகண்ணை தற்சமயம் கறன்ற் நிண்டாலும் முறுக்கை சாப்பிடாதேங்கோ உங்கடை (கட்டுப்) பல்லுக்கு கூடாது என சிரித்துக் கொண்டு சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.

அதுசரி கறன்ற் இல்லாட்டி ஒபாமாவுக்கு வோட்போடுறாக்கள் என்ன செய்வினம் என செக்கண்ட்புளோர் கேட்க திடீரென ரி.வி.யின் சத்தம் நின்றது. ரேடியோ சத்தம் நின்றது. ஆ! கறன்ற் நின்றுவிட்டது.

மெழுகுதிரியைக் கொழுத்தி கையிலிருந்த ரேடியோவுக்கு பற்றியைப்போட்டதும் “ஒளிமயமான எதிர்காலம்” பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. மெழுகுதிரி வெளிச்சத்தில் உலகர் பழக்கதோசத்தில் ரி.வி. றிமோட்டைத் தேடிக்கொண்டிருந்தார்.



ஊரில் பூசணிக்காயை வெட்டி குங்குமம் பூசி சந்திக்குச்சந்தி வைத்திருப்பார்கள்.

பெற்றோரும் பெரியோரும் சொன்னதையே நாம் செய்து வருகிறோம். சில விடயங்களின் விளக்கத்தை கால வெள்ளத்தில் அறிகிறோம். சில விடயங்களில் விளக்கமில்லாமலே இருக்கின்றோம். அதற்காக அது சரி பிழையென வாதிட நாம் தயாராக இல்லை.

கழிப்பு கழிப்பதென சந்தியில் உணவையும் படைத்து நீத்துப்பூசணிக்காயை வெட்டி குங்குமம் பூசி வைக்கிறோம். (வீதிகளில் லைற் இல்லாத காலத்தில் உலகர் தனது நண்பர் குழாமுடன் செக்கண்ட்சோ பார்த்துவிட்டு சந்தியிலுள்ள கழிப்புக் கழித்த பூசணிக்காயைப் பார்த்துவிட்டு (பயத்தில்) விடியவிடிய தேவாரம் பாடிக்கொண்டே படுத்திருந்த நாட்கள் பல. அதைவிட்டு கனடா வந்து ஹொலோவினுக்கு ரேடியோ ரெலிவிசன்களில வரும் கதைகளைக் கேட்டால் அதைவிடப் பயங்கரமாக இருக்கும்.



பூசணிக்காயின் அளவும் நிறமும் வேறாக இருந்தாலும் பயமும் கதைகளும் ஒன்றுதான்.




நவம்பர் 1… 15

1. அறிஞர் பெர்னாட்சா நினைவுதினம்.
2. நேரமாற்றம் ……ஐப்பசிவெள்ளி
3. திருமுருக கிருபானந்த வாரியார் நினைவுதினம்

ஒருவனுக்கு எத்தனை மாட மாளிகைகள் இருப்பினும் அவன் படுக்குமிடம் ஐந்தரை அடி நீளந்தானே. ஒருவனுக்கு எத்தனை ஏக்கர் நிலங்களிருப்பினும் அவன் உண்பது காற்படியரிசிதானே! எத்தனை நூல் துணி ஆலைகள் இருப்பினும் அவன் உடுப்பது நான்கு முழந்தானே! அதனால் போதும் என்ற மனமே ஒருவனுக்கு நிம்மதியை அளிக்கும். அதை ஒவ்வொரு மனிதரும் புரிந்து கொள்ள வேண்டும்.

11. Rememberence day
12. தீபாவளி
14. கந்தஷஸ்டி விரதாரம்பம்







# யாழ்ப்பாணத்தில் ஆட்டோ ஓட்டும் புதுமைப் பெண்கள்

சமூகத்தில் ஏற்படும் சில மாற்றங்கள் புரட்சிகளாகவும் முன்மாதிரிகளாகவும் மாறி விடுகின்றன. அப்படியானதொரு புதுமையான சமுதாய மாற்றத்தையும் சமூகவியல் பார்வையையும் ஏற்படுத்தியுள்ளது யாழ்ப்பாணத்தில் பெண்கள் ஆட்டோ ஓட்டும் சுயதொழில் முயற்சி. பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணின் வளர்ச்சி காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருவதை காண முடிகின்றது.

1990 களில் நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின்போது ஆணுக்கு நிகராகப் பெண்கள் செயற்படத் தொடக்கியதும் தன் பார்வையை மாற்றிக்கொள்ள தொடங்கியது. அவ்வாறே யுத்தத்திற்குப் பின்னரான இக்காலகட்டத்தில் பெண்கள் ஆட்டோ ஓட்டும் சுயதொழில் முயற்சியிலும் இறங்கியுள்ளார்கள்.

பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனம் பெண்கள் ஆட்டோ ஓட்டும் தொழிலைச் செய்து சுயமாக வாழ்க்கையில் முன்னேறிக்கொள்ளும் வழிவகையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கணவனால் கைவிடப்பட்ட குடும்பப் பெண்கள், மிக வறுமையால் வாடும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், தனித்து வாழும் பெண்கள் போன்றவர்களுள் 15 பேரைத் தெரிவு செய்து இப்புதிய தொழில் முயற்சியை வழங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இவ் உதவி கிடைப்பதற்கு வழிகாட்டியாக நின்று செயற்பட்ட யாழ். பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரும் மாவட்ட இணைப்பாளருமான செல்வி. உதயனி தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், குடும்ப வறுமையால் தமது தேவைகளையே நிறைவேற்றிக் கொள்ளமுடியாமல் பரிதவிக்கும் பெண்களும் நிறையவே உள்ளனர். இப்படியானவர்கள் எமது பிரதேச செயலகங்களை அணுகி தமது வாழ்வை மேம்படுத்துவதற்கேற்ப ஏதாவது உதவிகளைப் பெற்றுத்தாருங்கள் எனக்கேட்டார்கள். நாம் இவர்களை சந்தித்துப் பேசும்போது உங்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டபோது. நாங்கள் சுயமாக நின்று உழைக்கக் கூடிய ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கித் தாருங்கள் என்று கூறினார்கள்.

அப்போது நாம் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்ய விருப்பமா என்று கேட்டோம். ஆரம்பத்தில் பலர் அதற்குத் தயக்கம் காட்டினார்கள். இறுதியாக 15 பேர் அதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட 15 பேருக்கும் பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் உதவியுடன் 6 மாதப் பயிற்சிகளை வழங்கினோம்.

அத்துடன் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான பயிற்சியையும் பெறுவதற்கு ஒழுங்கு செய்து கொடுத்தோம். 10 பெண்கள் முழுமையான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார்கள். அதன் பின்னர் அந் நிறுவனத்தினால் கடனடிப்படையில் இவர்களுக்கு ஆட்டோ வழங்கப்பட்டது. இன்று வரை அவர்கள் அனைவருமே ஆட்டோ மூலம் தொழில்செய்து தமது குடும்பத்தையும் பிள்ளைகளின் படிப்புச் செலவையும் பார்த்து வருகிறார்கள்.


கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது
Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence.......
Dr. நளினி சுதர்சன் DDS
Family and Cosmetic Dentistry
உங்கள் அனைத்து பற் சிகிச்சைத் தேவைகளுக்கு நாடுங்கள்
FREE
15 Mins in office Teeth Whitening
Oral Cancer Screening
Cosmetic & Implant
Consultation and Advice
• State-of-Art-Dental Technology
• All your dental needs
• Open 7 days
• Always accepting new and Emergency patients
• We speak English, Tamil, Tagalog, Urdu, Cantonese, Hindi & Kannada
• All type of insurance accepted (Welfare, ODSP, Cinot & Healthy Smile)
Major mackenzie Rd. E.
Bur Oak Ave.
16th Ave.
Hwy 7
9th Line
Markham Rd.
(Hwy 48)
NS
Sedation Dentistry
Sedation dentistry program was designed to offer fearful patients a safe, comfortable means of receiving the treatment they need.
Treats all age groups, including children
All aspects of dentistry practiced
Education & Prevention
Open Seven Days A Week
www.MarkhamNSDental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM


Bayview/John
Bedrooms: 3 Washrooms: 2 Markham $439,900
Bayview / Royal Orchard
Bedrooms: 3 Washrooms:2 Markham $449,900
Ellesmere & Scar. Golf Club
Bedrooms: 3 Washrooms: 2 Toronto $379,900
Markham/Lawrence
Bedrooms: 3+2 Washrooms: 2 Toronto $389,000
Neilson/Hwy 401
Bedrooms: 3 Washrooms: 3 Toronto $399,000
Bayly St / Shoal Point
Bedrooms: 3 Washrooms: 3 Ajax $354,900
Audley / Taunton
Bedrooms: 3 Washrooms: 3 Ajax $359,800
Church St. & Meekings
Bedrooms: 4 Washrooms: 4 Ajax $389,900
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA
Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963
Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Designed by: Qcopy.ca

MORTGAGE NEEDS....



Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
TD MCAP
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612
* New Mortgages * Refinance * Second Mortgages
Call me for any Mortgage Financing questions?



Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



Low Mortgage Rates
TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments

NEILSON MCLEVIN



Bedrooms: 2
Washrooms: 2
$169,900

BRAMPTON



Bedrooms: 3
Washrooms: 3
Bsmt: Finished
$399,900

MCCOWAN & HWY401



Bedrooms: 2
Washrooms: 2
$229,900

HWY 06 HALDIMAND



Restaurant + Motel for sale.
$579,000

MORNINGSIDE SHEPPARED



Bedrooms : 4 + 1
Washrooms: 4
$589,9000

QUEEN CREDITVIEW




Bedrooms : 4+1
Washrooms: 6
$1,187,500



RE/MAX Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Real Estate / Principal Mortgage Broker
Specialized in bank sale homes
Having difficulty of getting your mortgage
Please Contact me
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

REAL ESTATE
• RESIDENTIAL • INVESTMENTS
வீடு என்பது உங்கள் கனவு! தாயகம் என்பது உங்கள் நினைவு!!
இவை இரண்டையும் உங்கள் கண் முன் கொண்டுவருவேன்.
இலங்கை சென்றுவர இருவருக்கு
இலவச விமானச்சீட்டு
என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு மட்டும் இரண்டு பேருக்கு விமானச்சீட்டு. இலங்கை சென்றுவர எந்த வித சீட்டு குலுக்கலுமின்றி வழங்கப்படும்.
இந்த சலுகை November 20, 2012 திகதி வரை என்னிடம் வீடு வாங்குபவருக்கு மட்டும்.



"உங்கள் கண் உள் இருக்கும் கனவுகளை உங்கள் கண்முன் கொண்டு வருவேன் உங்களுக்கு அதிஷ்டம் இல்லை என்று கவலையா! என்னிடம் வந்தாலே உங்களுக்கு அதிஷ்டம் தான்"
Lourdson Antonipillai (B.sc)
Sales Representative
Dir: 416-738-8824
HomeLife/Future Realty Inc., Brokerage*
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
205- 7 Eastvale Drive, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated